Reg. No. M. 2911.

ஸ்ரீமுக-வைகாசி

1933-வரு மே-ஜூன்மீ

மாலை 5. மணி 2.

ஓர் செந்தமிழ்

மாதப் பத்திரிகை.

ரா. நாராயணஸ்வாமி,
ஆசிரியர்.

ரா. சுப்ரமண்யம்,
பொறுப்பாசிரியர்.

பிரசுராலயம்:-

உத்தமபாளையம்,
மதுரை ஜில்லா.

OFFICE OF THE REGISTRAR OF B
12 AUG 1933
MADRAS

mall, N29BH
N33. 5. 2
197890

OFFICE ... OF BOOKS
12 AUG 1933
MADRAS

"பாரதி"

சிறந்த செந்தமிழ் மாதப்பத்திரிகை

4-ம் ஆண்டு முடிவுற்று ஸ்ரீமுக சித்திரை முதல்
5-ம் ஆண்டு ஆரம்பம்.

சுதந்திரம் கொண்டு சமத்வம்பற்றிச் சகோதரத்வம் ஏற்று
குறைந்த சந்தாவிலே நிறைந்த விஷயங்களால் உயர்ந்த
மாஸிகையாய் ஜாதி, மத, கட்சி பேதங்களற்று
இந்தியரனைவரும் பாரத மாதாவின் மக்க
ளென்ற மேலான கொள்கையுடன்
தேசாபி விருத்தியை முக்கிய முதல் நோக்கமாகக்கொண்டு
தேச விடுதலைக்காக உழைக்கும்
தேசீய மணங் கமழும் செந்தமிழ் மாஸிகை

"பாரதி" ஒன்றே யாகும்.

உடனே சந்தாதாரர்களாய்ச் சேருங்கள்.
உங்கள் நண்பர்களுக்கும் இதனைப்பற்றி
அறிக்கை செய்து, சந்தாதாரர்களாய்ச்
சேர்த்துக் கொடுங்கள்.

சந்தா விபரம்:

உள் நாடுகளுக்கு வருடத்திற்கு ரூ **2/=** அல்லது **3** ஷிலிங்
வெளி நாடுகளுக்கு " ரூ **3/=** " **5** "

போஷக சந்தா குறைந்தது ரூ **100/=**

தனிப் பிரதி விலை அணு 3. அயல் நாடு அணு 4.
மாதிரிப் பிரதி வேண்டுவோர் 3 அணு ஸ்டாம்பு அனுப்பவும்.
நகரங்கள்தோறும் ஏஜெண்டுகள் தேவை.
இலங்கை, பர்மா, மலேயா, சிங்கப்பூர் முதலிய நாடுகளிலும்
ஏஜெண்டுகளே ஏற்றுக்கொள்ளப்படுகின்றது.

விபரத்திற்கு 2 அணு ஸ்டாம்புடன் எழுதவும்.

பொறுப்பாளர்,

"பாரதி" ஆலயம்,
உத்தமபாளையம், மதுரை ஜில்லா.



சிறந்த செந்தமிழ் மாலிகை.

பொருள் அடக்கம்.

மாலை **5**. ஸ்ரீமுக௵ வைகாசி௴ மணி **2**.

தொடர் எண். பக்கம்.

1. நாட்டு மொழி—திரு. பண்டித ஊ. சா. வேங்கடராம ஐயர் அவர்கள் ... 81
2. பாக்கள்—திரு. பண்டித தேசிக விநாயகம் பிள்ளை அவர்கள் 83
3. ஸ்ரீனிவாச இராமானுஜம், **F. R. S.**—திரு. **K. G** கிருஷ்ணன் அவர்கள், B. Sc., (Hons.) 84
4. ஓர் வீர பத்திராசிரியர்தம் அரும் பெரும் சக்தி—திரு. **K.** வெங்கட ராவ் அவர்கள் ... 91
5. மன்னன் (மலை நாட்டான்)—திரு. **S.** வடிவேல் அவர்கள் ... 98
6. இந்திய நாகரீகத்தின் உற்பத்தி ஸ்தானம்—திரு. **O. P.** தேசிகன் அவர்கள் ... 107
7. இந்திய மாதா வேண்டுவதென்ன? (மொழிபெயர்ப்பு.) ... 115
8. அல்லா ராம்—திரு. **S. V.** வெங்கடநாராயண சர்மா அவர்கள், B. A., B. L. ... 117
9. ஹிந்திப் பிரசாரமும் தமிழபி விருத்தியும்—திரு. ரா. ஸ்ரீகண்டன் அவர்கள், M. A. ... 132
10. அன்பு—ஸ்ரீமதி **P. V.** சரோஜினி தேவி அவர்கள் ... 137
11. விருந்துகள்—ஜனப் **S.** சையது அஹமது அவர்கள் ... 143
12. ஸ்ரீ ராமகிருஷ்ண பரம ஹம்ச தேவர்—திரு. **T. S.** அவனாசிலிங்கம் அவர்கள், B. A., B. L. 146
13. பத்திரிகையின் வன்மையும் அதன் அவசியமும்—திரு. மு. செல்லப்ப நாயனார் அவர்கள் ... 150
14. "உனை யொருத்திப் போட்டாளே வேலையற்றுப் போய்" ... 152
15. ஆசிரியக் குறிப்புகள்— 155

ஓர் செந்தமிழ் மாதப் பத்திரிகை.

எல்லாரும் ஓர் குலம், எல்லாரும் ஓர் இனம்,
எல்லாரும் இந்தியா மக்கள்;
எல்லாரும் ஓர் நிறை, எல்லாரும் ஓர் விலை,
எல்லாரும் இந்நாட்டு மன்னர்.

ரா. நாராயணஸ்வாமி, ஆசிரியர். ரா. சுப்ரமண்யம், பொறுப்பாசிரியர்.

மாலை **5** | ஸ்ரீமுக-வைகாசி 1933௵ மே-ஜூன்௴ | மணி **2**

நாட்டு மொழி

(சிந்து)

திரு. பண்டித ஊ. சா. வேங்கடராம ஐயர் அவர்கள்.

உலகம் பலபிரி வாகும்—அவை
ஒவ்வொன்றும் ஒவ்வொரு நாடாம். **(1)**
நாடு செழிக்கத் துணையாப்—பல
நல்ல வழியுண் டவற்றுள். **(2)**
நாட்டு மொழியின் பெருக்கே—முன்னர்
நாடுந் தரத்தநாங் காணீர். **(3)**
அந்த மொழியே இயல்பாய்—மக்கள்
யாவர்க்கு மொப்ப விளங்கும். **(4)**
தாயிடங் கற்றதம் மொழியே—மற்றும்
தந்தையைக் கண்டதம் மொழியே. **(5)**
பிள்ளைப் பருவத் தினிப்பாம்—சிறு
பேச்செனும் மழலையம் மொழியே. **(6)**
முதலிற் பிறந்ததம் மொழியே—எண்ணம்
முற்றும் விளக்குமம் மொழியே. **(7)**

ஆபத்திற் காப்பதம் மொழியே—யாண்டும்
அன்னை வளர்ப்பதம் மொழியே (8)
மனமொன்று பட்டு மகிழ்தற்—குற்ற
மாதிடங் கொண்டதம் மொழியே. (9)
தேசமக் களொன்று சேரத்—தினம்
செப்பச் சிறந்ததம் மொழியே. (10)
தேசாபி மானங்கொள் சீலர்—முன்னர்ச்
சீர்செயத் தக்கதம் மொழியே. (11)
ஜர்மனி தேசத்து ராணி—தன்னைச்
சின்னஞ் சிறியவோர் சிறுமி. (12)
முன்னர்ப் பணிந்து வரமாய்ப்—பெற்று
முற்ற வளர்த்ததம் மொழியே. (13)
பெல்ஜியம் தன்னில் நடந்த—பெரும்
போரில் பிரான்ஸில் புகுந்தே (14)
அழித்து வரும்ஜர்மன் வீரர்—தம்மை
அடக்கியாள் உரிமையைப் பூண்ட (15)
படைத்தலை வரையும் பணிந்தே—பொருள்
பவுன்கொடுத்துப் பெறும் வண்ணம் (16)
செய்து சிறந்ததம் மொழியே—என்றும்
சிந்தைக் கினிப்பதம் மொழியே. (17)
வேற்றுநா டொன்றைப் பிடிக்க—முன்னும்
வேந்தர்தம் நாட்டு மொழியை. (18)
நாட்டிமுன் னர்ப்பிடி பட்ட—அந்த
நாட்டின் மொழியை அழிப்பர். (19)
என்ப தரசியற் சூழ்ச்சி—இதை
எவருங் காணலா மெங்கும். (20)
நம்முயிர்த் தாய்மொழி யாகும்—துங்க
நற்றமிழ் மொழியின் நிலையும் (21)
அங்ஙன மாகிய தறிவீர்—அதை
அறிந்தும் வறிதிருக் கின்றீர். (22)
தாய்மொழிப் பற்றிது வாமோ?—நிலத்
தாய்த்திருத் தொண்டிது வாமோ? (23)
ஆதலின் சோதரீர் வம்மின்—நுந்தம்
அருமை மொழியை வளர்மின். (24)
எல்லா நலமும் பெறலாம்—என்றும்
ஏற்றம்பெற் றின்புற லாமே. (25)

பாக்கள். *

பொன்னொளியும் மரகதத்தின் பொலிவும் செந்நெற்
புலங்காட்ட அதன்மீது நிழலை வீசும்
பன்னரிய சரற்கால மேகந்தன்னைப்
பரிதி விரைந்தெழுந்தோடி வெருட்டிச் செல்லத்
தன்னைமறந் தொளிமயக்கில் மயங்கி வண்டு
சாருமலர்த் தேன்மறந்து சுழன்று பாட
மன்னுகுளம் நதிக்கரையில் வாழுந் தாரா
மனங் களித்துக் குரலெழுப்பித் திரியுதம்மா 1

நீல நெடுவான் முகட்டைத் தாக்கி நிற்போம்
நிரந்தோடி வெளியிடத்தைக் கொள்ளை கொள்வோம்
வேலை யின்று காலையெதும் செய்ய வேண்டாம்
வீட்டினுக்கு யாவருமே திரும்ப வேண்டாம்
மேலெழுந்த பெருவெள்ள நுரையே போல
விளங்கு மெழிற்சிரிப் பெங்கும் மிதக்குதம்மா
சீலமிகு சோதரரே! கூடி யிங்கு
தெம்மாங்கு பாடி விளையாடு வோமே. 2

விரித்துவிடும் பாயினைக் காற்றசைத்த தோடம்
விரைந்து குதித் தழகுபெறச் செல்லுதையா
பெருத்த நிதியிருக்கு மிடம்பாடக் கேட்டேன்
பெறும்வழிக ளறிந்தாசை பெரிதும் கொண்டேன்
திருத்தமுறச் சுடரொளி தன்முகத்தில் வீசத்
திரண்டுபுயல் பின்வரமீ காமன் நின்றான்
கருத்தொ டெதைப்பாடுவன் யான்?களிப்பி லொன்றாய்க்
கண்ணீரும் புஞ்சிரிப்பும் கலந்த தையா. 3

உள்ளமதை ஆகாயம் பரவ விட்டேன்
உன்கரமும் என்கனவில் தீண்டப் பெற்றேன்
மெள்ளவுன் றன் முகமறைக்கும் திரையை நீக்கி
விழிகளையான் கண்டுதொழக் கருணை செய்வாய்
கள்ளொழுகு வனத்திலெழு மிசையூ டெம்மைக்
களிப்பொடுநீ வரவேற்கும் குறிப் புணர்ந்தேன்
வள்ளலே நின் திருக் கழலின்னொலி யென்னுள்ளம்
மலிய நிறைந்தானந்த மளிக்குதையா. 4

—பண்டித தேசிக விநாயகம் பிள்ளை

* கவிச் சக்கிரவர்த்தி ரவீந்திரநாது பாக்களின் மொழி பெயர்ப்பு.

ஸ்ரீனிவாச இராமானுஜம், F. R. S.,

(தமிழ் நாட்டுக் கணித நிபுணர்.)

திரு. K. G. கிருஷ்ணன் அவர்கள், B. Sc., (Hons.)



கீழ் நாட்டின் நற்றவப் பயனாய்ப் புண்ணிய பூமியாம் நம் பாரத நாட்டில் பல பெரியோர்கள் அவ்வப்போது தோன்றியுள்ளார்கள். பொருள் பெற்ற வள்ளல்களையும், அருள் பெற்ற புலவர்களையும், வீரக் கலையுடன் விளங்கும் வீரர்களையும், அறிவிற் சிறந்த அறிஞர்களையும், உலகம் போற்றும் ஆராய்ச்சியாளர்களையும், அரசியல் நிபுணர்களையும் தோற்றுவித்த பெருமை நமது பாரத நாட்டிற்கே உளது. தர்க்க ஞானத்திலும், விஞ்ஞான ஆராய்ச்சிகளிலும், அறிஞர் அனைவரும் பிரமித்துப் போகக்கூடிய உலக அறிவிற் கெட்டாத அபூர்வ, மகத்தான காரியங்களையும், அருஞ் செயல்களையும் பல இன்னல்களி னூடே ஊண், உறக்கமின்றி, தகுந்த உதவியின்றி இரவு பகல் கண்ணுஞ்சாது, உழை உழையென உழைத்துச் செய்தும் தகுந்த சன்மானமும், பெயரும், கீர்த்தியுமின்றி நம் நாட்டில் மறைந்தனர் பலர்.

உலகிற்கு அறநெறி போதித்து புத்துயி ரளித்து ஒளி பரப்பிச் சென்ற சுவாமி விவேகானந்தரின் வீர எழுச்சி பெற்ற பரிசுத்த வாழ்வும், உலகிற் பரவி நிற்கும் மிருக பலத்தை அஹிம்சையால் வென்று புதிய சகாப்தத்தை தோற்றுவித்துள்ள அரசியல் முனிவர் மகாத்மா காந்தியின் வாழ்வும், விஞ்ஞான சாஸ்திர உலகிற்குப் புதுமையைப் போதித்துப் புத்துயிரளித்த சர். ஜே. ஸி. போஸ், சர். பி. ஸி. ராய், சர். ஸி வி. இராமன் போன்ற சாஸ்திர நிபுணர்களும், இயற்கைக் கவியின்பம் சர் ரவீந்திரநாத் தாகூர், சர். முகமத் இக்பால் முதலிய இவ்விருபதாம் நூற்றாண்டின் உலகப் பெரியார்களும் நிறைந்த நம் நாட்டில், தமிழ் நாட்டு அந்தணர் குடியிலே அவதரித்துத் தகுந்த கல்வியின்றி, ஆதரவின்றி கணித விற்பன்னராய்த் தோன்றிக் குடத்திலிட்ட தீபம்போலிருந்து திடீரென்று பீஜ கணித சாஸ்திரத்தில் ஒப்புயர்வற்றவராய் உலகம் போற்ற, உயர்ந்த குன்றின் மேலிட்ட தீபம்போல் விளங்கவந்த காலத்தில் அந்தோ! நம் பாரத தேவிக் கேற்பட்ட சாபப் பயனாய், அவள் அடிவயி றெரிய,

கண்ணீர் சொரிய தன் இளம் பிராயத்திலே, முப்பத்திமூன்றும் வயதினிலே மறைந்தனன் நம் கணித வேந்தன் ஸ்ரீனிவாச இராமானுஜம்.

சிறு பிராயத்திலேயே நிபுணத்துவம் பெற்று மறைந்த இப் பெரியாரின் சரித்திரம் சுருக்கமானதானாலும், முழுவதும் விடா முயற்சியை யுடையது. ஆகவே அதனை இவண் விளக்குவாம்.

பிறப்பும் படிப்பும்

இராமானுஜம் 1887-ம் வருடம் டிசம்பர் மாதம் தென்னிந்தியாவில் ஈரோட் என்ற ஊரில் அந்தணர் மரபில் அவதரித்தார். இவருடைய தந்தை ஜவுளிக் கடையில் சாதாரண குமாஸ்தா வேலை பார்த்துவந்தார். இவருடைய தாயாரும் ஓர் சிறிய நியாய ஸ்தல குமாஸ்தாவின் குமாரத்தி யாவர். இவ்வாறே இவர்கள் மூதாதைகளும் எளிய வாழ்க்கையை யுடையவர்களா யிருந்தனர். ஆகவே இராமானுஜம் கணித நிபுணத்துவம் வாய்ந்ததற்கு இவருடைய குடும்பத்தின் கல்வி உயர் நிலையையோ அல்லது செல்வத்தின் உயர் நிலையையோ பொறுத்தம் இல்லாதிருந்தது என்று வெட்டவெளிச்சம்.

இராமானுஜம் முதலாக கும்பகோணம், "டவுன்" உயர்தரப் பாடசாலையில் கல்வி பயில ஆரம்பித்தார். இவர் இவண் பயிலுங்கால் வெகு அடக்கமாகவும், சதா சிந்தனையுடனுங் காணப்படுவார். மற்ற பிள்ளைகளைப் போல ஆடல் பாடல்களுக் கிடங் கொடாமல் சமயம் ஏற்பட்ட காலத்தில் தனியாக இருந்து உற்றதை உற்று நோக்கிய வண்ணமாகவும், மற்றவைகளைக் கனிக்காது சிற்சில சமயம் மெய் மறந்தும் தோன்றியதை அப்பொழுது யாரும்—அவர் தாய் தந்தைகளும் அறியவில்லை. பள்ளியில் கணிதம் கற்பவரா யிருந்தும் கற்றுக் கொடுப்பவராக விளங்கியதைக் கண்ட உபாத்தியாயர்கள் பிரமித்தனர்.

ஒரு நாள் இவருக்கு மேல் வகுப்பில் பயிலும் மாணாக்கனொருவன் லோனி என்பவரின் "ட்ரிகோனமெட்ரி" என்ற பீஜ கணிதப் புத்தகத்தை இரவலாகக் கொடுத்த பின்பே இராமானுஜத்தின் கணிதத் தேர்ச்சி பலரறியத் ததும்பிற்று. தனது 12-ம் வயதிலேயே அப் புத்தகத்திலிருந்த எல்லா கணிதத்தையும் எவருடைய உதவியு மின்றிச் செய்து முடித்தா ரென்றால், அவருடைய கணிதத் திறமைதா னென்ன! மூன்று வருஷங்களுக்குப் பின் கார் என்பவரின் பீஜ கணிதப் புத்தகத்தை இரவல் வாங்கி அதிலிருந்த கணிதங்களையும் செய்து முடித்தார். அவர் நித்திரையிலும் கணிதம் செய்துகொண் டிருப்பாராம். இராமானுஜம், தமது குல தேவதை

யாகிய நாமகிரியம்மாளே தனக்கு கணிதத்தில் ஞானத்தை ஊட்டினாளென்று நம்பி வந்தார்.

இராமானுஜம் ஆங்கில பாஷையில் மிகவும் கேவலமாயிருந்தார். உண்மையில் இவர் கணிதத்தில் தவிர மற்ற பாடங்களில் சிரத்தையெடுப்பதே கிடையாது. ஆகவே இவர் தனது 17-வது வயதில் கும்பகோணம் சர்க்கார் கலாசாலையில் பயின்று உபகாரச் சம்பளம் பெற்றும் ஆங்கில பாஷையில் அடிக்கடி தவறி வந்ததால், அச் சம்பளத்தை இழந்துவிட்டார். ஆகவே படிக்கப் பொருளுதவி யில்லாததால் தனது படிப்பை நிறுத்திவைக்க நேர்ந்தது. ஆனால் மறுபடியும் தனது 19-வது வயதில் சர்வ கலாசாலையில் பயில முயன்றும் முடியாமல் போகவே வேறு வழியில்லாது தனது வீட்டிலேயே ஓய்வான நேரங்களில் கணிதங்களை ஆராய்ந்து வந்தார்.

உத்தியோகங்களும் உயர்வும்

இராமானுஜத்திற்கு வீட்டில் ஆராய்ச்சிகள் செய்யச் சாவகாசம் அதிகம் அகப்படாமல் நெல்லூர் ஸ்டேஷனில் ஓர் குமாஸ்தா வேலையில் அமர்ந்துகொண்டு தனது ஆராய்ச்சிக்கு யாதொரு விக்கினமும் நேரா வண்ணம் ஏற்பாடுகள் செய்துகொண்டார். இவ்விடத்தில் ஓர் நண்பர் இவரின் உண்மைத் திறமையை யுணர்ந்து கணிதத்திலும், உத்தியோகத்திலும் உயர்ந்திருந்த தனது தாய் மாமன் **இராமச்சந்திர ராவ்** என்பவரிடம் அழைத்துச் சென்று இராமானுஜத்தை அறிமுகப் படுத்தினார். இராமச்சந்திர ராவ் இராமானுஜம் தான் ஆராய்ந்தவை யாவையும் ஓர் பழைய நோட்டுப் புத்தகத்தில் எழுதி வைத்திருந்ததைக் கண்டார். முதலாவது இராமானுஜம் தனது கணிதங்களை எவ்வளவோ விளக்கிக் காட்டியும் ராவ் இலகுவில் அறிந்துகொள்ள முடியாமல் அடுத்த நாள் வரச்சொல்லி அவர் ஆராய்ச்சியின் சிறிது அற்பமான கணிதங்களை விவரிக்கச் சொன்னார். அவ்வாறே இராமானுஜம் படிப்படியாக, “எலிப்டிக்கல் இண்டீகரல்” என்னும் உயர்தர க்ஷேத்திரக் கணிதத் தொடர் முதலியவற்றின் ஆராய்ச்சிகளையும், கடைசியாக, உலகம் அறியாதிருந்த, “டைவர்ஜண்ட் சீரீஸ்” என்ற பிரியும் தொகுகளின் கோட்பாடுகளையும் கேட்டு ராவ் உள்ளங் கசிந்து இராமானுஜத்திற்கு யாது வேண்டுமென வினவ, அதற்கு இராமானுஜம் தான் கஷ்டமில்லாமல் கணித ஆராய்ச்சிகள் புரியத் தனக்கு அற்பமான உபகாரச் சம்பளம் கிடைத்தால் போதுமெனக் கேட்டாராம்!

இதன் மேல் இராமச்சந்திர ராவ் சென்னை துறைமுக இலாகா அதிகாரி **சர். பிரான்ஸிஸ் ஸ்பிரிங்** என்பவரிடம் இராமானுஜத்தின்

அரிய ஆராய்ச்சிகளை எடுத்துக் கூறி வேண்டிய உதவி புரிய வேண்டினார். அவ்வாறே அவர் துறைமுக ஆபீசில் கணக்கு இலாகாவில் ஓர் குமாஸ்தாவாக இராமானுஜத்தை அமர்த்திக்கொண்டு கணித ஆராய்ச்சி செய்யச் சிறிது சாவகாச மளித்தார்.

இவ்வா றிருக்கையில், கேம்பிரிட்ஜ் டிரினிட்டி கலாசாலையின் கணித ஆசிரியர் ஜி. எச். ஹார்டி என்பவரைத் தனது அன்பர் புரோபஸர் **சேஷு** ஐயர் என்பவரால் அறிந்து பின்வருமாறு 1913-ம்௵ ஜனவரிமீ 16உ ஓர் கடிதம் எழுதினார்:

“........எனக்குச் சர்வ கலாசாலைப் படிப்புக் கிடையாது. ஆனால் சாதாரண பாடசாலையில் பயின்றிருக்கிறேன். ஸ்கூலை விட்டபிறகு எனக்கு ஏற்பட்ட சாவகாச நேரங்களில் கணித சாஸ்திரத்தில் ஆராய்ச்சி செய்து வந்தேன்............நான் “டைவர்ஜண்ட் சீரீஸ்” என்ற கணிதப் பகுதியில் பிரத்தியேகமாக ஆராய்ச்சி செய்திருக்கிறேன்.........சமீபத்தில் தாங்கள் வெளியிட்ட “முடியா எண்களின் வரிசைக் கிரமங்கள்” என்ற புத்தகத்தில் 36-வது பக்கத்தில் ஏதாவது கொடுக்கப்பட்டதோர் எண்ணைவிடக் குறைந்ததான பிரதம எண்ணைத் தோற்றுவிக்கும் பூர்த்தியான வழியைக் கண்டுபிடிக்கப்படவில்லை யென்றிருந்ததைக் கண்டேன். நான் அவ்விதம் “உண்மையான” எண்களைக் கண்டுபிடிக்கும் வழியைக் கண்டுபிடித்திருக்கிறேன். இதனோடு வரும் எனது ஆராய்ச்சி இதழ்களைத் தயவுசெய்து பார்வையிடுங்கள். நான் மிகவும் ஏழை. இவ்விதழ்களில் ஏதாவது உண்மைக ளிருக்கிறதெனத் தங்களுக்குத் திருப்தி ஏற்பட்டால் அவைகளை வெளியிடுங்கள்.........”

இவ்வாறு இராமானுஜம் அனுப்பியதில் நூற்றுக் கணக்கான ஆராய்ச்சிக ளிருந்தன. இவைகளைக் கண்ட ஹார்டி மிகவும் ஆச்சரியப்பட்டு இராமானுஜத்திற்கு ஊக்கமும் உருக்கமுங் கொண்ட நீண்டதோர் நிருபம் எழுதினார். அதே சமயத்தில் அவர் லண்டனிலும், சென்னையிலு மிருந்த “மாணாக்கர் ஆலோசனைக் கமிட்டி”களுக்கு இராமானுஜத்திற்கு கேம்பிரிட்ஜ் ஆராய்ச்சிக்கு உதவியளிக்குமாறு கடிதங்கள் மூலமாக சிபார்சுகள் செய்துகொண்டிருந்தார். ஆனால் இராமானுஜம் அயல் நாடுகளுக்குக் கடல் கடந்து செல்லுவது தனது குலாச்சாரத்திற்கு விரோதமெனச் சம்மதப்படாமையைக் கேட்ட ஹார்டி அளவற்ற ஆச்சரியத்தையும், வருத்தத்தையும் அடைந்தார்.

இச் சமயத்தில் சிம்லா நகர் வான சாஸ்திர இலாகா அதிகாரி டாக்டர் ஜி. டி. வாக்கர் என்பவர் சென்னை வர நேரிட்டபோது சர். ஸ்பிரிங் இராமானுஜத்தின் அரிய ஆராய்ச்சிகளை எடுத்துரைத்

தார். அவர் இராமானுஜத்தின் வேலைகளை நேரில் கண்டு களித்து 1913 பிப்ரவரிமீ 26உ சென்னை சர்வ கலாசாலை ரிஜிஸ்ட்ராருக்கு இராமானுஜம் யாதொரு கஷ்டமுமின்றி கணித ஆராய்ச்சிகள் செய்யப் போதிய சாவகாச மேற்படும்படி அவருக்கு உபகாரச் சம்பளம் அளிக்க வேண்டுமென்று மிக அழுத்தமாகச் சிபார்சு செய்து கடிதம் எழுதியனுப்பினார். இதன் பயனாய் இராமானுஜம் சர்வ கலாசாலையி லிருந்து மாதம் ரூ. 75/= உபகாரச் சம்பளம் பெற்று 1913 மேமீ 1உ முதல் நிம்மதியுடன் தனது வேலையில் கண்ணுங் கருத்துமா யிருந்து பல புதிய ஆராய்ச்சிகள் செய்தார். உபகாரச் சம்பள விதிப்படி தனது ஆராய்ச்சிகளின் அறிக்கைகளை 1913 ஆகஸ்டுமீ 5உ, நவம்பர்மீ 7உ, 1914 மார்ச்சுமீ 9உகளில் மும்முறை சர்வ கலாசாலைக்கு அனுப்பினார்.

இங்கிலாந்து பிரயாணம்

இராமானுஜத்தின் நல்ல காலமாக கேம்பிரிட்ஜ் டிரினிட்டி கலாசாலையிலிருந்து ஜி. எச். நேவில் என்பவர் சென்னையில் பல சொற்பொழிவுகளாற்ற வரவழைக்கப்பெற்றார். இவர் வரும்போது ஹார்டி என்பவர் எப்படியாவது இராமானுஜத்தை இங்கிலாந்துக்கு வரும்படிசெய்யச் சொல்லி யனுப்பியிருந்தார். ஆகவே நேவில் சென்னையில் இராமானுஜத்தைக் கண்டு இங்கிலாந்துக்குச் சென்று ஆராயும் அவஸ்யத்தை வெகுவாக எடுத்துக் கூறி கடைசியில் இராமானுஜத்தின் சம்மதத்தைப் பெற்று, 1914 ஜனவரிமீ 28உ சென்னை சர்வ கலாசாலைக்கு, இராமானுஜத்தின் உண்மை உயர் நிலையையும், அவர் இங்கிலாந்துக்குச் சென்று ஆராய்வதின் அவசி யத்தையும், அவ்வாறு அனுப்புவதால் அவர் பெயரும், சென்னை நகரின் பெயரும் உலகமே உயர்த்திப் புகழ ஏதுவுண்டென்றும் உருக்கமானதோர் கடிதம் எழுதினார். இதனால் சர்வ கலாசாலை இராமானுஜத்திற்கு இங்கிலாந்தில் ஆராய்ச்சிகள் செய்ய இரண்டு வருஷங்களுக்கு வருஷம் 250 பவுன் உபகாரச் சம்பளம் அன்புடன் அளித்தது.

ஆகவே இராமானுஜம் 1914 மார்ச்சுமீ 17உ இங்கிலாந் துக்குப் புறப்பட்டுச் சென்றார். அங்கே கேம்பிரிட்ஜ் யுனிவெர் ஸிட்டி கலாசாலையில் சேர்ந்து தனக்கு இப் பேருதவிக்குக் காரணமா யிருந்த ஹார்டி என்பவருடைய மேல்பார்வையிலும், லிட்டில்வுட் என்பவரின் மேல் பார்வையிலும் வெகு விரைவில் ஆராய்ச்சிகள் செய்யத் தொடங்கினார். இவரின் அரிய வேலைகளைப் புகழ்ந்து அக் கலாசாலையும் பிரத்தியேகமாக 60 பவுன் உபசாரச் சம்பளம் உதவி வந்தது. இராமானுஜத்தின் உழைப்பையும், ஆராய்ச்சியையும்

புகழ்ந்து 1915 நவம்பர்மீ 11உ சென்னை சர்வகலாசாலைக்கு அறிக்கை யொன்று அனுப்பியதில் கூறியதாவது:

"...........உலக யுத்தம் நடப்பதால் இராமானுஜத்திற்கு ஆராய்ச்சிக்கு வசதிகள் சிறிது குறைந்துவிட்டன. லிட்டில்வுட் என்பவர் யுத்தத்திற்குச் சென்றுவிட்டதால் நான் தனியாக உதவி புரிய நேர்ந்துவிட்டது. ஆனால் மிகுந்த விவேகமுடைய இம் மாணாக்கருக்கு ஒருவர் மட்டும் காணாது.........தற்காலத்தில் கணித சாஸ்திரத்தில் மிகுந்த தேர்ச்சியுடைய இந்தியர் என்று கூறு வதில் எவரும் மறுக்க முடியாது.........எவருமடையாத ஓர் அறிய சக்தி வாய்ந்திருக்கிறார். சில வழியில் நான் என்று மறியாத கணித விற்பன்னர் என்பதில் ஐயமில்லை."

சன்மானங்கள்

உலகம் என்று மறியாத எண்ணிலா அரிய ஆராய்ச்சிகளால் கணித சாஸ்திரத்தை அலங்கரித்த இராமானுஜத்தை உலகம் போற்றாமல், சன்மானங்கள் செய்யாதிருக்க முடியுமா? 1918 பிப்ர வரிமீ 28உ இராமானுஜத்தை அவரது 31-வது வயதில் லண்டன் "ராயல் சொஸைட்டி"யின் அங்கத்தினராக—எப். ஆர். எஸ். (F.R.S.) ஆகச் சேர்த்துக்கொண்டனர். இவ்வாலிபத்தில் இப் பெருமையை அடைந்தது இந்தியர்களில் இவரே முதன்மையானவர்! அதே வரு ஷம் அக்டோபர்மீ 13உ டிரினிட்டி கலாசாலையும் யாதொரு நியந் தனையும், கடமைகளுமின்றி நிபுணத்துவ அங்கத்தினராகச் சேர்த் துக்கொண்ட பெருமையையும் அடைந்தார். இராமானுஜம் நீண்ட காலமிருந்திருந்தால் இன்னும் நூற்றுக் கணக்கான சன்மானங்களை அடைந்திருப்பாரென்று உறுதியுடன் கூறலாம்.

வியாதியும் வீடு திரும்பலும்.

இங்கிலாந்து தேயம் குளிர்ச்சி பொருந்திய நாடானதாலும், இராமானுஜத்தின் உணவு அச் சீதோஷ்ண ஸ்திதிக்குத் தகுதியற்ற தாகவு மிருந்ததாலும் அவருடைய தேகம் வியாதியடைய ஏற்பட்டு இலகுவில் சுகம் பெற முடியாததோர் ரோக வியாதியை யடைந்து விட்டார். அவர் இங்கிலாந்தி லிருக்கும்போது உலக யுத்தம் நடை பெற்றதால் சமுத்திரப் பிரயாணம் செய்து குணமடைய முடியாமல் போயிற்று. ஆகவே 1918-ம் வருஷம் இங்கிலாந்தில் ஆங்காங் கிருந்த ரோக வியாதி சிகிச்சை யிடங்களுக்குச் சென்று தங்கி யிருந்து வந்ததில் சிறிது குணமடைந்தது. இவ் விதமாகக் குண

தோஷ மடைந்திருந்த காலத்தில்தான் வெகு மேம்பாடான கணித ஆராய்ச்சிகள் செய்திருக்கிறாரென்று கூறப்படுகிறது.

இராமானுஜம் இங்கிலாந்தில் மேனாட்டு அறிஞர்களால் புகழும், கீர்த்தியும் பெற்று வியாதியோடு இந்தியா திரும்பி 1919 மார்ச்சுமீ 27உ பம்பாய் நகர் வந்து சேர்ந்தார். இந்தியா வந்து சேர்ந்தபோது மிகவும் மெலிந்து அபாயகரமான நிலைமையிலிருந்ததால் அவரைக் கவனமாகச் சிகிச்சைகள் செய்துவரத் தக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டன. ஆனால் உலகம் போற்றிய கணித வித்வ ரத்தினத்தை மண்ணுலகில் வைத்திருக்கக் கடவுள் இசையவில்லைபோலும். 1920 ஏப்ரல்மீ 26உ சென்னையில் விண்ணுலகுற்றார் ஸ்ரீனிவாச இராமானுஜம்.

ஆவி நீங்கும் படுக்கையில் ஆராய்ச்சியா!

இராமானுஜம் அகால மரணமடைந்தது இந்தியாவின் துர் அதிர்ஷ்டமென்றே கூறவேண்டும். இவர் சுமார் ஆறு வருடங்களுக்குள் தனது தரித்திர நிலையில் உலகம் போற்றும் கணித நிபுணராக விளங்கியவர் இன்னும் சிறிது காலம் நீடித்திருந்தால் எவ்விதமான புகழையும் கீர்த்தியையும் பெற்று விளங்கியிருப்பாரென்று சொல்லத் தேவையேயில்லை. அவர் ஆராய்ச்சி செய்தவைகளை இவண் குறிப்பிட வேண்டுமானால், இடமும் விளக்கமும் ஏற்படாதென விடுத்தோம். ஆராய்ச்சியாளர்கள் முக்கியமாய் முன்னொருவர் ஆராய்ந்ததை அடிப்படையாகக் கொண்டு மற்றொன்றை ஆராய்வது வழக்கம். ஆனால் இராமானுஜம் இவ் வகையில் வெகு சில செய்திருப்பினும் பெரும்பாலானவைகள் இவருக்கு முன் பீஜ கணிதத்தில் பல்வகைப் பகுதிகளில் எவரும் ஆராயாதவைகளையே புதிது புதிதாக ஆராய்ந்த பெருமை இவருக்கே உளது.

இந்தியாவில் இவருக்கு முன் 1821-ல் டில்லிக்கருகில் பானிப்பட் என்றவிடத்தில் **இராமச்சந்திரா** என்பவர் தோன்றி பீஜ கணிதத்தில் "மேக்ஸிமா மினிமா" என்ற வகையில் ஆராய்ச்சிகளுடன் ஓர் புத்தகமும், "கால்குலஸ்" என்று புதிதாயுண்டான கணிதத்தில் புதிய வழிகளடங்கிய மற்றோர் புத்தகமும் வெளியிட்ட பெருமை மட்டும் அவருக்குரியதேயன்றி இராமானுஜத்தைப்போல மேனாட்டார் புகழ பீஜ கணிதத்தில் ஏராளமான—அரிய—புதிய ஆராய்ச்சிகள் செய்து நிகரற்றவராயிருந்தவர் ஒருவருமிரார் என்றே கூறல்வேண்டும்.

இராமானுஜம், கணிதத்திலேயே உள்ளத்தைப் பதித்துவிட்டதால் வேறு எக் கலையிலும் சிறிதேனும் அனுபவமும், ஆராய்ச்சியும் கிடையாது. இராமானுஜம் எப்பொழுதும் சாந்தகுண முடையவராய் சாதாரண மனிதனாகவே தோன்றினார். இங்கிலாந்தில் சன்மானங்கள் பல சமாரி பெய்த காலத்திலும் அவைகளால் சிறிதும் பெருமையின்றி அவைகளைக் கனவிலுங் கருதியதே யில்லையென்று ஹார்டி எழுதியிருக்கிறார்.

இராமானுஜம் இந்தியா வந்தபோது, மிகவும் மெலிந்து, நிறமாறி, அடையாளந் தெரியாவண்ணம் அறிவு கலங்கி யிருந்தபோதிலும் அவர் இறக்க நான்கு நாளிருக்கும்வரை தான் மரணமடையும் படுக்கையிலேயே தான் துவக்கிய, "மாக் தீட்டா" பிரிவுகள் என்ற புதிய கணித வகை யொன்றை ஆராய்ந்துகொண்டே யிருந்தாரென்றால் அவருக்குக் கணித ஆராய்ச்சியில் ஏற்பட்ட ஆர்வமும், மனோதிடமுந்தா னென்னே! இவருடைய சரித்திரம் தலைவிதியையே சதா நோவும் தமிழ் நாட்டு இளைஞர்களுக்கு நல்ல பாடமெனக் கூறுதல் மிகையாகாது.

ஓர் வீர பத்திராசிரியர்தம் அரும் பெரும் சக்தி.

திரு. K. வெங்கட ராவ் அவர்கள்.

வில்லியம் லாயிட் காரிஸன் என்பவர் அமெரிக்க நாட்டின் ஓர் சிறந்த தேச பக்தர். மனித வர்க்கத்திற்கே பிறந்து, வளர்ந்து மனித வர்க்கத்தின் விடுதலைக்காகவே அஞ்சா நெஞ்சுடன் சளைக்காது போராடி யுழைத்து வெற்றி மாலை யணிந்த உத்தமர். ஆடுமாடுகளை நாம் விற்பதைப் போலவே கருப்பு மனிதர்களை விலை கொடுத்து வாங்கி அடிமைப்படுத்தும் தொழில் மலிந்திருந்த அமெரிக்க நாட்டில் காரிஸன் அடிமை வியாபாரத்தின் பேரில் அம்பு தொடுத்தார். இவருக்கு உதவியாக ஒருவருமில்லை. நாட்டினர் இவரை எதிர்த்தனர். அரசினர் இவரைச் சிறைப்படுத்தி வாட்டி வதைத்தனர். காரிஸன் எதற்கும் அஞ்சவில்லை. தனது சிந்தையினுறுதியால் எல்லா இடையூறுகளையும் அகல வோட்டிச் சுமார் 40 வருஷ காலமாக இரவு பகலா யுழைத்து இறுதியில் கருப்பு அடிமைகளுக்குப் பூர்ண சுதந்திரம் அளித்தார். ஒருவன் பரம

ஏழையா யிருந்த போதிலும், உலக மக்களின் நன்மைக்காகப் பாடுபட்டு, வெற்றி பெற்று, உலக சரித்திரத்தில் அழியாப் பெரும் பெயரெடுக்கலாம் என்று இந்த உத்தமரின் சரித்திரம் சுட்டிக் காட்டுகிறது. பத்திராசிரியர் என்பவர் சாமான்ய மனிதரல்ல. தனது பத்திரிகைக்கு ஒரு சந்தாதாரரேனும் இல்லாமற் போயினும், தனது நியாயமான கொள்கைகளை ஆசிரியர் ஸ்திரப்படுத்தி மக்கள் மனதைத் தன் வயப்படுத்தி நாட்டை முன்னேற்ற மடைவிக்கலாம் என்றும், ஒரு பத்திராசிரியர் பயங் கொள்ளியா யிராமல் சுதந்திரத் தோழமையிருப்பின் அவருக்கு ஒரு நீதிபதியேயாயினும், அரசாங்கமேயாயினும், விரோதிகளேயாயினும் ஒரு பொருட்டல்லவென்றும், நியாயமே பெரிதென்றும் வில்லியம் லாயிட் காரிஸனின் ஜீவிய சரித்திரம் அழுத்தந் திருத்தமாகச் சாக்ஷியம் கூறுகிறது. நாம் அடிமைகளாய் வாழ்கின்றோம்; ஆதலால் இந்தச் சுதந்திர வீரரின் திவ்ய சரிதை நமக்கோர் வழிகாட்டியாகும். கருப்பு அடிமைகளின் விடுதலையினிமித்தம் சுதந்திர வெள்ளை அமெரிக்கராகிய காரிஸன் எத்துணை கஷ்டங்களனுபவித்தார் என்பதையும், அவர் எவ்வளவு வீரதீரத்துடன் சளைக்காது போராடினார் என்பதையும் சற்று கவனிப்போம்.

மனிதனை மனிதன் அடிமைப்படுத்துவது கூடாது. பிறர் உரிமைகளை பறிப்பது தகாது. ஒரு நாட்டை மற்றொன்று தன் ஆதிக்கத்திற் குட்படுத்திக்கொள்வது நியாயமாகாது. ஆனால் அடிமைப்படுத்தும் வழக்கமோ உலகம் ஏற்பட்டது முதல் உண்டான புராதன வழக்கமாகும். புராதன கிரேக்க ரோமாபுரிகளும் அடிமை வழக்கத்தை ஆதரித்தே நின்றன. ஆனால் இவ் வழக்கம் எந்த மதக் கட்டளைக்கும் ஒவ்வாததாகும். மனித வர்க்கத்தை சகோதர உணர்ச்சியுடன் நேசிக்க வேண்டுமென்று போதித்த மகான் புத்தர் மனிதனை மனிதன் அடிமைக் குழியில் தள்ளுவதைக் கண்டு ஒருபோதும் சகியார். இயேசு கிறிஸ்துநாதரும் சகோதரத்வத்தையே போதித்தார். "மாந்தரனைவரும் நடமாடுங் கோயில்களே" (The Kingdom of Heaven is in all) என்று போதித்த கிறிஸ்து மகானின் அடியார்களென்று சொல்லிக்கொள்ளும் அமெரிக்கர் அடிமை வியாபாரம் செய்து வந்ததை காரிஸன் கண்டு சகித்திருக்கக்கூட வில்லை.

"சத்தியம் எவ்வளவு கடுமையோ அவ்வளவு கடுமையா யிருப்பேன். நியாயம் எவ்வாறு எவர்க்கும் விட்டுக் கொடுக்காத தன்மையுள்ளதோ அவ்வாறு என் கொள்கைகளை விட்டுக் கொடுக்க மாட்டேன். ஒரு காரியத்தை மனப்பூர்வமாய் தளர்வுறாமல் செய்து முடிப்பேன். நான் மன்னிக்க முடியாது. என் நிலையிலிருந்து அணுவேனு மசையேன். நான் சொல்வனவற்றைக் கேட்டே தீர வேண்டும்" (I will be as harsh as truth and as uncompromising

as justice. I am in earnest, I will not equivocate, I will not excuse, I will not retreat a single inch and I will be heard) என்று வீர கர்ஜனை செய்துகொண்டே தமது 20-ம் பிராயத்தில் தேச சேவை செய்யக் கிளம்பினார்.

இவர் ஒரு ஏழைக் குடும்பத்தில் 1804-ம் ஆண்டில் அமெரிக்காவிலுள்ள மாஸ்ஸாசுஸட்ஸ் என்னும் ராஜதானியில் உதித்தார். இவருக்கு அதிகப் படிப்பில்லை. ஆயினும் தனது சாதுர்யத்தாலும் சுறுசுறுப்பினாலும் கலாஞானம் பெற்றவரானார். இவர் ஓர் அச்சுக் கூடத்தில் அச்சுக் கோர்ப்பவராக (Compositor) வேலையில் அமர்ந்தார். அந்த அச்சுக்கூடத்தில் பத்திரிகை ஒன்று அச்சடிக்கப்பட்டு வந்தது. அந்த பத்திரிகையின் விஷயங்களை அச்சியற்றுபவர் நமது காரிஸன் தான். தன் பெயரை வெளியிடாமல் தான் அச்சுக் கோர்த்து வரும் பத்திரிகையின் ஆசிரியருக்கே விஷயங்களை காரிஸன் எழுதியனுப்பி வந்தார். மேற்படி விஷயங்கள் பத்திரிகையில் வெளிவந்து கொண்டிருந்தன. இதனால் பத்திரிகைத் தொழிலில் காரிஸனுக்கு எவ்வளவு அவாவிருந்து வந்ததென்பது இனிது விளங்குகிறது. பத்திரிகா நிருபராகவும், உதவி பத்திரிகாசிரியராகவு மிருந்த பின் நாளடைவில் காரிஸன் ஓர் பத்திராசிரியரானார்.

காரிஸன் தமது பத்திரிகையின் நோக்கங்களை விளக்குங்கால் தனது சுதந்திர தாகத்தை அமெரிக்கர் நன்கறியுமாறு பொன் மொழிகளால் தைரியத்துடன் தெரிவித்தார். "பரிபூர்ண சுதந்திரமே எனது பத்திரிகையின் நோக்கம். எனது பத்திரிகை ஒரு தனிப்பட்ட விஷயத்தைக் கொண்டதல்ல; தனிப்பட்ட கக்ஷிக்காக உழைப்பதல்ல; எவர்க்கும் என் பத்திரிகை அஞ்சாது கடமையைச் செய்து வரும். தீய வொழுக்கத்தை அஞ்சாது கண்டிப்பேன். இந் நாட்டிலுள்ள ஒவ்வொரு அடிமையும் விடுதலை பெறவேண்டும். நாடும் நாட்டினரும் சமாதானத்தையே கோரவேண்டும். இப் புனித நோக்கங்களுக்காக நான் எங்கிருந்தபோதிலும் என் ஆயுட்கால முழுவதும் உழைக்கத் தயாராயிருக்கிறேன்" என்று எழுதின காரிஸனின் வீரம்தான் என்னே!

காரிஸன் ஒரு பத்திரிகையின் உதவி ஆசிரியராயிருந்த காலத்தில் ஒரு சம்பவம் நிகழ்ந்தது. அவர் பிரயாணம் செய்துகொண்டிருந்த கப்பலில் ஏராளமான கருப்பு மனிதர்களிருந்தனர். அவர்கள் வரலாற்றைப்பற்றிக் கப்பற் றலைவனைக் கேட்டபோது, அவர்கள் அடிமைகளென்றும் நியூ ஆர்லியன்ஸ் என்னும் நகரிலுள்ள சந்தைக்கு விற்பனைக்காகக் கொண்டுபோகப் படுகின்றனரென்றும் காரிஸனுக்குத் தெரியவந்தது. இவ்வீரனிட நெஞ்சு துடித்தது. சந்தைக்குக் கொண்டுபோகப்படும் அடிமைகளை நேரிற் கண்ணாரக் கண்டது

இதுவே முதன் முறையாகையால், காரிஸன் மனம் வருந்தியதற்கோரளவில்லை. உடனே தனது பத்திரிகையின் தலையங்கத்தில் இச் சம்பவத்தைப் பற்றி அடிமை வியாபாரிகள் நடுநடுங்கும் வண்ணம் தன் எழுதுகோலால் அறைந்தார். இதன் பேரில் இவர் மீது ஒரு ஸிவில் வழக்கும் கிரிமினல் குற்றமும் கொண்டுவரப்பட்டது.

இவர் விசாரிக்கப்பட்ட நகரமோ அடிமைத் தொழிலைக் கட்டித் தழுவும் இடம். இத் தொழிலை யாதரிப்பவரே இவரை விசாரிக்கும் நீதிபதி. ஜூரிகளும் நீதிபதியின் அபிப்பிராயம் கொண்டவர்களே. இத்தகைய நிலைமையில் காரிஸனுக்கு எவ்வித நியாயங் கிடைக்குமென சொல்லத் தேவையில்லை. இறுதியில் வீரர் சிறைவாசம் பெற்றார். தன் மனதகத்தே யுதித்த அபிப்பிராயத்தை வெளியிட்டதற்காகவும், அடிமைத்தனமென்பது கூடாதென்னும் பரந்த நோக்கத்துடன் எழுதியதற்காகவும் ஒரு மனிதன் பேரில் குற்றஞ் சுமத்தலாமா, தண்டிக்கலாமா? என்று பொதுமக்கள் துடித்தனர். வீரன் மனம் தளர்ந்தானில்லை. 49 நாட்கள் மட்டும் காரிஸன் சிறைவாசம் அனுபவிக்க நேரிட்டது. அதற்குள் பணக்கார வியாபாரி ஒருவர் காரிஸன் செலுத்த வேண்டிய அபராதத் தொகையைத் தானே செலுத்த முன் வந்ததால் காரிஸன் விடுதலை பெற்றார்.

சிறைவாசம் புரியும் காரிஸன் சட்டத்தையும் நீதிபதியின் அதிகார முடுக்கையும் அழுத்தமாகக் கண்டித்து வீரச்சுவை ததும்பிய நிரூபம் ஒன்று வரைந்தார். அதில் அவர் குறிப்பிட்டதாவது:—"நான் நீதிபதியின் கோபப் பார்வைக்கேனும் அவர் அளிக்கும் தண்டனைக்கேனும் பயந்து அடிமைத்தனத்தைக் கண்டிக்காமல் வாளாவிருப்பேனென்று என்னைத் தண்டித்த நீதிபதி ப்ரைஸ் நினைக்கிறாரா? அவர் என்னை சரிவர உணரவில்லை. அடிமைத் தொழில் இருப்பதானது அமெரிக்காவின் நற்பெயருக்கே தீங்கிழைப்பதாகும் என்பதை நான் கூறாமலிருக்க முடியாது. மனிதர்களை அடிமையாகும்படி தூண்டுகிறவர்களும், அடிமைப்படுத்துபவர்களும் எவ்வளவு கண்யவான்களாயிருந்த போதிலும், எங்கிருப்பனும், நான் அவர்களைக் கண்டிக்கச் சிறிதேனும் தயங்கேன். அடிமைகளின் சார்பில் அதிகமாகத் தொண்டாற்றவில்லையே யென்பதை நினைக்க நினைக்க எனக்கு வெட்கமாயிருக்கிறது. ஒரு ஜனசமூகம் கண் திறந்திட வேண்டுமாகில், நமது சட்டங்களின் கொடுமையைக் காட்ட வேண்டுமாகில், ஓர் சுதந்திர வெள்ளையன் அர்ப்பணம் செய்யப்பட வேண்டும். கருப்பு நிற அடிமைகளின் உரிமைகளுக்காகப் போராடுவதில் சிறைவாசமும், காவலும், அடக்குமுறைகளும் நான் எதிர்பார்ப்பனவே யாகும். இவற்றிற்கெல்லாம் நான் பயப்படுவேனாகில், நானும் ஓர் அடிமையென்றே கருதப்பட வேண்டும்." சிறைவாச மனுபவிக்கும் காரிஸன்

மேற்குறித்த கடிதத்தை நீதிபதிக்கெழுதினால், அவரிட வீரத் துணிவைச் சொல்லப்போமோ? இத்தகைய தியாகி யொருவர் துணிந்து செய்யும் கருமம், நியாயத்தையே அடிப்படையாகக் கொண்ட கொள்கை, இவ் வுலகமே எதிர்த்த போதிலும் தோல்வியடையுமா? ஒருக்காலுமில்லை.

தன்னுறுதியும் தன்னம்பிக்கையும் அமையப்பெற்ற வீரன் வில்லியம் லாயிட் காரிஸன் தனது 26-ம் பிராயத்தில் அடிமைகளின் விடுதலைக்கெனவே போராடுவதற்காக "லிபரேட்டர்" என்னும் பத்திரிகையை ஆரம்பித்தார். அடிமை வழக்கத்தைத் தள்ளி மிதித்திட வேண்டுமென நினைத்த பிரதேசங்களில் காரிஸன் பிரசங்கங்கள் புரிந்து பொருள் சேகரித்து இப் பத்திரிகையை நடத்தி வந்தார். அமெரிக்காவில் தென் பிரதேச நாடுகளென்றும் வடபிரதேச நாடுகளென்றும் இரு பிரிவுகளுண்டு. தென்நாடுகள் அடிமை வியாபாரத்தையே தத்தம் தொழிலாகக் கருதி நடத்திச் செல்வதில் வலுத்தன. இவைகள் காரிஸனை வெறுப்பது இயல்பேயாகும். அடிமை வேண்டுமாயின் தனது கௌரவத்தையும், சுயமரியாதையையும், சுதந்திர நோக்கையும் காத்து நிற்கலாம். ஆனால் அடிமைப்படுத்துவோன் நெறிதவறிய குற்றத்திற்குப் பாத்தியப்பட்டவனாவான். அடிமை வியாபாரத்திலிறங்கிய அமெரிக்கத் தென் நாட்டினர் தங்கள் அறியாமைக்கும் தன்னலப்பற்றிற்கும் அடிமைகளாயினர். கர்வமும் அகங்காரமும் மிக்கோராயினர். தங்களிட அடிமைகள் நெற்றி வியர்வை நிலத்தில்விழப் பாடுபடவே, எஜமானர்கள் சுகமாக உண்டு சோம்பித் திரியலாயினர். இவ்வளவு சுகங்கொடுக்கும் அடிமைகளை உடனே விடுவித்துவிட்டால், இனித் தாங்கள்தான் வெயிலிலும் மழையிலும் காற்றிலும் பாடுபட வேண்டுமென்னும் அச்சங்கொண்ட தென் நாட்டினர், அடிமைத்தனம் உலகுள்ளளவும் நிலைத்திருக்கக் கோரினர்.

வட நாடுகளில்தான் காரிஸனின் பேச்சுக்கு மதிப்பும் செல்வாக்கு மிருந்து வந்தது. அடிமைகளுக்குப் பரிபூர்ண சுதந்திரம் உடனே கொடுக்கப்பட வேண்டும். இதுவே நியாயமும் நன்னெறியுமாகுமென செவிடுபட இடிமுழக்கம் போல் கர்ஜித்து வந்தார். தெருவில் போகும் ஆண், பெண், சிறுவர் யாவராயினும் கூப்பிட்டு இவ் விஷயத்தைப் போதிப்பார். இவருக்கு நேர்ந்த இன்னல்களுக்கோரளவில்லை. இவரைத் தூக்கிக்கொண்டு போய்விடலாமா வென்றும் சிலர் கருதியதுண்டு. வேறு சிலர் இவரைக் கொலை செய்யவும் எண்ணியதுண்டு. இவரைக் கைது செய்து தண்டனை விதித்தால் 5000 டாலர் வெகுமதி யளிப்பதாகத் தென் நாட்டின் சட்டசபை தீர்மானம் நிறைவேற்றியதாம்! இவருடைய பத்திரிகையை பகிரங்கமாகப் பிரசுரிப்பதும் குற்றம்! தபாலாபீஸிலிருந்து விலாசதார் பெறுவதும்

குற்றம்! ஓர் ஏழை சுதந்திர தாக மிகுந்த—தன் பணியாற்றி வந்த பத்திராசிரியரைக் கண்டு நாடெலாம் கலகலத்தது; விரோதிகள் நடுங்கினர்.

இவ்வளவு பிரபலமும் செல்வாக்கும் பெற்ற காரிஸன் ஓர் இருட்டறையில் பழையதோர் அச்சியந்திரசாலையில் தன் பத்திரிகைக்கு வேண்டிய விஷயங்களைத் தானே எழுதி, அச்சுக் கோர்த்து பிரசுரித்து வந்தார். அச்செழுத்துக்களோ தேய்ந்து போனவை. இவருக்கு உணவோ ஓர் சிறு ரொட்டித் துண்டும் கொஞ்சம் பாலுந்தான். வீட்டு வாடகையும் கொடுக்கச் சக்தியில்லை. பத்திரிகைக்கு வேண்டிய காகிதங்களையும் கடனாகத்தான் வாங்குவது. இவ்வளவு எளிய வாழ்க்கையில் தேச சேவை செய்து வந்த காரிஸன் பிற்காலத்தில் தேசங் காத்த தீரர்களில் ஒருவரென விளங்கினார்.

காரிஸன் "லிபரேடர்" பத்திரிகையைத் துவக்கின 9 வருஷங்களுக்கெல்லாம் "அடிமை விலக்குச்" சங்கங்கள் சுமார் 2000 வரையில் 2,00,000 அங்கத்தினர்களைக் கொண்டு கிளம்பினவென்றால், காரிஸன் எவ்வளவு உழைத்திருக்க வேண்டுமென ஊகிக்கலாம். காரிஸனின் கொள்கைகளைத் தாங்கி "நியூ இங்கிலாந்து ஸொஸைடி" (New England Society) என்று ஒரு கட்சி ஆரம்பிக்கப்பட்டது. அமெரிக்காவில் சுதந்திரப் பத்திரத்தில் குறிப்பிட்டுள்ளபடி "ஆண்டவனால் ஒவ்வொரு மனிதனுக்கும் சிற்சில உரிமைகள் வழங்கப்பட்டுள்ளன. இவைகள் பிறரால் பறிக்க முடியாதவை. இவைகளில் ஜீவன், சுதந்திரம், சந்தோஷத்தைக் கோரல் முதலியன சேர்ந்தவையாகும்" இக் கட்சியின் அடிப்படையான கொள்கையாகும்.

மேலும் இக் கட்சி அடிமை விடுதலையைக் கோரி நின்றது. "ஒரு திருடன் பிறர் சொத்தை அபகரித்துக்கொண்டால், அவன் அச் சொத்தை உடனே ஒப்பிவித்துவிட வேண்டுமாக வற்புறுத்தப்படுகின்றானே அது போலவே ஆப்பிரிக்க மக்களை அடிமைப்படுத்தி யிருப்பவர்கள் உடனே அவர்கள் விடுவித்தலவசியம்" என்றறைந்தனர்.

வீர காரிஸன் ஓர் பழுத்த அமிதவாதி. "நாளடைவில்" அடிமைகள் விடுதலை பெறட்டுமென்று கூறிய மிதவாதக் கொள்கையினரை இவர் ஆதரிக்கவில்லை. "சிறுகச் சிறுக" சுதந்திர தாகந் தீர்ப்போம் என்று ஆளுவோர் கொடுத்து வந்த உறுதிமொழிகளை இவர் சிறிதேனும் நம்பவில்லை. இவ்வகைப் பேச்சுகளுக்கெல்லாம் இவர் மதிப்பு கொடுக்க மறுத்து 'பயமுறு ஆளுவோர் கூறும் உறுதிமொழிகள் நல்லெண்ணத்தோடிருக்குமாயின், உடனே விடுதலை யளிப்பதே தகுந்த சான்றெனக் கூறினார். ஆப்ரஹாம் லிங்கன் அமெரிக்க ஜன நாயகத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டபோது, அடிமைகளின் வெற்றி முரசு கொட்டியது. அடிமைகள் பரிபூர்ண விடுதலை யடைந்

தனர். வில்லியம் லாயிட் காரிஸன் வெற்றிமாலை யணிந்தார். நம் வீரர் 1879-ம் வருஷத்தில் தமது 75-ம் பிராயத்தில் பூதவுடல் நீத்துப் புகழுடம் பெய்தினர்.

சுருங்கச் சொல்லின் வில்லியம் லாயிட் காரிஸன் ஓர் சுத்த சுதந்திர வீரன். எதற்கும், எவர்க்கும் அஞ்சாது தன் மனதிற்கு நியாயமெனத் தோன்றும் விஷயத்தை ஒழியாமல் வீரத்துடன் கூறி வந்தார். அது சிறைவாசமோ, கடுந் தண்டனையோ, தன் பொன்னுயிருக்கே பெருத்த ஆபத்தோ எதுவாயினும் அதன் பொருட்டுப் பின்வாங்குபவரல்ல.

"இதந்தரு மனையி னீங்கி
இடர்மிகு சிறைப் பட்டாலும்
பதந்திரு விரண்டு மாறிப்
பழிமிகுத் திழி வுற்றாலும்
விதந்தரு கோடி யின்னல்
விளைந்தெனை யழித்திட்டாலும்
சுதந்திர தேவி! நின்னைத்
தொழுதிடல் மறக்கி லேனே"

என்று காரிஸன் சுதந்திரத் தோழனாய் விளங்கினர். ஓர் முழு ஜன சமூகமேயாயினும், வலிமை மிக்கதோர் அரசாங்கமேயாயினும், கொடிய எதிரிகளேயாயினும், பீரங்கிப் படைகளேயாயினும், மற்றும் உலகுளோர் யாவராயினும் நியாயத்தை எதிர்த்து வெற்றிபெற முடியாது. பிறர் உரிமையைக் கொடுக்க மறுத்துப் போராடி ஜயமடைய முடியாதென்று காரிஸனின் சரிதம் இயம்பா நிற்கிறது. "உலகம் சுழன்றுகொண்டிருக்கிறது. ஜனசமூகங்களும் மனிதர்களும் இருந்தவிடந் தெரியாமல் மறைகின்றனர். அநியாயத்திற்கு தீர்ப்பளிப்பது சிறிது தாமதிக்கிறது. ஆதலால் உலகில் நியாயமே கிடையாதென்று நினைக்கிறாயா? அவ்வாறு நினைப்பவன் சுத்த மடையன்தான். நியாயமல்லாமல் மற்றவை கிடையா. நான் காண்பது நியாயமும் உண்மையும்தான்" என்று கவி கார்லைல் கூறுகிறார்.

"In this God's world with its wild, whirling eddies, and its mad foam-oceans where men and nations perish as without law, and judgment for an unjust thing is sternly delayed, dost thou think that there is therefore no justice? That is what the fool hath said in his heart I tell thee again there is nothing else but justice. One strong thing I find here below—the just thing, the true thing"—carlyle.

மன்னான் (மலை நாட்டான்)

திரு. S. வடிவேல் அவர்கள்.

திருவிதாங்கூர் மேற்கு மலைத் தொடர்ச்சியில் ஏலமலைப் பிராந்தியத்தில் மலைக் குடிகளில் மன்னான், முதுவான், ஊராளி, பளியன், பண்டாரம் என ஐந்து முக்கிய வகுப்பினர்களுண்டு. அவர்களில் மன்னானைப் பற்றி மட்டிலும் இங்கே இப்பொழுது எழுதுகிறேன். இவன் யாவன்? எங்கிருந்து எப்படி வந்தவன்? மலையிலேயே பிறந்து வளர்ந்து வதிந்த குடியா அல்லது குடியேறியவனா என்னும் விஷயங்களைச் சரியாய்க் கண்டுபிடித்துச் சொல்ல வல்ல ஆராய்ச்சிக்காரர்கள் இன்னும் இவர்களிடையில் வந்து உலாவக் காண்கிலோம். மன்னானைக் கண்டு கேட்டாலோ "எம் பாண்டி மக்கள், மதுரை ரதத்திற்கு வடம் பிணிக்கப் பிரம்பு வெட்டுவான் வேண்டி இவண் போந்தோம். திரும்புகாலையில் வந்த தடம் தோணாது இங்கேயே யுறைந்துள்ளோம். கானகத்தில் காய்கறி கிழங்கு பழவர்க்கங்கள் மிகுந்து மலிந்து கிடக்கின்றன. மற்றென்ன வேண்டும்? அருந்த, பளிங்கைப் பழித்த தூய வெள்ளருவி நீருண்டு; சூட, மலருண்டு; புதிய அன்று பூத்த மலர்களிலிருந்தும் தேனீக்கள் திரட்டிப் பெருக்கிய மதுவுண்டு; குளிர்ந்த கானலுண்டு; கையில் சக்கிமுக்கிக் கல்லுண்டு; கூரிய கத்தியுமுண்டு; ஓடாமல் தேடாமல் தவிக்காமல் சிரமமில்லாமல் வேட்டையாடப் பல சிறு மிருகங்களுண்டு. பின்னர் எங்கட்கு யாதோ ஆவசிகமுண்டு? அதுதான் எங்கட்குகந்த பண்ணை" என்ற கவலையற்ற பதிலை யளிக்கிறான். "இங்ஙனந்தானே எங்கள் வலியோர் (மூதாதைகள்) கூறிவிட்டுப் போயினர்" என்றும் அதை வற்புறுத்திச் சொல்லுகிறான்.

உருவம், பேச்சு, நடையுடை பாவனைகளை அதிகப் பாண்டி நாட்டையே ஒத்திருக்கிறதோடு, 'பங்கலாட்டம்,' 'பேய்க்கூத்து' ஆகிய விழாக்களில் மன்னான் ஈடுபட்டுக்கிடந் திருக்கிறானென்பதற்கு வேண்டிய சான்றுகள் மலையகத்தில் ஆங்காங்கு காணப்படுகிறபடியாலும் பாண்டி நாட்டில் படித்த ஒரு சிலருக்கு மட்டும்

கோவலன் சரிதை தெரிந்திருக்க, மன்னான் ஜாதியில் சிறு பிள்ளை முதல்கொண்டு கோவலன் பாட்டுப் படிப்பது கொண்டும் இவன் பாண்டி நாட்டிலிருந்தே இப்பொழுது மலையாளமென்று சொல்லப்படுகிற சேர நாட்டிற்கு குடிபுகுந்திருக்கிறானென்றும் சொல்லிக்கொள்ளலாம். ஆராய்ச்சியிற் றேர்ச்சி பெற்றவர்கள் மன்னானுடைய குடிலுக்கு வந்து பார்ப்பார்களாயின், 'இவனே பண்டைக் காலத்திய திராவிடன். இவனது மொழியே சுத்த களங்கமற்ற சேர்க்கையில்லாத தமிழ்மொழி யென்றும் நிரூபிக்கச் சிறிதும் தாமதியார்கள். சவர்க்காரம் (சோப்), அங்கி (சட்டை), சேலைக் கந்தை (துணி), பாறு (ஓடுகிறது), முகம் நோக்கு (கண்ணாடி), பெட்டகம் (பெட்டி), கூரை (வீடு), சந்தம் (அழகு), நீ அவ்விட இருந்து மண்டு (நீ அங்கே யிருந்துபோ), நீ இக்கு வாரோ (நீ இங்கே வா), நினக்கு எந்து வேணும் (உனக்கு என்ன தேவை), நீ தின்ப வாராததீ (நீ சாப்பிட வரவில்லையா). இப்பேர்க்கொத்த சொந்த சந்தம் வாய்ந்த அநேக தமிழ்ப் பதங்களை அவர்களிடத்தில் இன்றும் காணக்கிடைக்கிறது.

மன்னான்குடி நாட்டமைப்பு

10, 12 குடும்பக்காரர்களுக்குக் குறையாமல் ஒரு குடிநாடு ஏற்பட்டிருக்கிறது. இவ்வண்ணமாக மேற்கு மலைத் தொடரில் சுமார் 15, 20 குடிநாடுகளில் ஏகதேசம் 1000 தலைக்கட்டுக்குள்ளாகவே மன்னாமார் சிதறிக்கிடக்கின்றனர். ஒரே தலத்தில் மன்னான் பதிவாக யிருந்து வருவதில்லை. வருடத்திற்கு ஒரே கிருஷி. அவ் வேளாண்மைக் காலம் ஓயவும் வேறு புதிய இடத்தைத் தேடிச் செல்கிறான். கால்நடைத் துணை கிஞ்சிற்றேனும் கிடையாது. ஆண்டிறுதியில் வேறு புதிய குடிநாடு போகும் பொழுது ஒன்றிரண்டு மட் பாண்டங்கள், படுக்கும் சொந்தப் பாய், கையிலுள்ள கத்தி ஆகிய இவைகளே அவனுடன் கூடிப்போகும் பொருள்களாகும். மற்றொன்றையும் காணோம். விதைப்பண்டங்களை மட்டும் துஷ்ட மிருகங்களுக்கு எட்டாத உயரமான பெரிய மரங்களில் மாடங்களிட்டுப் பதனப்படுத்தி வைக்கிறான்.

ஒவ்வொரு குடிநாட்டுக்கும் பூசாரி, காணிக்காரன், வலிய இளந்தாரி, இளவட்டம். தண்டல்காரன் என்று தேர்ந்தெடுக்கப்பட்ட ஐந்து முக்கிய குடிநாட்டுப் பொறுப்பாளிகளுண்டு. அவரவர்களுடைய காரிய நிர்வாக காலங்களில் சரியான ஒழுங்கு முறைகளிலிட்டு ஜனசமூக சேவையினந்தரங்க அர்த்தம் தெரிந்த சேவகர்களும் தலை குனியும்படி ஒற்றுமையுடனும் உற்சாகத்துடனும் பணிவுடனும் கூடித் தத்தம் வேலைகளை இனிதாற்றி

முடிக்கிறார்கள். மற்றைய நேரங்களில் சமத்துவம் எங்கும் யாவரிடத்திலேயும் தாராளமாய் நிலவி நிற்கிறது. சுவாதீனம் மனித சஞ்சாரமற்ற வனங்களில் யதேச்சையாய்த் திரியும் பக்ஷி சாதிகளில் காண்பதினும் கூடுதலாகப் பாய்ந்து ஜொலிக்கிறது.

பூசாரி

உலகத்தோடொப்ப, இம் மலைக் குடியானவனும் யாவர்க்கும் மேலாக ஒரு பூசாரியை உட்காரவைத்திருக்கிறான். ஆனால் அவனுக்கு மடமில்லை, கோவிலில்லை, மானியமில்லை. சாதாரணமானவனிடத்திலிருந்து இவனை வேறு பிரித்துக் காட்டக்கூடிய போலியறிகுறிகளொன்றுங் காணக்கிடையா. மலைநாட்டுத் தெய்வமான 'அய்யப்பனை'ப் பூசிக்கவும் 'சாவர்' என்று சொல்லும் தென்புலத்தார்க்குச் செய்ய வேண்டிய கிரியைகளைத் தவறாமல் செய்து வைக்கவும், பயிர் பச்சைகளுக்கும் குடிநாட்டு மக்களுக்கும், பிணி, பிச்கு, காட்டு மிருகங்களால் அழிவு, சேதம் யாதொன்றும் வாராதபடி கட்டிக் காக்கவும் இவன் நியமிக்கப்படுகிறான். இவைகளில் இவன் தவறுவானேயாகில் பேச்சுரிமை வாய்ந்த நூறு தினசரிப் பத்திரிகைகளின் வேகத்தினுங் கூடிய கூரிய வேகமுள்ள பழிப்புரைகளை ஒவ்வொரு விநாடியிலும் தன் செவியிலேற்று, கண்டு கேட்டுத் திருந்திக்கொள்கிறான். இவன் 'நம்பிக்கை'யின் சக்தியை மதித்தவன். வாழையடி வாழையாக நம்பிக்கை இவனிடம் வளர்ந்து கொண்டு வருகிறது. இவன் செய்யும் தொண்டுக்குக் கூலி கொடுப்பது கிடையாது. அநேகமாக பூசாரி வயதில் மூத்தவனாயிருப்பது கொண்டும் சாமி காரியங்களுக்கு நடத்தக் கங்கணங் கட்டினவனானாலும் இவனுக்கே முதன் முதல் வீடும் காடும் மற்றையோர்களுடைய பங்குப் பிரகாரம் ஆக்கப்படுகிறது.

காணிக்காரன்

இவன் பாண்டி நாட்டாண்மைக்காரனை யொத்த ஒரு தலைவனாகும். இப்போதைய பாண்டி நாட்டாண்மைக்காரனை யொத்தா! அது தவறாகும். பழைய பஞ்சாயத்துப் பெரிய குடியானவனைப்போன்று இவனைச் சொல்லலாகும். அதுவும் யோசித்துப்பார்க்கும்பொழுது தவறென்றே சொல்லலாகும். சர்க்காருக்கும் குடிநாட்டுக்கும் ஊடே நின்று எதாவது காரியங்களைப் பேசி நடாத்த வல்ல ஒரு துடுக்கான இளந்தாரி யென்று மட்டும் இவனைக் கொள்ளலாம். குடிநாட்டில் இவன் ஆண்மை செலுத்த இடமில்லை. வேண்டிய வசதி யில்லை; முதலாவது மன்னான் தான் கிருஷி செய்கிற பூமிக்குத் தரை விலையோ, தீர்வையோ செலுத்துகிறது கிடையாது. தேவையான பூமிகளை, வனங்களை வெட்டி வளப்

படுத்திக் கிருஷிசெய்து கொள்கிறான். இவ்வுயர்ந்த சுதந்திர வழக்கம் தொன்றுதொட்டு நடந்து வந்தது. இன்றும் நடந்து வருகிறது. பழைய பூஞையாற்றுத் தம்பிரானின் ஆட்சி காலங்களில் வன பராமரிப்புக்காக வேண்டி ஒத்துழைக்க மன்னானை இவ்வண்ணமாகக் கட்டுப்படுத்தி யிருக்கிறார்கள். இன்றைக்கும் காருண்ய மலையாள சர்க்காருக்கும் அதை யநுசரித்தே மன்னானை நடத்தி வருகிறார்கள். சமயம் நேரும்பொழுது அரசாங்கத்தாருக்குத் துணைவழி செல்லவும் ஆங்காங்கே ஆவசியமான குடில்களைச் சமயசாந்திக்காக வேண்டிப் போட்டு வைக்கவும் அப்போதைக்கப்போதே வேலைக்குத் தகுந்த கூலியையுங் கொடுத்துப் பேணி வருகிறார்கள். கட்டாயப்படுத்தப்பட்ட சர்க்கார் ஊழியம் பரசுராம பூமியில் இல்லவே இல்லை யென்று சொல்லலாம். மேலே கூறிய காரியாதிகளுக்காக வேண்டி சர்க்கார் ஊழியன் குடிநாட்டிற்கு வந்தால் காணிக்காரன் சாவடி என்ற விருந்தகத்தில் அவனை வரவேற்று, பேச வேண்டியவைகளைப் பேசிக் குடியிலுள்ள வலியவர்களுக்கும் இளந்தாரிகளுக்கும் தெரியப்படுத்தி முடிக்க வேண்டியவைகளை முடிக்க வேண்டும். இதைத் தவிர அன்னியர் யாராவது வந்து போக நேரில் அவர்களைக் கண்டு கேட்டு விசாரித்து விருந்தோம்பி தக்க வழித் துணையோடு அவர்களை அனுப்புகிறான். இவைகள் தாம் காணிக்காரனுடைய வேலைகளாகும். இதற்குப் பிரதிப்பிரயோஜனமாக பங்காலொத்தபடி யன்றி வேறு ஒரு சென்டு பூமியும்கூட அவனுக்கு வெட்டிக் கிருஷி செய்து கொடுக்கிறார்களில்லை.

17789

வலிய இளந்தாரி

இவனே குடிநாட்டின் காரியதரிசி; இவனே உண்மையான குடிநாட்டுச் சேவகன். சேவையின் இனிய சுவையை-அரிய அமிர்தத்தை இவனே ருசித்தறிந்தவன். இவனுடைய தொண்டிலிருந்தே, ஆக்கத்திலிருந்தே மன்னானுடைய முதலில் சொன்ன பெருமை மலர்கள் பூக்கின்றன. குடியகத்தில் இவனுடைய சுறு சுறுப்பே வித்தாகிப் பயிராகித் தானியமாய் ஒருவரும் பலரும் சேர்ந்து உண்கலத்தி லுட்கார்ந்து பகிர்ந்து தின்னும் பான்மையாய்ப் பரவி நிற்கிறது. இளந்தாரிகளுக்கெல்லாம் மூத்தவன் வலியவன் ஆகமாட்டான். காரியங்களை இனிதில் எளிதில் முடிப்பவனா யிருந்தபோதிலும் இளந்தாரிகளின் ஏகோபித்த மனமில்லாமல் ஒருவன் வலிய இளந்தாரியாக மாட்டான். பதினெட்டாண்டு கழியவும் ஒருவன் இளவட்டமென் றழைக்கப்படுகிறான். அவன் பெண்ணைக் கூட்டவும் இளந்தாரி யாகின்றான், வயது நாற்பது ஆக அவன் குடியானவன். அதாவது வயோதிகனைப் போன்றும் நோயாளியைப் போன்றும்

ஒதுக்கப்பட்டுச் சுகமாய் ‘சும்மா’ என்ற சுவர்க்கத்திலிருக்க மன்னான் சட்டம் இடங் கொடுக்கிறது. 15-க்குள்ளான சிறார்கள் குஞ்சாளை யென்றழைக்கப்படுகின்றனர். அவர்களும் 40-வயதுக்கு மேல் போனவர்களும் பெண்களும் எந்தப் பொதுக் கடினமான வேலைக்கும் அழைக்கப்படுகிறார்களில்லை. இளவட்டங்களும் இளந் தாரிகளும் ஒன்றுகூடி பித்தரீ அல்லது கஞ்சி வைப்பு என்கிற விழா சமயத்தில் வலிய இளந்தாரியைத் தெரிந்தெடுத்து அன்றைய நாளை ஆட்டத்திலும் பாட்டிலும் விருந்திலும் நின்று இராப் போவது தெரியாது ஆடிப்பாடி உண்டு மகிழ்கிறார்கள்.

வலிய இளந்தாரியின் வேலைகளை ஆராய்வோமாக. இலை யுதிர் காலம் ஆரம்பித்துவிட்டது. புன்னை பூத்துவிட்டது. மலை இலவு பூத்துப் பிஞ்சாகப்போகிறது. வேடைகாலம் அதனுடைய கொடிய சூட்டைத் தவிர்க்க பச்சை வனங்களை நெருங்கித் தீயாய்த் தகிக்கிறது. காலமழை வடகிழக்கிலிருந்து எதிர்பாராத வண்ணம் பசுமைகண்ட இடத்தில் பெய்யப்போகிறதென்று கண்டவுடன் குடிநாடு புதிய வேறு ஒரு இடத்திற்குக் கிளம்புகிறது. இந்த இடத்திற்கு கடைவீடு வெட்டுகுடி யென்று பெயர். (இங்கேயே 2, 3 மாதகாலம் தாமதித்து காடு வெட்டி விதை விதைத்துப் பயிர் தெரியும்வரைக் குடியிருப்பார்கள்.) குடிநாடு ‘கடைவீடு’ வந்துவிட்டது. மறுநாள் காலை வலிய இளந்தாரி தன் ஒத்தாசைக்கு இளவட்டம் தண்டல்கார னிருவரையும் அழைத்துக்கொண்டு பொது இடத்திற்குப் போகிறான். ‘குடிநாட்டிலுள்ள கத்திபிடித்த இளந்தாரி ஒவ்வொருவனும் இன்று எங்கேயும் போகக்கூடாது. வீடு போடவேண்டி யிருக்கிறது. ஆண்டு இறுதியாகி வருகிறது. காடு சீக்கிரம் வெட்ட வேண்டும்’ என்று தண்டல்காரன் மூலியமாக குடிநாட்டிலுள்ள இளவட்டம் இளந்தாரிகளுக்குத் தாக்கல் கொடுக்கிறான். யாபேரும் தவறாது வந்து ஒன்று குழுமுகிறார்கள். பேசவேண்டியவைகளைப் பேசி முடித்து ஏகோபித்த மனதுடன் கூரை வேலையைத் துவங்குகிறார்கள் குடிநாட்டிலுள்ள குடியானவர் வயோதிகர் நோயாளிகளுக்கு வீடுகள் முதன் முதல் போட்டுக் கொடுத்ததின் பேரில் இளந்தாரிகள் தங்களுக்கு வீடு போட்டுக் கொள்கிறார்கள். யாவருக்கும் வீடு தீர்ந்ததும் காட்டு வேலை அதாவது கானலை . வெட்டித் தீக்கிரையாக்குகிறார்கள். அதுவும் வீடு கட்டிக் கொடுப்பது போலவே கையாலாகாதவர்களுக்கெல்லாம் முதலில் வெட்டிக் கொடுத்துப் பின் தங்களின் சொந்த வேலையிலீடுபடுகிறார்கள். இப்படியே முறையாக விதை விதைத்துப் பயிர்களுக்கு களையெடுத்துக் சொடுத்து பலனை யறுத்து அவரவர்கள் வீட்டில் கொண்டுபோய்ச் சேர்த்துத் துணைபுரிகிறார்கள். வேளாண்மை காலத்தில் பன்றி, மாடு, யானை யாதிய காட்டு

மிருகங்களால் பலனுக்குச் சேதம் பலத்து ஏற்படுகிறதானாலும் தங்களுடைய கூட்டுறவினால் வேலியைக் கட்டி வேலிக்கு மிஞ்சின மிருகங்களை ஒன்றுகூடிய பலரால் தூரத்தே விரட்டி வருகிறார்கள். வலிய இளந்தாரி ஒவ்வொரு நிமிஷத்திற்கும் முன்னணியில் நிற்கிறான். தான் வழியை மட்டும் காட்டுகிறானில்லை. உடனிருந்து வேலை செய்கிறான். உற்சாகப்படுத்துகிறான். கூடியிருந்தே வழி நிற்கிறான். வீடு போடுவதிலிருந்து பலன் எடுத்து வீட்டுக்குக் கொண்டுவரும்வரை அவனுக்கு ஓய்வொழிவு கிடையாது. எங்கும் எந்த நேரத்திலும் உற்சாகம் சந்தோஷத்தோடு இளந்தாரி இளவட்டங்களுக்கிடையில் யானைக் கூட்டத்தின் மத்தியில் முன்னணியில் பின்னாலே நின்று காக்கிற கொம்பனைப்போல் சுற்றித் திரிந்து வருகிறான்.

வேளாண்மை பலனுக்கு வந்துவிட்டது. ஒன்றிரண்டு கதிர்கள் தென்படுகின்றன. தள்ளைக்கூரை யென்ற தாய்வீடு (சொம்ப காலம் 9 மாதம் தங்கியிருக்கிற வீடு) முறையாய் எடுத்து அதில் தனித்தனியாய் குடியேறுகிறார்கள். அதிலேயே கதிர்களையும் மணிகளையும் பிரித்து வைத்துக்கொள்ளுகிறார்கள். முதலில் கதிரெடுத்தவன் மணியைப் பிரித்துத் தவசமாக்கினவுடன் அடுத்த குடும்பக்காரர்களுக்கு ‘இன்று எங்கள் கூரையில் விருந்து’ என்று தாக்கல் கொடுக்க, குடி நாட்டிலுள்ள இளவட்டங்களெல்லாம் விருந்துக்கு வேண்டிய இலை காய்கறிகள் சேர்க்கவும் பெண்ணிளவட்டங்கள் விறகு தண்ணீரெடுத்துக் கொடுக்கவும் புறப்படுகின்றனர். அந்திநேரமாகவும் குஞ்சாளைகளென்ற சிறுவர்கள் காய்ந்த ஈத்தைகளில் நெருப்புப்பற்ற தீவட்டிபோல் எரிபவைகளைக் கையிலே பிடித்து நிற்க, பெண்பக்கள் பரிமாரக் குடிநாட்டுமக்கள் விருந்து சாலையிலமர்ந்து உண்கின்றனர். எல்லாரும் விருந்தாடி ஒய்ந்தது, விடிய விடியக் கூத்துத்தான்; நாடகந்தான். வேளாண்மைக் காலத்தில் மிருதங்கத் தொனி சிறிதும் இடைவிடாது தொனித்துக் கொண்டே நிற்கிறது. தின்பதும் ஆடுவதும் பாடுவதுமே முக்கியமான ஜோலியாய் விளங்கி நிற்கிறது. அவ்வண்ணமாகவே ஒவ்வொரு குடும்பக்காரனும் குடிநாட்டிலுள்ள 10, 12 குடும்பக்காரர்களுக்கும் ஏகோபித்து முறையாக விருந்து நடத்துகிறான். கையிலுள்ள தவசம் ஒழியும்வரை விருந்துதான் முக்கியமாக நடைபெறுகிறது. விளைவில்லாத மற்றையக் குடிநாடுகள் விளைவுகண்ட குடிநாட்டுக்குப் போகும்பொழுது அவர்களுடைய பஞ்சம் தீர்ந்து உடல் பருத்து ஜொலிக்கும்வரை தின்ன வேண்டியவை யீந்து அவர்களுடைய குடிநாட்டிற்குப் புறப்படும் வேளையில் சுமக்கத்தக்க பாரமான தவச பண்டங்களையும் உடனெடுத்துச் செல்லக் கட்டாயப்படுத்தப்படுகின்றனர். விதைப் பண்டங்களுக்கு மட்டும் சிறிது

சிரத்தை காட்டிப் பதனப்படுத்தப் பிரயாசைப்படுகின்றனர். அதுவும் கூடுதல் பஞ்ச காலத்தில் விருந்தோம்புதலுக்கே அநேகமாக வழங்கப்படுகிறது. இம்மாதிரியாகவே வீடு போடுவதிலிருந்து காடு வெட்டு, விதைப்பு, பலனெடுப்பு, விருந்தோம்புதலாதிய ஒவ்வொன்றிலும் குடிநாட்டிலுள்ள ஒவ்வொருவருடைய கலப்பு ஒத்தாசையின் பேரிலேயே குடிநாடு ஆக்கப்பட்டுப் பாமரிக்கப்பட்டு வருகிறது. வேற்றுமை பிரிவுபாடு குடிநாட்டிற்குள் நுழைய ஒரு சிறு துவாரமுங் கிடையாது.

இளவட்டமும் தண்டக்காரனும்

இளவட்டம் தண்டல்காரனாகிய இருவரும் வலிய இளந்தாரிக்கு உற்ற துணையளிப்பவராகும். அதுபோக வேளாண்மையில் மிகுதியுங் காலஞ் செலுத்திவரும் வலிய இளந்தாரிக்கு ஒத்தாசையாகக் குடிநாட்டில் ஒழுங்கு முறைகளை நிலைநிறுத்தவும் அமைதி காக்கவும் இவர்கள் சிறிது பாடுபடக் குடிநாட்டாரால் ஏவப்பட்டிருக்கின்றனர். இவர்களுடைய ஒழுக்க முறைகளில் தவறி வீழ்வோருக்கு குற்றவாளியின் சம்மதத்தின் பேரிலேயே தண்டனை விதிக்கப்படுகிறது. இதில் நான் நேரில் ஒரு தண்டனையை வாசகர்களுக்கு எடுத்துக் காட்ட ஆசைப்படுகிறேன். என்ன! மேனாட்டார்கள் தாங்கள் எடுத்துப் புதிதாய் வெளியே விடுகிற ஒவ்வொன்றிற்கும் நவீனம் என்றும், நாகரீகம் என்றும், அனுபவம் என்றும் மாலை சூட்டி பெருமைபடுத்துகிறதன்றி மற்றையவைகளை யெல்லாம் பாமரம் கல்மனிதன் காலத்தவை யென்று இகழ்ந்து அவமதிக்கிறார்கள். இந்து மதத்தின் சாரமாகிய வேதாந்தத்தையே 'பாமரம்' என்று ஒரு சிலர் சொல்லித் தர்க்கித்துக்கொண்டிருக்கிறார்கள். இப் புனித வாழ்வையும் அத்தோடு ஒப்பிடலாம். பாமரமென்று தள்ளிவிடலாம். இருக்கட்டும்.

ஒரு எனதநுபவத்தைச் சொல்கிறேன். ஒரு சமயம் நானிருந்த ஒரு தோட்டத்தில் 30 மன்னான் கூலிகள் வேலைக்கு வந்திருந்தனர். அவர்களிலொரு சிறு பையன் வேலை செய்து போகும்போதே வெட்டி அடியிலிட்ட ஒரு மரத்துண்டின் பேரில் உட்கார்ந்து விட்டான். அது மற்றைய மன்னான் கூலிகளுக்குப் பிடித்தமில்லாதது போல் ஒருவருக்கொருவர் முணுமுணுத்துக்கொண்டிருந்தனர். எனக்கும் அவர்களிடையில் அதிகம் அப்பொழுது பழக்கமில்லை. வேலைவிட்டு வீட்டுக்கு வந்தோம். வந்தவுடன் 'வலிய இளந்தாரி' தன் சாகையிலிருந்துகொண்டு இளந்தாரிகளை யெல்லாம் "இங்கே

யெடு" என்று தண்டக்காரனிடம் ஏவியிருக்கிறான். நான் அப்பொழுது அவர்களுக்குக் கூலி கொடுத்துக்கொண்டிருக்கிறேன். கூலியை வாங்குவதை நிறுத்திவிட்டு உடன் இளந்தாரியின் சாகைக்கு நேரே செல்லலானார்கள். நானும் யாதுகாரணமென்று தெரியும்பொருட்டு அங்கே போனேன். குஞ்சாளை இளவட்டங்களென்று சொல்லக்கூடிய பெண்ணைக் கூட்டாத பதினைந்தாண்டு கழியாத இளஞ் சிறுவர்களெல்லாம் அங்கே வரிசையாக நிறுத்தப்பட்டிருந்தனர். தண்டல்காரன் கையில் குடிநாட்டடையாளமிட்ட ஒரு முத்திரைப் பிரம்பைக்கொண்டு அவர்களை நோக்கி 'நீங்கள் செய்த குற்றம் இன்னதென்று உங்கட்குத் தெரியுமா?' என்று கேட்டான்; ஆம் எங்கட்குத் தெரியும். மரத்தின் மேல் வலியோரிருக்கும்போது உட்கார்ந்தது எங்கள் பேரில் குற்றமாகும். தண்டல்காரன் 'தண்டிக்கலாமா?' இளந்தாரிகள்-'தண்டிக்க வேண்டியதுதான்;' தண்டக்காரன்-'எப்படி தண்டிக்கலாம்;' இளந்தாரிகள். 'நோக்கம்போல் குற்றத்திற்குத் தகுந்த தண்டனை' என்று சொன்னார்கள். வலிய இளந்தாரி ஆளுக்கு இரண்டடி என்று ஏவினதும் தண்டல்காரன் அங்கே நின்றிருந்த 20 நபர்களையும் வரிசைக் கிரமமாக இரண்டடி வீதம் அடித்துக்கொண்டே போய் கடைசியில் நின்று 'உங்களுக்கு புத்தி வந்ததா' என்று கேட்க 'ஆம்' என்று ஏகோபித்து இளந்தாரிகள் மூன்று தரம் அதே கேள்விக்குப் பதிலிறுத்துக் கலைந்துவிட்டனர். சகோதரர்களே! ஒருவருக்காக ஒருவர் வேலை செய்து கொடுக்கலாம். ஒருவர் செய்த குற்றத்திற்காகப் பலரும் ஞாபகமூட்டப்படுகிறது ஒழுங்கு முறைக்கு எவ்வளவு பலத்த அரணாய் விளங்குமென்பதை நீங்கள் யோசித்துப் பாருங்கள். அதுவும் குற்றவாளி குற்றத்தை ஒப்புக்கொண்டு தண்டனையும் அவனுமிருந்தே விதித்துக்கொள்கிறான். யோசித்துப் பாருங்கள், பாமரம் எங்கே தெரிகிறது?

மன்னான் ஒரு தாரத்துக்கு மேல் அவளது உயிரிருக்கும்வரை வேறு தாரம் எடுக்கக்கூடாது. மலையாள பூமியில் ரொம்பகாலமாக வதிந்து வருவதினால் மருமக்கத்தாயம் ஒரு சிறிது அவர்களுக்குள் இப்பொழுது புகுந்து வழங்கி வருகிறது. பெண்களுக்கு சுவாதீனம் நன்று கொடுக்கப்பட்டிருக்கிறது. சங்கீதப் பிரியம் மன்னானுக்கு மிகுதி; தனக்குத் தெரிந்த ஒரு சிறு பாட்டைக்கூட 4-வயதுப் பையன் ஒருவன் தாளம் தவறாது ஞாபகத்திலே படித்துப் பாடத் தொடங்கிவிடுகிறான். ஆட்டமும் அப்படியே ஆடுகிறான்.

மன்னன் வாழ்வு

மன்னன் இவனுடைய வாழ்க்கை மெச்சத்தகுந்தது. சான்றோர், இவனுடைய அரிய ஜீவியத்திலிருந்து பின்னும் படித்துப் போற்ற வேண்டிய விஷயங்கள் பல செறிந்துகிடக்கின்றன. 'மன்னன்' என்று அவனை வாயார வாழ்த்த நான் ஆசைப்படுகிறேன். ஏன்? மன்னனையும் மாதாரியையும் பார்க்கையில் 'அவன்' என்றும் முன்னிலையில் 'நீ' என்றுமே அவன் அழைக்கிறான். அவனுடைய சுத்தத் திராவிட மொழியில் மதிப்பை யுயர்த்தித் தாழ்த்திக் காட்டும் வீணான நாகரீக இலக்கணச் சொற்கள் ஒன்றிரண்டும் தவறியும் வழங்கப்படவில்லை. மரத்தையும் விலங்கையும் உயர்திணையாகப் பாவித்தே பேசுகிறான்; நடத்துகிறான். என்னே அவனுடைய தத்துவம்! பேச்சில் மட்டுமோ, வாழ்க்கையில் ஒவ்வொரு அம்சத்திலும் அப்படியே நடந்து வந்திருக்கிறான். இன்னும் சிறிது நடந்து வருகிறான். எங்கே? உலகத்தில் எந்த மூலையில் ஒருவனுக்காக கூலி யில்லாமல் ஒருவன் வீட்டைக் கட்டுகிறான். வயோதிகனுக்காகவும் கையாலாகாதவனுக்காகவும் வேண்டி எந்தச் சமூகம் பிழைப்பை உண்டுபண்ணிக் கொடுக்கிறது? உயரிய நோக்கங்களையும் அழகிய பேச்சுக்களையும் அடிக்கடி காணலாம், மேடைகளில் கேட்கலாம். செய்கையில் பார்த்தபொழுது மன்னன் சமூகம் 'ஒருவனுக்காகப் பலரும் பலருக்காக ஒருவனும்' என்று ஆக்கப்பட்டிருக்கிறது. கானவில் கிடக்கிற காய்கனி கிழங்குகளைத் தின்று கொண்டு பிறத்தியானுக்காக காட்டை வெட்டுகிறான், வேளாண்மை செய்து கொடுக்கிறான். குடிகாட்டில் ஒருவனுக்கு விளைந்தால் யாவருக்கும் அது உடன் உதவுகிறது. விளைந்ததும் உடன்பகிர்ந்து தின்கிறான். ஆண்டாண்டுதோறும் பசிப்பிணியினால் மிகுதியும் வருத்தமுற்று நொந்திருந்தபோதிலும் மிகுதியான தன் விளைபொருளை ஒரு பக்கம் க்ஷேமித்து வைக்கிறானில்லை. நாளை யென்பதே அவனுக்குக் கிடையாது. உள்ளதை யிருக்கும்வரைக்கும் திராசில் வைத்து நிறுத்துப் பகிர்ந்து சாப்பிடுகிறான். நாளை இல்லாதவனைப் போன்றே தானும் கிழங்கைத் தோண்டித் தின்று திரிகிறான். இல்லாததைக் கொண்டோ, அறியாது முன்னமே பிறர்க்குப் பகிர்ந்து கொடுத்து விட்டோமே யென்ற ஏக்கங் கொண்டோ அவன் அலைகிறானில்லை. கவலை யென்பது அவனுடைய கனவிலுங் காண்பதரிது.

இந்திய நாகரீகத்தின் உற்பத்தி ஸ்தானம்.

(மஹா கவி ரவீந்திரநாத தாகூர் அவர்கள் எழுதிய கட்டுரை யொன்றின் மொழிபெயர்ப்பு.)

திரு. **O. P.** தேசிகன் அவர்கள்.

(43-ம் பக்கத் தொடர்ச்சி.)

காளிதாஸன் ரிதுஸம்ஹாரம் என்னும் கிரந்தத்தைத் தனது கவிதா வாழ்க்கையின் ஆரம்ப நாட்களிலேயே இயற்றியிருக்க வேண்டுமென்று நான் நிச்சயமாகக் கருதுகிறேன். அதனோடே அமோகமாகப் பெருக்கெடுத்தோடும் இளங் காதலர்களின் சிருங்கார ரஸமானது விஷய இச்சை (காம வேட்கை) யென்னும் தாழ்ந்த நிலையினின்றும் உற்பவிக்கிறது; சாகுந்தளம் அல்லது குமாரஸம்பவம் போன்ற காவியங்களில் அற்புத அழகுடனும் வனப்புடனும் திகழும் தபோ நிலையின் உன்னதமான ஸ்தானத்தை அது எய்தியிருக்கவில்லை. அப்படிப்பட்ட பரிபக்குவமான தன்மையை அஃது அடைந்திருப்பதாகக் கூறவும் முடியாது. ஆனால் கவியானவர் இந்த நவயௌவனத்தின் காம வேட்கையைப் பிரபஞ்ச விலாசத்தில் புதுப் புது அழகுடன் வித விதமாகத் திகழும் இயற்கையின் கம்பீரத் தோற்றத்தோடும், எழில் நலன்களோடும் அழகு பெற இணைத்து, அதனை அகண்டாகாசத்தில் அதிசய வனப்புடன் உயிர் பெற்றுத் துடிக்குமாறு செய்திருக்கிறார். இந்தக் காவியத்திலேதான், "வசந்த கால இரவின் இனிய நிலவு, நீர்வீழ்ச்சியின் இன்னிசையுடன் கலந்தொலிப்பதும், வன ஓரத்தில் வர்ஷ காலத்தின் முதன் மழையால் குளிர்ச்சியடைந்த கடம்ப மரங்களின் கிளைகளும் இலைகளும், இன்னிளங் காற்றில் அசைந்தாடுவதும், சரத்ருதுவில் (இளவேனிற்காலத்தில்) வாத்துக்கள் கூவுவதும், வயல் வெளிகளில் நெற்கதிர்கள் முற்றி மணி பிடித்து ஆனால் முற்றிலும் பழுக்காமல் எங்கும் பசுமையான தோற்றத்துடன் விளங்க, தென்றற் காற்று மணந்தரும் மாமரங்களின் மலர்களினூடே விரைந்து செல்லுகையில், அதனுடைய உரத்த த்வனியுடன் இறைவதும்,"

இவையனைத்தும் சித்திரிக்கப்பட்டுள்ளன. இயற்கை யுலகில்—ஒவ்வொரு வஸ்துவையும் அதற்குரிய ஸ்தானத்தில் நீங்கள் பிரதிஷ்டை செய்வீர்களாயின், அது அதனுடைய கோரத் தன்மையை இழந்து விடுகின்றது. ஆனால் அவை ஒவ்வொன்றையும் தனித் தனியாகப் பிரித்து, அதனை மனித சமூகத்தின் மிகக் குறுகிய எல்லைக்குள் ஒடுக்கிவிடுவதினாலேயே, அது நோய்கண்ட ஒருவனது தேகத்தைப் போல் மிகவும் உஷ்ணமாகவும், கொதிப்படைந்து மிருக்கக் காணப்படுகிறது. காளிதாஸனைப் போலவே ஷேக்ஸ்பியர் மஹாகவியும் காதலர்களின் ஆசாபாசங்களையும், மனக் குறிப்பையும், உள்ளக் கிளர்ச்சியையும் வெளியிடும் சிறு கவிகளை யியற்றியுள்ளார்; ஆனால் அவைகளில் காமவெறியே மேலிட்டுக் காதல் மயமாகவே யிருக்கிறது. அவைகளைத் தவிர வேறு எந்த வஸ்துவுக்கும் அவற்றில் இடமில்லை; நீலார்ணவம், மந்தமாருதம் இயற்கையின் நிர்வாணத் தோற்றத்தைப் பிரகிருதியானது எவ்வாறு தனது கந்தம், ரூபம், வர்ணம் முதலிய விசாலமான போர்வையால் அலங்கரிக்கிறது என்பன போன்றவைகளுக்கு ஆங்கு சிறிதும் இடமில்லை. ஆதலின் இந்தப் பாடல்களில், பேராசையின் காட்டுமிராண்டித் தன்மையே சகிக்கமுடியாத அளவிற்கு மேலளாவி யிருப்பதாகத் தோன்றுகிறது.

குமாரஸம்பவத்தின் மூன்றாவது ஸர்க்கத்தில், மன்மதனுடைய பிரவேசத்தால் (வருகையால்) யௌவனப் பருவத்தி லேற்படும் நூதனத் துடிப்பையும், உத்வேகத்தையும் வர்ணிக்கப் புகுந்த காளிதாஸ கவி, அதை மிகவும் குறுகிய வரம்பிற்குள் திணித்து, விஷய இச்சையின் முரட்டுப் போக்கையே ஓர் முக்கிய வஸ்துவாக ஓவியம் எழுதுவதற்குச் சிறிதேனும் முயற்சிக்கவில்லை.

வசந்த காலத்தின் வருகையைக் கண்டு, "களித் தின்புறும் ஜகத் சிருஷ்டியின் மகிழ்ச்சிப் பெருக்கினிடையே, பார்வதியினுடையவும் சிவபெருமானுடையவும் அமைதியற்ற காதலேக்கத்தை வர்ணிக்கும்போது, அவர் அதைத் தாழ்மையானதோர் இழிநிலையினின்றும் உயர்த்தி, ஆதவனின் கதிரொளி யொன்றின் வேகமனைத்தும் ஓர் கண்ணாடியின் (Lens) குறிப்பான ஓரிடத்திலேயே செலுத்தப்பட்டால், எப்படி அதைக்குபீரெனத் தீப்பற்றச் செய்ய வல்லதோ அவ்வாறின்றி, ஆகாயமெங்கும் வியாபித்திருக்கும் சூரிய கிரணங்கள் எங்கணும் ஒரே ரீதியாக உஷ்ணத்தைப் பரப்புவது போல்"—அப்படிப்பட்ட உயர் நிலைமைக்கு உயர்த்தியிருக்கிறார். காளிதாஸனது அருங் காவியத்தில் சிவபிரானை மயக்குவதற்காக மன்மதன் அனுசரித்த சூழ்ச்சிகள் யாவும், பிரபஞ்ச விலாசத்தின் இயற்கை யழகுடன் லயித்து, அதன் போக்கிற் கிசைந்ததாகவே காணப்படுகின்றன.

மூன்றாவது ஸர்க்கம் மாத்திரமே யன்றி குமார ஸம்பவ காவியம் முழுவதுமே எங்கும் பரந்ததாகவுள்ள இயற்கைக் காட்சிகளை யாதாரமாகக் கொண்டே சித்திரிக்கப்பட்டுள்ளது. அந்தக் காவியத்தின் உட்பொருள் மிகவும் ஆழ்ந்த முடிவற்ற ஓர் பிரச்னையே யாகும். டாவமென்னும் கொடிய அரக்கன் வலிமை மேலிட்டவனாய்த் திடீரென்று கிளம்பி சுவர்க்க லோகத்தையே துன்பத்திலாழ்த்தி எங்குக் குழப்பத்தையும், பீதியையுமுண்டாக்கி விடும்போது அவனை அடியோடு வீழ்த்தி மடியச்செய்யவல்ல தீரமானது எப்பொழுது ஸம்பவமாகும்? (தோன்றும்?) இந்தப் பிரச்னையானது மனித வர்க்கத்தின் எல்லா காலங்களுக்கும் உரியதேயாகும். மனித வர்க்கத்தில் எல்லா வகுப்பினரிடையேயும் சகல ஜாதியினருடைய வாழ்க்கையிலேயும் புதிய புதிய ரூபத்துடன் (உருவத்துடன்) மாறி மாறித் தோன்றும் நெடுங்காலப் பிரச்னையே இது. தனிப்பட்ட ஒவ்வொருவனுடைய வாழ்வையும் இப் பிரச்னை ஓரளவுக்கு பாதித்து வராமலில்லை. காளிதாஸனுடைய காவியங்கள் அக் காலத்திய இந்தியாவில் இந்தப் பிரச்னையானது மிகவும் கடுமையானதோர் நிலைமையினை யெய்திருக்க வேண்டுமென்பதை மிகத் தெளிவாக அறிவிக்கின்றன. ஹிந்துக்களின் மனை வாழ்க்கையை மிகவும் சிறந்த முறையில் அணிசெய்வித்த எளிமையும் தன்னடக்கமும் அப்பொழுது மறைவுற்றன. மன்னர்கள் தமது அருங்கடமையின் மேன்மையையும் அருந் தொண்டையும் மறந்து தன்னலம் மிகுந்த சிற்றின்பப் பிரியர்களாக ஆய்விட்டார்கள். மற்றோர் புறத்தில் ஸிதியர்கள் படையெழுச்சி (Scythian invasions) மக்களுக்குச் சொல்லவொண்ணாத் தீங்கை யிழைத்துக் கொண்டிருந்தது.

ஊன்றி நோக்கிப் பார்க்குங்கால் அக் காலத்தில் இந்திய நாகரீகம் சுகானுபவப் பொருள்களிலும், வாழ்க்கை யின்பங்களைத் துய்ப்பதற்கின்றியமையாத ஆடம்பர வஸ்துக்களிலும், கலைகளிலும், கவிதை யுணர்விலும், தொழிற் பெருக்கத்திலும் பூரண வளர்ச்சி யடைந்திருந்தது புலப்படும். காளிதாஸனுடைய கவிதை இக் காலத்தை சிறப்பித்துக் காட்டும். நானாவிதமான சுகபோக உணர்ச்சியின்றும் பந்தத்தை மீறியனவாக இருக்கவில்லை. உண்மையில் இக் கவிகளின் வெளித் தோற்றத்தில் சில அம்சங்கள் அக் காலத்திய அரிய வேலைப் பாடுகளால்—நகாஸு வேலைகளால்—வளமையும், செழுமையும் பெற்று ஜ்வலிக்கின்றன. இந்த ரீதியாகப் பார்க்குமிடத்து காளிதாஸ கவி அவரது காலத்து மக்களின் அபிப்பிராயங்களைப் பிரதிபலித்திருப்பதாகவே—அந்த அளவிற்குப் பிரதிநிதித்வம் பொருந்தியவாகவே—கூறலாம், ஆனால் இத்த

கைய செழிப்பும் இன்பச் சுவைகளும் மலிந்த உல்லாச அரண்மனையில் அவனுடைய எண்ணமா (மனம்) னது மிக்க ஆயாஸத்துடன் வேறெதனையோ குறித்து சிந்தித்தவண்ண மிருந்தது. அவனுடைய உள்ளம் அவ்விடத்தில் பதிந்திருக்கவில்லை. சித்திரமானது வேலைப்பாட்டால் அற்புதமாகச் சோபையுடன் ஒளிவீசும்—ஆனால் அதில் பதிப்பிக்கப்பட்டிருந்த ரத்தினக் கற்களைப் போன்ற உறுதியுடன் விளங்கும்—அக் கொடுஞ் சிறையினின்றும் எவ்வாறு தப்பியோடுவது என்பதைக் குறித்துக் கனவு கண்டவாறு தான் இருந்தானவன்.

காளிதாஸன் கவிதையின் புறவுலகத்திற்கும், அகவுலகிற்கும், லக்ஷணத்திற்கும், லக்ஷியத்திற்கும் இடையேயுள்ள வேறுபாடுகளையே—போராட்டத்தையே நாம் காண்கிறோம். தனது உள்ளத்தில் வீறுன ஓர் ஆசையை-ஏக்கத்தை அருமையாகப் போற்றி வளர்த்து வரும் கவியானவர் அரண்மனையின் அரசபோகக் காட்சிகளுக்கிடையே உட்கார்ந்துகொண்டிருக்கையிலேயே, தமது நாட்களிலேயே கடந்துபோன-நெடுங்கால நினைவாகவுள்ள துறவறத்தின் தூய்மையான வாழ்நாட்களைக் குறித்து இன்ப மயமயமான கனவு கண்டுகொண்டிருந்தார். அவருடைய இந்த ஆவலும் தீராத ஏக்கமும் அவரால் இயற்றப்பட்ட ரகுவமிசத்தில்-சூரிய வமிசத்துப் பௌராணிக மன்னர்களின் வரலாறுகளையும், ஆற்றலையும் குறித்த தனது மனோகரமான குரலில் இசைக்கப் புகுந்த அவ்வருங் காவியத்தில் மறைந்து கிடக்கின்றன.

இந்திய காவிய நூல்கள் ஓர் நாடகம் துக்கரமான முடிவுக்கு வருவதை யனுமதிப்பதில்லை. அன்றியும் காளிதாஸன் தான் எடுத்துக்கொண்ட (விஷயத்திற்குப்) முயற்சிக்கும் அதனுடைய பூர்வ பீடிகைகளுக்கு மேற்பத் தன்னுடைய காவியத்தை பிரசித்தி பெற்ற ரகுவமிசம் ஸ்ரீ ராமச்சந்திரனது நல்லாசாட்சியில் மகோன்னத நிலையை யெய்தி யிருப்பதை வர்ணிக்கும் காட்சியுடன் ஓர் முடிவுக்குக் கொண்டுவந் திருப்பாராயின் தனது முன்னுரையில் கூறியுள்ளவைகளுக்கு ஓரளவு நியாம் செய்திருக்கக்கூடும். ஏனெனில் அந்தக் காவியத்தில் அவர் ரகு குலத்தில் உதித்த மன்னர்களின் ஆழ்ந்த பக்தியையும், புத்தி கூர்மையையும், பெருந்தன்மையையும் குறித்துப் புகழ்மாலை பாடுவதற்கு முயற்சிப்பதாகவே உறுதி கூறுகிறார். ஆனால் அக்காவியம் "ஸ்தோத்திர பரமாகவே" முடிவுறவில்லை! அதனுடைய முடிவு கவியின் கற்பனை வுள்ளத்தை ஏதோ அலைத்து வந்திருக்க வேண்டுமென்று மிகத் தெளிவாக காட்டுகிறது. இனி மிகவும் கீர்த்தி வாய்ந்த ரகுகுலத்தின் ஆதி புருஷன் இப் பூவுலகில் எவ்வாறு ஜனித்தான் என்பதைக் கவனிப்

போம். தனது பெற்றோர்களின் அருந் தவ வாழ்க்கையின் கொழுங்கனியாக உதித்த ரகு மன்னன் ஓர் எளிய ஆச்சிரமத்திலேயே பிறந்தான். காளிதாஸன் முடிமன்னர்களாக விளங்கும் தனது யஜமானர்களுக்கு தனது அருமையான காவியங்கள் வாயிலாகவும், இன்னும் பல்வேறு வழிகளாலும் அப்படிப்பட்ட கடுமையான வைராக்கிய நெறியாலும், துறவறத்தாலும் மட்டுமே எத்தகைய பெரும் பயனையும் அடைவது ஸாத்யமாகும் என இடைவிடாது அறிவுறுத்திய வண்ண மிருக்கிறான். "எந்த மன்னனுடைய அரிய பராக்கிரமத்தால் வடக்கு, தெற்கு, கிழக்கு, மேற்கு ஆகிய நான்கு திசைகளிலுள்ள அரசர்களனைவரும் முறியடிக்கப்பட்டனரோ, எவனொருவனுடைய இராஜ்யமானது இப் பூமண்டலம் முழுவதும் வியாபித்திருந்ததோ—அப்படிப்பட்ட ரகுமன்னன்—தனது பெற்றோர்களின் கடுமையான விரதநெறியினின்றும் மிகுந்த சீரிய வாழ்க்கையின் பயனாக முதிர்ந்துத் தோன்றிய அருங் கனியேயாவான். அன்றியும் தன்னுடைய திரண்ட பாகுபலத்தாலும். ஆற்றலாலும் ஒப்புயர்வற்ற ஆண்மையாலும் எவனொருவன் இத் தேயத்திலே மிகப் பெரியதோர் ஏக சக்ராதிபதியாகச் சிம்மாதனத்தில் வீற்றிருந்தனனோ, எந்த மன்னனிடமிருந்து நமது தேசம் "பாரத வருஷ" மென்னும் சுப் பிரசித்தி பெற்ற திருநாமத்தால் சிறப்பெய்துகின்றதோ அந்தப் பாத மன்னன் தனது தாய்தந்தையர்களின் கரைபுரண்ட காதல் வெள்ளத்தின் அருந் தோன்றலேயாவான். ஆனால் கவியரசர் இவ் விஷய இச்சையின்—காமவெறியின் சாயத்தைத் துறவறமென்னும் (தன்னடக்கமென்னும்) அக்கினியால் சுட்டு எரித்து அதைப் பச்சாத்தாபமும் துன்பமும் மிகுந்த கண்ணீர் பெருக்கால் அதைப் பரிசுத்தப்படுத்தி யிருப்பதைக் கவனித்துப் பாருங்கள்!

ரகுவமிச காவியத்தின் முதற் சருக்கம் ஓர் அரண்மனையின் அற்புதக் காட்சிகளுடன் துவக்கவில்லை. ஆனால் திலீப மன்னன் தனது வாழ்க்கைத் துணைவியான ஸுதக்ஷிணா தேவியுடன் ஓர் எளிய குடிசையில்—ஆச்ரமத்தில் பிரவேசிக்கும் காட்சியுடனேயே அது ஆரம்பமாகிறது. ஆழிசூழ் அவனியில் ஒப்பும் உவமையுமில்லாச் சார்வபௌமனாக விளங்கிய அம் மன்னன் ரிஷீச்வரரது பர்ணசாலையிலிருந்துகொண்டு மிகுந்த தன்னடக்கத்தோடும் சலியா ஊக்கத்தோடும் உற்சாகத்தோடும் அவரது காமதேனுவை மேய்த்து வரும் முயற்சியில் முழு மனதுடன் ஈடுபட்டிருக்கிறான்! ரகு வமிசத்தின் ஆரம்பக் காட்சியானது ஸன்மார்க்க ஒழுக்கங்களுக்கும் கடுமையான விரத நியமங்களுக்கு மிடையில் துறவியின் உறைவிடமாம் ஓர் குடிசையிலே அமைக்கப் பட்டிருக்கிறது. ஆனால் அதனுடைய

அவஸானமோ (முடிவோ) குடித்து ஆடிப்பாடி மகிழ்ச்சியுறும் களியாட்டங்களிலும் காமவெறியால் கூத்தாடுவதிலும் முற்றுப் பெறுகிறது! இந்தக் கடைசி ஸர்க்கமான அபரிமிதமான வருணனைப் பகட்டுகளால் பேரொளியுடன் ஜ்வலிக்குமாறு தீட்டப்பட்டுள்ளது. ஆனால் அந்தப் பேரொளியானது-சோதியானது நமது கிரஹங்களையே தகித்து இவ்வுலகில் சொல்லவொண்ணாத் தீங்கையும் நாசத்தையும் விளைவிக்கும் அக்கினியின் ஜ்வாலைகளையே போன்றதாகும். திலீப மன்னனுடையவும், அவனுடைய ஏக பத்தினியாம் சுதக்ஷிணா தேவியுடையவும் ஆச்ரம வாழ்க்கையைக் காளிதாஸன் மிகவும் நிதானமான அடக்கமான-பகட்டில்லா நிறங்களில் தீட்டியிருப்பது ஓர்புறமிருக்க, அக்கினி, வர்ணன் தனது கணக்கற்ற பட்டமஹிஷிகளுடன் இன்பம் துய்ப்பதையும் களியாட்ட வெறிகளில் மூழ்கித் திளைத்தின்புறுவதையும் தனது அபூர்வமான தூலிகையால் மிகவும் விரிவாக ஜ்வலிக்கும் நிறங்களில் தீட்டியிருக்கிறார்.

உஷக்காலம்! எவ்வளவு சாந்தி மயமாக சடை முடி தரித்த ஓர் ரிஷி புத்ரனைப்போல எவ்வளவு பரிசுத்தமாக விளங்குகிறது! மெல்ல மெல்ல அது பனி தோய்ந்திருக்கும் பூமியைநோக்கி நகர்ந்த வண்ணம் உலகெங்கும் தனது மெல்லிய, முத்துப்போன்ற சாந்தி ஒளியைப் பரப்புகின்றது. மக்கள் புத்துயிரும், புதிய உற்சாகமும் பெற விருப்பதையறிவித்து, உலகமனைத்தையும் விழிப்பூட்டுகிறது! அம்மாதிரியாகவே, காளிதாஸனுடைய காவியத்திலும் ரகுவம்சத்தின் 'உற்பத்தியும்' (பிறப்பும்) துறவறத்தின் அரும் பிரயாசையால் சம்பாதிக்கப்பட்ட ராஜரீக சக்தியின் மேன்மையும் அதி மாதுர்யமாகவும், மொழியடக்கத்தோடும் சோபிக்கிறது. ஆனால் மாலைப் பொழுதோ?—மாலைநேரம், பல வர்ணங்களுடன் (திகழும்) மேக பந்திகளிடையே சிக்கிக்கொண்டு, அது மேற்றிசை வானத்தைத் தனது ஆச்சர்யமான கிரணங்களால் சிறிது நேரம் வரையில் ஒரேயடியாகத் தீப்பற்றி யெரிவதுபோல செய்விக்கிறது; ஆனால் மறுக்கணமே மாலைப் பொழுதின் இணையற்ற அழகையும் பறித்து, அதை முடிவில் பேச்சற்ற, உயிரற்ற, உணர்ச்சியற்ற காடாந்தகாரத்திலாழ்த்தும் அதி பயங்கரமான மரணத்தின் தோற்றம் புலனாகிறது. ரகு வம்ச காவியத்தின் கடைசி ஸர்க்கத்தில் ரகு வம்சத்தினரின் மறைவு, முடிவு கணப் பொழுதில் தோன்றி மறையும் ஓர் எரி நக்ஷத்திரத்தைப்போல காம நுகர்ச்சிகளுக்கும், இன்பக் கோலாகலங்களுக்கும் நிலைக்களன்களாகவுள்ள சுகானுபவக் காட்சிகளுக்கிடையே தனது பெருமையை யிழக்கிறது. அக் காவியத்தின் ஆரம்பத்திற்கும் முடிவுக்குமுள்ள வேற்றுமையில் மிகவும் ஆழ்ந்ததோர் உட்

பொருள் அடங்கியுள்ளது. கவியானவர் மிகவும் அமைதியாக உட்கார்ந்து கொண்டு, "முற்காலத்தில் இந்தியா இருந்த மேன்மையென்ன? அவள் இப்பொழுதுள்ள நிலைமையாது?" மனித கோடியின் விகாஸ முறையான அவ்வாதிகாலத்தில், துறவறமே கிடைத்தற்கரிய அரும்பெருஞ் செல்வமாகக் கருதிப் போற்றப்பட்டது. இப்பொழுதோ தேசத்தின் சீரழிவே நம்மை எதிர்நோக்கியிருக்கும் இக்காலத்தில், டாம்பீக சுகானுபவப் பொருள்களுக்கு யாதொரு எல்லையும், முடிவுமில்லை. இன்ப வாழ்க்கையென்னும் பேராசை மிகுந்த ஜ்வாலாக்கினியானது நாற்புறமும் தழல் வீசி யெரிந்து நமது கண்களைப் பறித்துவிடுவதுபோல் ஒளி செய்கிறது" என்பதை நினைத்து ஏங்குகிறார்கள்.

நிகழ் காலத்திற்கும், இறந்த காலத்திற்கும் உண்மையான இலட்சியங்களுக்கும், கடந்து போன இலட்சியங்களுக்குமிடையே நிகழும் போராட்டம், காளிதாஸனது கிரந்தங்கள் பலவற்றின் வாயிலாக மிகத் தெளிவாகப் புலனாகிறது. அப் பிரச்னையை எவ்வாறு தீர்க்கலாமென்பதற்குக் குமாரஸம்பவம் ஓர் வழிகாட்டியாக வுள்ளது. இவ்வருங் காவியத்தில் காளிதாஸ கவியானவர், வைராக்கியத்தைச் செல்வத்தோடும் விஷய இச்சையைத் துறவறத்தோடும் பிணைப்பதால் மட்டுமே உண்மைச் சக்தியானது—பலமானது தோன்றுமென்றும் அந்தச் சக்தியொன்றின் வலுவினாலேயே மனிதன் அபஜய பணைத்தையும் தனது காலால் மிதித்து மேலே எழும்பி, விஜய விலாஸனாக ஆகக்கூடுமென்பதையும் அறிவிக்கிறார்.

வேறு மொழிகளில் பூர்ண சக்தியென்பது தன்னல மறுப்பை, விஷயானுபவங்களுடன் பொருத்துவதிலேயே அடங்கியுள்ளது. தியாக ஸ்வரூபியான சிவபிரான் தனிமையாகச் சிந்தனையில்—தியானத்தி லாழ்ந்திருக்கையில், தேவலோகமனைத்தும் தற்காப்பின்றியிருக்கிறது; மற்றோர்புறத்தில் தனது தந்தையின் அரண்மனையில் சுகானுபவங்களிலும், சந்தோஷத்திலும் மூழ்கியிருக்கையில் அரக்கர்கள் (அசுரர்கள்) வெற்றி முழக்கத்துடன் ஆரவாரிக்கிறார்கள்.

நம்முடைய விஷய இச்சைகள் கோரத் தன்மையை அடையும் போது விஷயானுபவங்களுக்கும், தியாக வுணர்ச்சிக்குமுள்ள ஒற்றுமையானது கலைத்துவிடப்படுகிறது. நாம் நமது அகம்பாவத்தையும், விஷய இச்சையையும் மிகவும் குறுகியதோர் எல்லைக்குட்படுத்தி, அதன் மீதே நமது முழுக் கவனத்தையும் செலுத்தும் போது, நாம் ஓர் பூரண வஸ்து முழுவதையும் புறக்கணித்துவிட்டு,

அதனுடைய ஓர் பகுதியையே—பாகத்தையே பெரிதாக்க முயற்சிக்கிறோம். இதனின்றும் தீமையே விளைகிறது. கேவலம் ஓர் பகுதியினிடத்தே நாம் கொண்டிருக்கும் பற்றுதலின் காரணமாக, ஓர் வஸ்துவின் ஸ்வரூப மனைத்தையும் நாம் மறந்துவிடுவதற் கெதிராகத் தோன்றும் போராட்டமும், எதிர்ப்புமே பாபமென்பதாகும்.

ஆதலின் தியாகமும், தன்னல மறுப்பும் எவ்வளவு இன்றியமையாத தென்பது நமக்குப் புலப்படும். நம்மைப் பூர்ணமானவர்களாக அலங்கரித்துக் கொள்வதற்காகவே யன்றி நம்மை அடியோடு நிர்வாணமாகச் செய்துகொள்ளுவதற்கு அது அவசியமன்று. துறவென்பது ஓர் முழுத் தோற்றத்திற்காக அதனுடைய பகுதியை விட்டுக்கொடுப்பதாகும். நிரந்தரமான ஓர் வாழ்விற்காகத் தாத்காலீக வாழ்வை விட்டுக்கொடுப்பது; வேறொருவனுக்காகத் தனது சொந்த நலங்களைத் தியாகம் செய்வது; பேரின்பத்திற்காகச் சிற்றின்பத்தைத் துறப்பது; அதனால்தான் நமது உபநிஷத்துக்கள் "த்யக்தேன புஞ்ஜைதா," ("தியாகத்தின் மூலம் இன்பமெய்துக.") தீய நெறிகளல்லாது உண்மை நெறியிற் செல்லுக எனக் கோஷிக்கின்றன. பார்வதி தேவி மன்மதனது சகாயத்தால் சிவபெருமானையடையத் தவறியதையும், அதே உத்தேசத்துடன் அனைத்தையும் தியாகம் செய்து, கடுந் தவமியற்றிய பின் தனது கோரிக்கையை யீடேற்றிக் கொண்டதையும் கவனித்துப் பாருங்கள்!

விஷய இச்சை என்பது ஓர் பூர்ண வஸ்துவன்று; அதனுடைய ஓர் பாகத்தைக் குருட்டுத்தனமாகப் பின்பற்றி யிருப்பதேயாகும். ஆனால் 'சிவ'மென்பதோ (மங்களத்தை யளிப்பது) எல்லாக் காலங்களுக்கும், எல்லாத் தேசங்களுக்கும் பொதுவாக உரியதாகும். நமது மனத்தினின்றும் விஷயேச்சையையும் அதன்பாலுள்ள அளவு கடந்த பற்றுதலையும் அறவே அகற்றினாலன்றி அவரை யடைவது எளிதன்று.

"த்யக்தேன புஞ்ஜைதா:- தியாகத்தினால் இன்பங்களை அனுபவியுங்கள்! உபநிஷத்துக்களின் இந்தப் படிப்பினையே குமார ஸம்பவத்தின் உட்கருத்தும், முக்கியஸாரமும் ஆகும். நமது பூர்வீக ஆச்சிரமங்களில் மிகுந்த பக்தியுடன் போற்றப்பட்டதும் அஃதொன்றேயாம். தியாகம் செய்வதன் மூலம் மேலான இன்ப நிலையினையெய்துக!

இந்திய மாதா வேண்டுவதென்ன?

காலஞ் சென்ற பாஞ்சால சிங்கம்

ஸ்ரீயுத லாலா லஜபதி ராயின் உபதேச ரத்னங்கள்.

இந்திய மாதா வேண்டுவதாவது:—

1. "கட்டளை யிடாமல் அன்புகொண்டு கல்வி பயில்விக்கும் பெற்றோர்களும்,

2. தாங்கள் சொல்வதே தேவ வாக்கென்றும், அதையே ஒப்புக்கொள்ள வேண்டுமென்றும் எதிர்பாராமல், மாணவர்கள் தாங்களே ஆராய்வதற்கும் ஆசிரியரின் அபிப்பிராயத்திலிருந்து மாறுபடுவதற்கும் இடம் கொடுக்கும் உபாத்தியாயர்களும்,

3. கட்டளை பிறப்பிக்காமல் ஜனங்களை நடத்திப் போகக்கூடிய தலைவர்களும்,

4. அபிப்பிராயப் பேதங்களும் நோக்க பேதங்களும் இருந்தபோதிலும், உதவி செய்யும்படியானவும், அபிப்பிராயப் பேதங்களுக்காகச் சண்டை போடாமலும் தனிப்பட்ட ஹோதாவில் சில்லரை விஷயங்களில் புண்படாமலும் பரஸ்பர மரியாதையாகவும் உதவி புரிகின்றவர்களாகவும் இருக்கும் சிநேகிதர்களும்,

5. சித்தாந்தத்தை போதிக்காமலிருக்கின்ற குருக்களும்,

6. ஆட்டைப் போல் தான் சொன்னபடியே தன்னைப் பின்பற்றி நடக்க வேண்டுமென்று தொந்திரவு செய்யாத மந்திரிகளும்,

7. கொடூரம் செய்யாமலும், தங்கள் மனைவிமார்களை அவர்களின் ஸ்வதந்திரத்தைப் பறிக்காமல், அவர்களுடன் அன்புகொண்டு அவர்களுடன் சேவை செய்யக்கூடிய கணவன்மார்களும்,

8. சில்லரை விஷயங்களைக் கவனிக்காமல் அடிப்படையான விஷயங்களைக் கவனிக்கும் தேச பக்தர்களும்,

9. கொஞ்சம் கஷ்டம் நேர்ந்த போதிலும் பிறரை கண்ணியப்படுத்துவதால் தமது சாமர்த்தியத்தை விருத்தி செய்யத் தருணத்தை எதிர்பார்த்தும் சொந்த லாபத்தை மாத்திரம் கருதாமல் சுயநலமின்றி, மனுஷத் தன்மையையும், கௌரவத்தையும், சுயமரியாதையை

யுமே கவனித்தும் இதற்காகத் தொண்டு செய்து கஷ்டப்படுவதையே சந்தோஷமாக ஏற்கும் இந்திய வாலிபர்களும்,

10. தங்களை குழந்தை உண்டாக்கும் இயந்திரமாக மதித்து அடிமைகளாகவும், கேவலமாகவும் நடத்துவதற்கு இடங் கொடுக்காமலும், தங்களுடைய அன்டையும் பக்தியையும் விட்டுவிடாமலும் இருக்கும் மனைவிமார்களும்,

11. தாங்கள் அரசாட்சி செய்யாமல் தங்களைத் தாங்களே ஆட்சி புரிவதற்குப் பிரஜைகளைத் தூண்டி உற்சாகப்படுத்தும் அரசர்களும்,

12. தங்களுடைய கௌரவத்தையும் மதிப்பையும் அதிகமாக கவனிக்காமல் நியாயம், சரியான முறை, பொதுநலம் இவற்றையே அதிகமாகக் கவனிக்கும் கவர்னர்களும்,

13. கிரேட் பிரிட்டனைக் காட்டிலும் அதிகமாக இந்தியாவின் நன்மையையே நாடும் வைஸ்ராய்களும்,

14. தங்களுடைய பணத்தையே பிரதானமாகக் கருதாமல், தங்களுடைய குடிகளின் வாழ்வுக்கு வேண்டிய அத்தியாவசியத்தையே அதிகமாகக் கருதும் நிலச்சுவான்தார்களும்,

15. பட்டம், பதவி, ஜாகீர்களைப் பொருட்படுத்தாமல் சத்தியத்தையே மேலாகக் கருதும் பிரபலஸ்தர்களும்,

16. உபாத்திமைத் தன்மையையும், நிபுணத் தன்மையையும் அதிகமாகக் கவனிக்காமல் மனித வர்க்கத்தையே உயர்வாகக் கருதும் கல்விமான்களும்,

17. கிளர்ச்சிக்காரராக இல்லாமல், சத்தியத்தையும் உண்மை விஷயங்களையும் நன்கு விவரிக்கும் உபன்யாசிகளும்,

18. தங்களுக்குள்ளே உண்டாகும் சில்லரைச் சச்சரவுகளை விளம்பரப்படுத்தாமல் நல் விஷயங்களையே வெளியிடும் பத்திராதிபர்களும்,

19. பொய் விஷயங்களையும், அனாவஸ்யமான செய்திகளையும் திரித்து அனுப்பாமல் உண்மையான விஷயங்களையே மேலாகக் கருதும் பத்திரிகை நிருபர்களும்,

20. தங்களது அதிகாரம், பிரசித்தம், பணம் ஆகிய இவைகளைக் கவனியாமல் தேசத்தின் நன்மையையே கருதும் ஸ்தாபனங்களும்,

ஆகிய மேற்கண்டவைகளையே நம் பாரத மாதா இன்று வேண்டுகிறாள்.''

அல்லா ராம். *

திரு. S. V. வெங்கடநாராயண சர்மா அவர்கள், B. A., B. L.

நமது கஸ்பாவிலிருக்கும் இனாயத் அலி நேற்றுவரையில் முசல்மானா யிருந்தார். அவருடைய பரிவாரம் கேவலம் இந்த ஏழு வருஷங்களாகவே மசூதியில் முழந்தாளிட ஆரம்பித்தது. அதற்கு முன்பு அவருடைய தலையிலும் குடுமி இருந்தது. நெற்றியில் திலகமும் இருந்தது. வீட்டில் பூஜைப் பெட்டியும் இருந்தது. நமது புத்தியற்ற இந்து சமூகம் அவர்களை பலாத்காரமாகக் கோவிலிலிருந்து மசூதிக்குத் தள்ளிவிட்டது.

அவர்கள் மகமதியர்கள் ஆன விஷயம் கீழ் வருமாறு. இனாயத் அலியின் தகப்பன் உல்பத் அலி ஹிந்துவா யிருக்கும்போது, தேவநந்தன் பிரசாத் என்று பெயர் வைத்துக்கொண் டிருந்தார். அவரால் ஒரு பெரிய குற்றம் ஏற்பட்டுவிட்டது. ஒரு நாள் ஒரு ஏழைப் பெண் அவரிடத்தில் சரணமடைந்தாள். அவளது ஊர் பெயர் விசாரிக்கும் பொழுது, ஏதோ ஓர் ஊரின் பெயரைச் சொன்னாள்.

''நான் முற்றிலும் அநாதை; என் கணவன் இறந்து ஆறு மாதங்களுக்கு மேல் ஆயிற்று; அவர் இருந்தவரையில் எனக்கு யாதொரு குறைவாவது கவலையாவது இல்லை. ஜமீன்தாரிடத்தில் வேலை செய்து நான்கு பைசா சம்பாதித்துக் குடும்பத்தை சம்ரக்ஷணை செய்து வந்தார். அவர் உயிரோடிருந்த காலத்தில் ஏழையாயிருந்த போதிலும் நான் யாரிடத்தும் கூலி வேலை செய்ததில்லை. ஆனால் அவர் இறந்துபோன பிறகு என் வயிறு வளர்ப்புக்காக வெளியில் வந்து என் முகத்தை எல்லோருக்கும் காட்டுவதில் எனக்கு மிகவும் அவமானமாக இருந்தது. ஆகையால் அந்தக் கிராமத்தை விட்டு இப் பட்டணத்தில் வேலை தேடும் பொருட்டு வந்தேன், எனக்கு உண்ணுவதற்கு நாழியும், உடுப்பதற்கு நான்கு முழத்தையுந் தவிர வேறொன்றும் அவசியம் இல்லை. கடவுள் உங்களுக்கு ஏதோ அருளியிருக்கிறார். ஆகையால் என் நிலைமையைக் கண்டு மனமிரங்குங்கள். தயவுசெய்து தங்கள் வீட்டில் ஒரு மூலையில் எனக்கு இடங் கொடுங்

* ஸ்ரீ உக்ர என்பவர் ஹிந்தியில் எழுதிய கதையின் மொழிபெயர்ப்பு.

கள். என்னுடைய பாக்கி வாழ்நாளை ஈஸ்வரன் பெயரைச் சொல்லிக்கொண்டே கழிப்பேன். உங்களுக்கும் கருணைக் கடவுளின் அன்பு உண்டாகும்.''

அவள் தான் ஓர் இடைச்சி என்று சொல்லிக்கொண்டாள். தேவநந்தன் பிரசாத் இளகிய மனமுடையவர். ஸ்திரீயின் கதியைப் பார்த்து அவருக்கு இரக்கம் உண்டாயிற்று. அவருடைய மனைவியும் அவளுக்கு உதவிசெய்ய விரும்பினாள். ''ஏன் வீட்டிலேயே வைத்துக்கொள்ளுகிறதுதானே? வீடு வாசல் மெழுகவும், பத்துப் பாத்திரம் தேய்க்கவும் ஆகிறது. வீட்டுக்குத் தண்ணீர் சுடுப்பாள். நான்கு கவளம் அன்னம் உண்டு விழுந்துகிடக்கிறாள் பாவம்.''

அப்படியே ஆயச்சியும் வேலையில் அமர்த்தப்பட்டாள். இரண்டு மாதம்வரையில் வீட்டு வேலையைச் சரிவரக் கவனித்து வந்தாள். ஒரு நாள் திடீரென்று இடிவிழுந்தாற்போ லாயிற்று. எங்கிருந்தோ ஒருவன் தேடித்தேடிக் கடைசியில் தேவநந்தன் வீட்டு வாயிலை அடைந்து

''ஐயா அவர்களே! தாங்கள் ஏதாவது புது வேலைக்காரி அமர்த்தியிருக்கிறீர்களா?''; என்றான்.

''ஏன் அப்பா! நீ எதற்காக அதைப்பற்றிக் கேட்கிறாய்?''

''ஸ்வாமீ! இரண்டு மாதங்களாக என் மனைவி எங்கேயோ ஓடிவிட்டாள். நான் அவளைத் தேடிக்கொண்டு நாலா பக்கங்களிலும் திரிகிறேன். ஏதோ ஒரு சின்னஞ்சிறு விஷயத்திற்காகக் கோபித்துக்கொண்டு ஓடிப்போய்விட்டாள். பெண்களின் ஜாதி, தங்கள் பிடிவாதத்திற்கு எதிரில் ஆண்பிள்ளைகளின் மான அவமானத்தைக்கூடப் பொருட்படுத்துகிறதில்லை!''

அதே சமயத்தில் இடுப்பில் குடமும் கையில் கயிறும் எடுத்துக்கொண்டு ஆயச்சி வீட்டிலிருந்து வெளியே கிளம்பினாள். அவளைக் கண்டவுடன் அந்த மனிதன் ஒரே பாய்ச்சலில் அவள் அருகே சென்றான்.

''அடீ பிரோஜா! இது என்ன? நீ யாருக்காக ஜலம் எடுத்துக்கொண்டு வரப்போகிறாய்?''

அதற்குள் தேவநந்தன் பிரசாத், ''ஓய்! இங்கே வாரும்! இது என்ன பைத்தியக்காரத்தனம்! நீர் யாரை பிரோஜீ என்று அழைக்கிறாய்? அவள் என்னுடைய வேலைக்காரி. எங்களுக்காகவே தண்ணீர் கொண்டுவரச் செல்லுகிறாள். அவள் பெயர் பிரோஜீ அல்ல ருக்மணி. முன் பின் அறியாத பெண்ணை இவ்வாறு அவமானப்படுத்த உனக்கு வெட்கமில்லையா?'' என்று கடுகடுத்துச் சொன்னார்.

திடீரென்று கோபத்தில் இவ்வாறு சொல்லிவிட்டார். ஆனால் ருக்மணியின் முகத்தின்மேல் அவரது பார்வை விழுந்ததோ இல்லையோ, அவருடைய புத்தியெல்லாம் பஞ்சாய்ப் பறந்தது. இந்தப் புது மனிதனைப் பார்த்தவுடன் ருக்மணியின் முகம் கருத்துவிட்டது. அவள் கல்லாகச் சமைந்துவிட்டாள். ருக்மணியை பிரோஜீ என்று அழைத்தவன்,

''ஸ்வாமீ! நீங்கள் ஏமாற்றப்பட்டீர்கள். இவள் இந்துவல்ல, மகமதிய ஸ்திரீ. இவள் ருக்மணி அல்ல. வீட்டை விட்டு ஓடின என் மனைவி பிரோஜீ'' என்றான்.

தேவநந்தன் சரீரத்தை அப்போது அறுத்திருந்தால் அதில் இரத்தம் இருந்திருக்காது.

2

சாயந்திரம் வீட்டு எஜமானர்கள் உலவி வருவதற்கும், சிநேகிதர்களைச் சந்திப்பதற்கும், டென்னிஸ் ஆடுவதற்கும் வெளிக் கிளம்பின பிறகு ஊரிலுள்ள கிழட்டு ஸ்திரீகளும், யௌவனப் பெண்களும் தங்கள் வீட்டுத் திண்ணைகளில் உட்கார்ந்து, தேவநந்தனையும், பிரோஜீயையும்பற்றி வம்பளக்க ஆரம்பித்தார்கள்.

''அடே அப்பா! ஒரு பெண்ணுக்கு இவ்வளவு தைரியமா? புருஷனை விட்டுவிட்டு, வேறு தேசத்திற்கு ஓடிவந்து, இதுவும் வேறொருவர் வீட்டுக்குள் புகுந்துகொள்ளுவதா?'' என்று ராக ஆலாபனையை ஆரம்பித்தாள்.

''இருந்தது என்னவோ துலுக்கச்சி ஆய்விட்டாள். அடி அம்மா ஆயச்சி. இந்தத் துலுக்கச்சிக்கு வெட்கம் என்பது கிடையாது. அதனால்தான் தன் கணவனை விட்டு வேறொருவனிடம் வந்துவிட்டாள். எனக்கென்னவோ வீட்டை விட்டு வெளியே கிளம்புவதென்றால் நாக்கைப் பிடுங்கிக்கொள்ளுவதுபோல் இருக்கிறது. இவளென்ன பொம்மனாட்டியா? அது ஏதோ ஒரு தொண்டு'' என்று ஒரு சுமங்கிலி சொன்னாள்.

அப்போது சுமார் 40 வயதுள்ள ஒரு ஸ்திரீ, ''இப்போது ரகுநந்தன் தகப்பனாருக்கு என்ன ஆகிறது பார்! இரண்டு மாதம்வரை துலுக்கச்சியின் தண்ணீரைக் குடித்துவிட்டுத் தன் மதத்தையே இழந்துவிட்டார். எங்க ஆத்துக்காரர் அவர்கள் வீட்டுக்கே போகக்கூடாது என்று சொல்லிவிட்டார்.''

''அவர்களோடு சம்பந்தம் எப்படி வைத்துக்கொள்ளுவது? ஜாதி என்பது மெல்லிய நூல் போன்றது. சிறிது இங்கும் அங்கும்

அசைத்தாலே அறுந்துபோகும். அதுவும் நமது ஹிந்து தர்மமோ! சிவ! சிவ! யாரைத் தொடவே கூடாதென்று வேதங்கள் சொல்லுகின்றனவோ, தூங்கி எழுந்து யார் முகத்தில்கூட விழிப்பது பாபம் என்று எழுதியிருக்கிறதோ அப்படிப்பட்டவள் கையில் தண்ணீர் குடித்துவிட்டான். முழுகியே போய்விட்டது. தேவநந்தனுடைய குடியே முழுகிவிட்டது. இப்போது அவனோடு சம்பந்தம் வைத்துக்கொண்டு, இனி இகலோகத்தையும், பரலோகத்தையும் இழக்கத் தயாராவார்கள்'' என்று முதலில் பேசிய கிழவி ஆரம்பித்தாள்.

அதைக் கேட்டுக் கலியாணமான பெண், "இந்தச் சமாசாரம் ஊர் எங்கும் பரவிவிட்டது. ஏதோ இரண்டு மூன்று பேருக்குமட்டும் தெரிந்திருந்தால் மறைக்கலாம். இன்று காலமே அந்தத் துலுக்கச்சியின் புருஷன் அவள் தலைமயிரைப் பிடித்து இழுத்துக்கொண்டு நையப் புடைத்துக்கொண்டே சென்றான். எல்லாரும் பார்த்தார்கள். எல்லாருக்கும் தெரியும்'' என்றாள்.

மறுநாள் ஊர் முக்கியஸ்தன் தேவநந்தனைக் கூப்பிட்டு "இதோ பார் தேவநந்தா! நீ இன்று முதல் வேறு கிணற்றிலிருந்து ஜலம் எடுத்துக்கொள்ள வேண்டியது'' என்றார்.

"ஏன்?''

"நீ இப்போது இந்து அல்ல; துலுக்கன். இரண்டு மாதங்களாக துலுக்கச்சியால் பாத்திரங்கள் கழுவப்பட்டு, துலுக்கச்சி கைத் தண்ணீரைக் குடித்த பிறகுமா உன் இந்து மதம் நிற்கும்?''

"நான் தெரிந்துகொண்டா துலுக்கச்சி கைத் தண்ணீரைக் குடித்தேன்! அவள் என்னை ஏமாற்றிவிட்டாள். தெரியாததற்கு தோஷம் இல்லை. இதில் என் குற்றமென்ன?

"அப்பா! நாமோ ஹிந்துக்கள். யாராவது வேண்டுமென்றே பசுவைக் கொல்லவேண்டுமென்று அதன் கழுத்தில் கயிற்றைக் கட்டுவார்களா? அப்படியிருந்தும் கட்டப்பட்ட மாடு இறந்துவிட்டால், அந்தப் பசுக் கொலையின் பாபம் கட்டினவனைத்தான் சேரும். அதற்குப் பிறகு பிராயச்சித்தம் செய்துகொள்ளுவது அவசியம்.''

"நீங்கள் சொல்லுவது சரியான பேச்சு. அவள் போன பிறகு நான் வீடு முழுவதும் சுண்ணாம்பு பூசினேன். மண் பாத்திரங்களை எல்லாம் மாற்றினேன். பித்தளைப் பாத்திரங்களை நெருப்பில் சுத்தம் செய்தேன். இன்னும் என்ன பிராயச்சித்தம் வேண்டுமோ அதையும் செய்யத் தயாராயிருக்கிறேன். நான் எங்கேயாவது ஓடியா போகப்போகிறேன்.''

பிராயச்சித்தத்தின் பேச்சு வந்தபிறகு பண்டிதர்களும் புரோகிதர்களும் அழைக்கப்பட்டார்கள். அவர்கள் நான்கு வேதங்களையும், ஆறு சாஸ்திரங்களையும், 36 ஸ்ம்ருதிகளையும், 18 புராணங்களையும் புரட்டிப் புரட்டிப் பார்த்துக் கடைசியில் "தேவநந்தன் முற்றிலும் மிலேச்சன் ஆய்விட்டான். இனிமேல் எவ்விதத்திலும் அவன் இந்து ஆக முடியாது'' என்று பைசல் சொல்லிவிட்டார்கள்.

தேவநந்தனது அவஸ்தையைக் கண்டு மகமதியர்கள் சந்தோஷமடைந்து, அவனைத் தங்கள் மார்போடணைத்துக்கொள்ளக் கைகளை விரித்தார்கள். கஸ்பாவிலுள்ள பிரபலமான மகமதியர்களும் தேவநந்தனை மிகுந்த அன்போடும் மரியாதையோடும் தங்கள் பக்கம் இழுத்தார்கள்.

"நீங்கள் எங்களிடம் வந்துவிடுங்கள். நாங்கள் ஜாதி வித்தியாசம் பாராட்டுகிறதில்லை. கேவலம் உரிமை ஒன்றுதான். இஸ்லாம் மதம் அன்பு நிறைந்தது. அல்லா ஏழைகளைக் காப்பவர். ஹிந்துக்கள் உங்களை உதைத்துத் தள்ளினால், நாங்கள் எங்கள் தலைகளின் மேல் உட்கார வைத்துக்கொள்ளுவோம்.''

வேறு வழியில்லாமல் அவமதிக்கப்பட்டுத் திரஸ்கரிக்கப்பட்ட தேவநந்தன் தன் பரிவார சகிதமாய் அல்லாவில் சரணம் புகுந்தார். வேறு என்னதான் செய்வார் பாவம்! மனிதன் இயற்கையாகவே சமூகப் பிரியன். அநுதாபத்தைக் கோருபவன். அன்பை விரும்புகிறான். ஹிந்து சமூகம் அவனை வெளியே தள்ளி எல்லாக் கதவுகளையும் தாளிட்டுக்கொண்டது. இவ்வளவும் ஆய்விட்ட பிறகு முசல்மான் ஆவதைத் தவிர தேவநந்தனுக்கு வேறு மார்க்கம்தான் என்ன? தேவநந்தன் உல்பத் அலி ஆகிவிட்டான். அவன் மகன் ரகுநாதன் இனயத் அலி ஆகிவிட்டான்.

ஹிந்து சமூகத்தால் குரூரமாகத் தாக்கப்பட்ட இருதயத்தையுடைய தேவநந்தன் மகமதியன் ஆன ஒன்பது மாதத்திலேயே மனமுடைந்து பரகதியை அடைந்தான்.

3

மேலே சொன்ன சம்பவங்கள் நிகழ்ந்து ஏழு வருஷங்கள் கழிந்தன. கஸ்பாவின் நிலைமையும் அதற்குள் முற்றிலும் மாறிவிட்டது. முதலில் அங்கே சமூக (Social) அல்லது அரசியல் வாழ்வு (Political Life) கொஞ்சமாவது காணப்படவில்லை வயிற்றுப் பிழைப்பையே பிரதானமாக எண்ணிவந்தார்கள். தாலுகா ஆபீசேதான் கோயில்.

சாயந்திரமானவுடனே நாலைந்து முகஸ்துதிக்கார தனவான்கள் தாசில்தாரோடு டென்னிஸ் ஆட வருவார்கள். பேருக்குமாத்திரம் ஹிந்து ஆரியன் என்று சொல்லிக்கொண்டிருந்தார்கள். ஆனால் உண்மையான ஹிந்து, உண்மையான ஆரிய மதஸ்தன் ஒருவனாவது கிடையாது. ஒரு கனவான் ஆக்ராவிலிருந்து "ஆரிய மித்திரன்" பத்திரிகை வரவழைத்துக்கொண்டிருந்தார். அவர் தயாநந்த ஸ்வாமியின் பெயரை உச்சரித்து வாலிபர்களுக்கு வேடிக்கையின் சாமக்கிரியையாக இருந்தார். அவர் பேருக்கு மாத்திரம் ஆரியர். ஆனால் அவர் கொள்கைகள் வாயோடு சரி. பழைய காலத்துப் பழக்க வழக்கங்கள் நல்லவையோ கெட்டவையோ எல்லாவற்றையும் ஏற்றுக்கொண்டார்.

ஒருநாள் அவர் மனைவி, சத்தியநாராயணர் புராணத்தை வாசிக்க வேண்டும் என்று எவ்வளவோ கேட்டாள். அவர் மறுதளித்துவிட்டார். ஆனால் சனாதன தர்மத்தைக் கடைப்பிடித்த இந்து ஸ்திரீ இத்தோடு விடுபவளா? ஆரிய சமாஜிக் கணவனின் முகத்தில் வெண்சாமரத்தின் காற்றுப் பட ஆரம்பித்தது. கஸ்பாவில் மூன்று நாள் வரையில் ஒருவராவது தூங்கவில்லை. நான்காவது நாள் கனவான் ஸ்திரீயின் இச்சைக்குப் படிய நேரிட்டது.

ஆனால் இப்போதோ கஸ்பாவின் நிலைமையே அடியோடு மாறிவிட்டது. ஒத்துழையாமை இயக்கத்தின் அருளால் நமது கஸ்பாவும் உயிர்பெற்றெழுந்தது. இப்போது நம்மூரிலும் ஆரிய சமாஜ் பவனம் இருக்கிறது. அதற்கு மந்திரி என்ன? அக்கிராசனர் என்ன? போதாக் குறைக்குப் புத்தகசாலை. அதன் அங்கத்தினர். ஹிந்திப் பத்திரிகைகளும் ஆங்கிலத்தில் இரண்டு மூன்று தினப் பதிப்புகளும் வந்துகொண்டிருக்கின்றன. நூற்றுக் கணக்கான சிறுவர்களும், வாலிபர்களும், கிழவர்களும் பத்திரிகைகள் வாசிப்பதிலேயே தங்கள் வயிற்றை நிரப்பிக்கொண்டிருந்தார்கள். நாளுக்கு நாள் பத்திரிகைப் பிரியர்கள் அதிகரித்துக்கொண்டே இருக்கிறார்கள்.

ஒருநாள் ஆரிய சமாஜின் பிரதான மந்திரி வாசுதேவ சர்மா அவர்கள் சபா பவனத்தில் உட்கார்ந்துகொண்டு ஒரு ஹிந்துஸ்தானி சமாசாரப் பத்திரிகை படித்துக்கொண்டிருந்தார். பவனத்துக்கு வெளியில் தாழ்வாரத்தில் இரண்டு பஞ்சாபி கனவான்கள் நிஜாரும் சட்டையும் அணிந்து சந்தியாவந்தனம் செய்துகொண்டிருந்தார்கள். அதே சமயத்தில் ஓர் நெடிய மெலிந்த சுந்தரமான மனிதன் சபா பவனத்திற்குள்ளே வந்தான். அந்தச் சத்தத்தைக் கேட்டு சர்மாஜீ மூக்குக் கண்ணாடி போட்ட கண்களை சமாசாரப் பத்திரிகையிலிருந்து உயர்த்தி வந்த மனிதனைப் பார்த்தார். இன்னாரென்று உடனே தெரிந்துகொண்டார்.

"ஏது இனாயத் அலி அவர்களே, இங்கே இன்றைக்கு எழுந்தருளியது?"

"தங்களைக் கண்டு, ஒரு விண்ணப்பம் செய்துகொள்ளவே வந்தேன்."

சர்மாஜீ மூக்குக் கண்ணாடியை எடுத்தார். ஷர்ட்டின் ஒரு பாகத்தால் கண்ணாடிகளை நன்றாகத் துடைத்து, மறுபடி மூக்கின் மேல் ஏற்றிக்கொண்டு, "இனாயத் அலி அவர்களே! சுத்தமான ஹிந்தி பேசுகிறீர்களே!"

"சர்மாஜீ! ஆமாம். எனக்கு சுத்தமான ஹிந்தி பேசத் தெரியும். ஏனென்றால் என் நரம்புகளில் சுத்தமான ஹிந்து ரத்தம் ஓடுகிறது. ஹிந்து சமாஜம், என் தகப்பனாரை பலாத்காரமாக மகமதியன் ஆகும்படிச் செய்யாமலிருந்தால் நானும் இன்று தங்களைப்போலவும், ஹிந்து மதத்தில் கௌரவம் பாராட்டும் மற்ற ஹிந்துக்களைப் போலவும் ஓர் ஹிந்துவாகவே இருந்திருப்பேன். ஆனால் நான் உங்களிடம் சொல்லவேண்டிய விஷயம் ஒன்று இருக்கிறது."

"தங்கள் சித்தத்தை வெளியிடுங்கள்"

"நான் மறுபடியும் ஹிந்து ஆக விரும்புகிறேன்"

"ஹிந்து ஆகவா?" என்று மிகுந்த ஆச்சரியத்தோடு சர்மாஜீ வினவினார்.

"ஆம் ஹிந்துவாக. எனக்கு இப்போது முசல்மானாக இருப்பதனால் இகலோகம் பரலோகம் இரண்டுமே கெட்டுவிடும் என்று தோன்றுகிறது. மகமதிய மதத்தில் யாதொரு விசேஷமும் இல்லை என்பது என் கருத்தல்ல. ஆனால், என்னுடைய இதயமும் என் குடும்பத்தின் இதயமும் முகமதிய மதத்திற்குத் தகுந்தவைகள் அல்ல என்ற காரணத்தால் நான் மறுபடி ஹிந்து ஆக விரும்புகிறேன். ஹிந்து மத ஆசாரங்களில் வளர்க்கப்பட்ட எங்கள் இருதயம் மகமதிய பழக்க வழக்கங்களைக் கிரகிப்பதில் சாமர்த்திய மற்றவைகள் என்று நான் கண்டேன். என் மனைவி தினம் காலையிலும் மாலையிலும் அல்லா அல்லா என்றல்ல, ராம் ராம் என்றே ஜெபம் செய்கிறாள். நான் மகமதியனாயிருந்து என்ன செய்வேன்? என் தாய் கங்கா ஸ்நானம் செய்யவும், பதரிகாஸ்ரமம் செல்லுதற்காகவும் துடிதுடிக்கிறாள். நான் எவ்வாறு அவர்களை மக்கா மதீனாவின்மேல் பக்தியைச் செலுத்துங்கள் என்று சொல்லட்டும்? நான் சொன்னாலும் அவர்கள் மனது ஏற்குமா? நான் மகமதியனாயிருப்பதில் என்ன பயன்? நான் மன உறுதி செய்துகொண்டு மசூதிக்குச் சென்றாலும் என் மனம் அல்லாவை நோக்கிச் செல்லுவதில்லை. மசூதியின் வாயிற்படியை மிதித்த

வுடனே எனது ஹிந்து இருதயம் ஒரு விசித்திரமான நடுக்கத்தோடு நடுங்குகிறது. அந் நடுக்கம், மகமதியர்பால் ஒரு அன்பையாவது, அல்லது வெறுப்பையாவது காட்டுவதல்ல. இரண்டுக்கும் நடுவே உள்ளது. இவ் விஷயங்களையெல்லாம் என் மனதில் தீர விசாரித்து, நான் ஆர்ய சமாஜில் சேர்ந்து, மறுபடியும் ஹிந்து ஆக விரும்புகிறேன்.”

இதற்குள் பஞ்சாபிக்காரர்களும் தங்கள் சந்தியாவந்தனத்தை முடித்துக்கொண்டு ஓம் ஓம் என்று உச்சரித்தவாறே உள்ளே நுழைந்தார்கள். சர்மாஜியும் இனாயத் அல்லது ரகுநாதன் ஆகிய அவனது பரிசயத்தை அவர்களுக்குச் செய்து, அவர் சமாசாரத்தைப்பற்றி அவர்களுடைய ஆலோசனையைக் கேட்டார்.

அவர்களில் ஒருவர் “நாம் தன்யர் ஆனோம்! பிரபு தயாநந்த சுவாமியின் அருள் இருக்குமானால் நம் விடுபட்ட சகோதரர்கள் எல்லோரும் என்றைக்காவது ஒருநாள் மறுபடியும் நம் நடுவே வந்து சேருவார்கள். அவஸியம் இவருக்குச் சடங்குகள் செய்துவிடுங்கள்” என்றார்.

4

நமது கஸ்பாவில் இந்து முஸ்லீம் விரோதம் முற்றுவதற்கு ஒரு மாதத்திற்கு முன்பு ஒரு விசித்திரமான மனிதன் வந்தார். அவருக்கு வயது 50-க்கு மேல் இருக்கும். ஆடைகளுக்குப் பதிலாக அவர் ஒரு கோவணம் மட்டுமே தரித்திருந்தார். அவருடைய சம்பத்து சம்சாரம் எல்லாம் அதுவே. அவர் முகத்தில் யாதொரு தோரணையும் காணப்படவில்லை. ஆனால் ஒருவிதமான ஆகர்ஷண சக்தி ததும்பியிருந்தது. தாடி ஒரு அடி நீளம் வளர்ந்திருந்தது. தலையிலும் மயிர் நீண்டிருந்தது. அவருடைய சாதுர்யத்தினால் கஸ்பாவிலுள்ள சிறு பையன்கள் அவர்மேல் உயிர்விட ஆரம்பித்தார்கள். அடடா! அவர் பெயரைச் சொல்ல மறந்துவிட்டோமே! அவர் தன் பெயர் ‘அல்லா ராம்’ என்று சொல்லிக்கொண்டார். அல்லா ராம் தெருக்கோடியில் வந்துவிட்டார் என்று தெரிந்தால், தலை கால் தெரியாமல் பிள்ளைகள் அனைவரும் அவரைச் சூழ்ந்துகொள்ளுவார்கள். ‘அல்லா ராம்! எனக்குக் காசு கொடு! அல்லா ராம்! எனக்குக் காசு கொடு!” என்ற சத்தம் தெரு முழுதும் எதிரொலிக்க ஆரம்பித்தது. முதலில் இரண்டு மூன்று தடவை பையன்களை மிரட்டி பயப்படுத்தப் பார்த்தார். பிறகு 4, 5 பிள்ளைகளைத் தலையின்பேரிலும், முதுகின் பேரிலும், கஷ்கத்திலும் எடுத்துக்கொண்டு ஓடுவார். மற்ற பையன்கள் ‘ஓடு ஓடு, பிடி பிடி” என்று கூக்குரலிட்டுக்கொண்டு அவரைத் துரத்துவார்கள். கடைசியில் வேறு வழியில்லாமல் நின்றுவிடுவார்.

பையன்களைக் கீழே இறக்கிவிட்டு. “அடே குரங்குகளே! உங்களுக்கு என்ன வேண்டும்?” என்று கேட்பார். “காசு அல்லா ராம், காசு!” என்பார்கள். அப்போது அல்லா ராம் தன் வெறுங்கையை மூடிக்கொண்டு, இங்கும் அங்கும் கைகளை உதறுவார். நாலா பக்கங்களிலும் ஜல் ஜல் என்ற சத்தம் உண்டாகும். பையன்கள் இதைப் பார்த்து சந்தோஷமடைந்து, சிதறிக்கிடக்கும் காசுகளைப் பொறுக்குவார்கள். அதற்குள் அல்லா ராம் ஓட்டம்பிடித்துவிடுவார். அல்லா ராம் இந்தப் பையன்களாலேயே பிரக்யாதியை அடைந்தார்.

இதற்குப் பிறகு இன்னொரு சம்பவம் நடந்தது. அதனால் அவருடைய புகழ் இன்னும் அதிகரித்தது. ஒருநாள் ஒரு ஏழைச் சக்கிலியின் ஐந்து வருஷப் பையனுக்குக் காலரா கண்டுவிட்டது. அவனிடத்தில் வைத்தியனைக் கூப்பிடுவதற்குக் காசு இல்லை. எவ்வளவோ இடங்களுக்கு ஓடியும் அவனுடைய பிரார்த்தனையைக் காதில் போட்டுக்கொள்வார் ஒருவருமில்லை. அவன் பையன் சிகிட்சையில்லாத காரணத்தால், இறக்க ஆரம்பித்தான். அப்பொழுது அல்லா ராம் பையன்களின் கூட்டத்தால் சூழப்பட்டு, அவ் வழியே சென்றார். சக்கிலியின் மனைவி வாயிற்படியில் உட்கார்ந்து அழுதுகொண்டிருப்பதைப் பார்த்து அவள் எதிரில் போய் நின்றார்.

“ஏன் அழுகிறாய்?”

அவள் பதில் ஒன்றும் சொல்லவில்லை. ஆனால் அவளுடைய குரல் பஞ்சமத்திலிருந்து நிஷாதத்திற்கு ஏறிவிட்டது.

“ஏனம்மா அழுகிறாய்? ஏன் பேசவில்லை? உனக்கும் பைசா வேண்டுமோ?”

“எனக்குப் பைசா வேண்டியதில்லை; மருந்து வேண்டும். என் மகன் காலராவில் இறந்துகொண்டிருக்கிறான்” என்று விம்மி விம்மி அழுதுகொண்டே சொன்னாள்.

“உன் பையனுக்குக் காலரா கண்டுவிட்டதா? அடி பைத்தியக்காரி! அவனுக்கு அவ்வளவு சாப்பாடு ஏன் கொடுத்தாய்? எனக்கு மட்டும் கொஞ்சங்கூட உண்ணக் கொடுக்கிறதில்லையே? என்னை இப்போதே உண்பிப்பாயானால், உன் பையனுக்கு இப்போதே குணமாகிவிடும்.”

“அண்ணே! தாங்கள் உண்பதற்குத் தகுந்த என்ன வஸ்து என் வீட்டில் இருக்கிறது? சிறிது கடலை இருக்கிறது. சாப்பிடுகிறீர்களா?”

“கொண்டு வா. சீக்கிரம் கொண்டு வா. வீட்டில் எது இருக்கிறதோ அதை உடனே கொண்டு வா. இன்னும் பையன் பிழைக்கக்கூடும்.”

உடனே சக்கிலியப் பெண் வீட்டுக்குள் நுழைந்து, கால் படி காலேயரைக்கால் படி வறுத்த கடலையை ஒரு பொட்டணமாகக் கட்டி எடுத்துக்கொண்டு வந்தாள். அல்லா ராம் பொட்டணத்தைப் பிரித்து, அவ்விடத்திலிருந்த எல்லாப் பையன்களுக்கும் பிரித்துக் கொடுக்க ஆரம்பித்தார். வெகு சீக்கிரம் பொட்டணம் காலியாகி விட்டது. நாலைந்து கடலைகள் மிஞ்சியிருந்தன. அவைகளை ஸ்திரீயின் கையில் கொடுத்து, "இதுதான் உன் பையன் பங்கு. இதைப் பொடிசெய்து, தண்ணீரில் கரைத்துப் பையனுக்குக் கொடு, போ" என்றார்.

மறுநாள் அதே சக்கிலியப் பெண் ஊர் முழுதும் "அல்லா ராம் பைத்தியக்காரர் அல்ல. மிகுந்த அறிவாளி. அவர் சாதாரண மனிதர் அல்ல. ஏதோ ஓர் கடவுள், ஒரு சாது" என்று பறையறைந்து விட்டாள்.

பிறகு கேட்பானேன். ஹிந்துக்கள், முகமதியர்கள், முக்கியமாகப் பெண்மக்கள் அல்லா ராமுக்கு என்னென்னவோ பதவிகளை அளித்துவிட்டார்கள். "அல்லா ராம் ஏதோ மருந்து சொன்னார். என் குழந்தைக்கு உடனே சுகமாய்விட்டது" என்பாள் ஒருத்தி. "என் பையனுக்கு அல்லா ராமின் தயவினால் வேலை கிடைத்துவிட்டது." அல்லா ராமால் என் கேசு ஜெயித்துவிட்டது" என்று பலவிதமான பேச்சுக்கள் உண்டாயின. கஸ்பா முழுவதும் அல்லா ராமைப் பூஜிக்கத் தொடங்கிற்று.

ஆனால் அல்லா ராம் மட்டும் சிறிதும் மாறவில்லை. இரவும் பகலும் சிறுவர் கூட்டத்தோடு சுற்றுவது நிற்கவில்லை. ஊரிலுள்ள பிரபல தனவான்களும் அவருக்கு ஆடை அணிவிக்க முடியவில்லை. யாராவது மிகவும் வற்புறுத்தி வேஷ்டி, ஷர்ட்டு, டொப்பி முதலியவை கொடுத்தாலும், அவர் தற்காலம் அவைகளை அணிந்துகொள்ளுவார். வீட்டு வாயிலைக் கடந்ததும் டொப்பி ஏதாவது ஒரு பையன் தலையில் காணப்படும். வேஷ்டி ஏதாவது ஒரு ஏழையின் குடிசையிலும், ஷர்ட்டு ஒரு பிச்சைக்காரன் உடம்பிலும் காணப்படும்.

ஒவ்வொரு நாளும் தெருக்களில் இரவு இரண்டு மணிக்கு அல்லா ராம் பாடிக்கொண்டே போவார்.

"நீ என் கடவுள் நான் உன் கடவுள்;
நீயும் கடவுள் நானும் கடவுள்; பின்பு நீயும் நானும் வேறோமோ?"

5

ஏழு மனிதர்கள் தங்களுக்குள் சம்பாஷித்துக்கொண்டே சபா பவனத்தை நோக்கிப் போய்க்கொண்டிருந்தார்கள். அவர்களில்

ஒருவர் சபையின் மந்திரி. இருவர் நமக்கு முன்னமே அறிமுகமான பஞ்சாபிகள். மற்ற நால்வர் புதிதாக வந்தவர்கள், ஆரிய சமாஜைச் சேர்ந்தவர்கள்.

மகமதியர்கள் தங்களால் கூடியமட்டும் இனயத் அலியை ஹிந்து ஆவதற்கு விடமாட்டார்கள்."

"ஏன் விடமாட்டார்கள்? ஐயா. அந்தக் காலமெல்லாம் மலையேறிவிட்டது. இவ்விடத்தில் எல்லா ஹிந்துக்களும் நமது பக்கம்"

"கலகம் ஏற்படுமோ என்ற பயந்தான்"

"இவ்வளவு அற்ப விஷயத்திற்காக எவனாவது சண்டைக்கு வந்தால் வரட்டும். அதன் பாரம் அந்த முட்டாளைச் சேர்ந்தது"

"நல்லது. அப்படியானால் சமஸ்காரங்களை எல்லாம் செய்வோம். ஊர் வலத்தினால் என்ன லாபம்?"

"பேஷ் பேஷ் நன்றாயிருக்கிறது. ஏன் ஊர் வலம் வரக் கூடாது? நாம் நம் இழந்த நண்பரை மறுபடி அடைகிறோம். ஏன் தினத்தைக் கொண்டாடக் கூடாது?" என்று எல்லோரும் ஒரே குரலில் சொன்னார்கள்.

"ஆனால் நாம் ஊர்வலம் வரும்போது மகம்மதியர்கள் நம்மைத் தாக்குவதாக நிச்சயித்திருக்கிறார்கள். நான் உண்மையான சமாச்சாரம் உங்களுக்குச் சொல்லுகிறேன்" என்றார் முதலில் சொன்னவர்.

"இவ்வாறு பயப்படுவதனால் காரியம் நடக்காது. நாம் ஒருவருடைய மத சம்மந்தமான விஷயங்களில் தலையிடுவதில்லை. அப்படியானால் வேறொருவர் நம்மை ஏன் தடைசெய்ய வேண்டும்? நம்மை யாராவது கிளப்பி விட்டால் பிறகு பார்த்துக்கொள்வோம். பயத்திற்காக யாராவது மதத்தை விட்டு விடுவார்களா?"

அதே சமயம் தெருவின் கோடியிலிருந்து கௌபீனதாரியான அல்லா ராம் பாடிக் கொண்டே ஓடிவந்தார்.

"நீ என் கடவுள் நான் உன் கடவுள்;
நானும் கடவுள் நீயும் கடவுள்;
பின்பு நானும் நீயும் வேறோமோ."

மந்திரி அவர்கள் "அல்லா ராம்" என்று கூப்பிட்டார்.

"பேசாமலிரும் நான் அதற்கு வழிதேடுகிறேன்" என்றார் அல்லா ராம்.

"எவ்விதமான யுக்தி யோசித்துக் கொண்டிருக்கிறீர்கள்? எங்களுக்கும் தெரிவிக்கலாகாதா?"

"கடவுளுக்கும் கடவுளுக்கும் சண்டை யுண்டாகாம லிருக்கும் உபாயம் என்ன என்று யோசித்துக் கொண்டிருக்கிறேன். நீங்கள் சண்டை பிடிக்கப் போகிறீர்களோ?"

"எங்களுக்குச் சண்டை பிடிக்க வேண்டுமென்ற எண்ணமில்லை. ஆனால் ஊர்வலம் அவஸியம் கிளம்பும்."

"நான் சாப்பிட மாட்டேன். ஆனால் கவளம் மட்டும் என் வாயில் விழும்! ஹா, ஹா, ஹா, அப்படித்தானே?"

"வேறு வழியில்லை."

"அப்படியானால் மதத்தின் பெயருக்குப் பின்னால் ரத்த வெள்ளத்தைப் பெருக்குவதா. பேஷ்! பேஷ்! நீங்கள் ஏன் மனிதர்களாகப் பிறந்தீர்கள்? நீங்கள் காடிகளாகப் பிறந்திருக்க வேண்டும் சிங்கங்களாகப் பிறந்திருக்க வேண்டும். அல்லது ஓநாய்களாகப் பிறந்திருக்க வேண்டும். அப்படி யிருந்தால் உங்கள் இரத்த தாகம் அவஸியம் தணியும். ஆனால் மதத்தின் பெயரால் சண்டை பிடிப்பவர்கள் மனிதர்கள் அல்ல." புதிதாக வந்த ஆரியர்கள் சர்மாஜீயைப் பார்த்து "இவன் ஒரு பயித்தியக்காரனோ?" என்று கேட்டார்கள்.

"ஆம் ஆம்! நான் பயித்தியக்காரன் தான். குரான் படித்ததில்லை; ஆகையால் பயித்தியக்காரன்; பாகவதம் பார்த்ததில்லை, ஆகையால் பயித்தியக்காரன்; மதத்தின் பெயரை வைத்துக் கொண்டு இரத்தத்தைச் சிந்த நான் விரும்பவில்லை; ஆகையால் நான் பயித்தியக்காரன்; நான் கதர் துணி அணிவதில்லை; உபந்யாசம் செய்வதில்லை ஆகையால் அவஸியம் பயித்தியக்காரன் தான். அல்லா ராம் என்றால் பயித்தியக்காரன். மகமதியர்கள் 'அடே நீ பயித்தியக்காரன். நீ நடுவில் வந்து விழாதே' என்கிறார்கள். ஹிந்துக்களும் அப்படியே சொல்லுகிறார்கள். நல்லது ஆனால் நீங்கள் சண்டையிடுங்கள். சண்டை பிடிப்பது உங்கள் புத்திசாலித்தனம் என்று கருதினால் சண்டை பிடியுங்கள்" என்று சொல்லி விட்டு ஆடிக்கொண்டும், பாடிக்கொண்டும், குதித்துக்கொண்டும் தன் வழியே அல்லா ராம் போய்விட்டார்.

6

கஸ்பாவிலுள்ள ஆயிரக் கணக்கான ஹிந்துக்கள் நடக்கப்போகும் ஊர்வலத்தில் கலந்து கொள்வதற்காக சபாபவனத்தை நோக்கித் திரள் திரளாகப் போய்க்கொண் டிருக்கிறார்கள். மகமதிய ஆண்

பிள்ளைகளும் ஊர்வலத்தைத் தடைசெய்வதற்காக ஆயுதபாணிகளாய் மசூதிக் கெதிரில் நின்றுகொண்டார்கள். எல்லா ஹிந்துக்கள் முகமதியர்கள் வீட்டிலும் கிழவர்கள் அல்லது குழந்தைகளும் ஸ்திரீகளுமே இருந்தார்கள். ஒவ்வொரு வீட்டின் கதவும் உள்ளிருந்து தாளிடப்பட்டிருந்தது.

ஒரு மகமதிய வீட்டுக் கதவண்டை யாரோ ஒருவர் தட்டும் சத்தம் கேட்டது.

"அம்மா! அம்மா!"

"யாரது.?"

"நான்தான் அல்லா ராம், கொஞ்சம் வெளியே வாருங்கள், அம்மா." கதவைத் திறந்துகொண்டு கிழவி வெளியே வந்தாள்.

"அல்லா ராம்! என்ன சமாசாரம்? சாப்பாடு வேண்டுமோ?"

"இல்லை அம்மா! நான் இதுவரை பிச்சை கேட்டதில்லை. இன்று கேட்கிறேன் கொடுப்பீர்களல்லவா?"

"இது என்ன ஸ்வாமிகளே! தங்களுக்கு என்ன குறைவு? தாங்கள் என் பெண்ணின் உயிரைக் காப்பாற்றினீர்கள். நாங்கள் சதா உங்களுக்கு அடிமை. என்ன வேண்டுமோ கேளுங்கள்."

"முதலில் ஆணையிட்டுச் சொல். கொடுப்பாயல்லவா?"

"அல்லாவின் பேரில் ஆணை, அல்லா ராம்! நீ கேட்கும் பொருள் என் சக்திக்குள் இருந்தால் அவஸியம் கொடுப்பேன்."

"அப்படியானால் என்னோடு வா. நாமெல்லாரும் சேர்ந்து ஹிந்துக்களுக்கும் மகமதியர்களுக்கும் சண்டையுண்டாகாமல் தடுப்போம். குழந்தைகளையும் அழைத்துக்கொள். ஸ்திரீகளும் குழந்தைகளும் நிறைந்த சேனையை வைத்துக்கொண்டு இரண்டு ஜாதியார்களின் புருஷர்களின்மேல் படையெடுப்போம். கடவுளின் பேருக்காகச் சண்டையிடுவதினின்றும் விலக்குவோம்."

இதைக் கேட்டு அம் மகமதியக் கிழவி ஸ்தம்பித்து நின்று விட்டாள். அல்லா ராம்! என்ன உளறுகிறாய்?

"ஏன் அம்மா சும்மா இருக்கிறாய்? நீ எனக்குப் பிச்சையளிப்பதாக ஆணையிட்டிருக்கிறாய். நான் உனது நன்மைக்காகவே சொல்லுகிறேன். இந்த யுத்தத்தில் மனிதர்களுடைய உதிரமா பெருகப்

போகிறது என்று நினைக்கிறாய்? ஸ்திரீகளின் ஹிருதயமே ரத்தமாக ஓடப்போகிறது. தருணிகள் விதவை ஆய்விடுவார்கள். தாய்மார்கள் தங்கள் குழந்தைகளை இழப்பார்கள். சகோதரிகள் அவமானத்தை அடைவார்கள். ஆண் மக்களின் இந்த அதிக்ரமத்தை நீங்கள்தான் தடுக்க வல்லவர்கள். நடவுங்கள். கற்போன்ற இருதயமுடைய மனிதர்கள் முன்னால் அழுங்கள். அவர்களைச் சண்டையினின்றும் தடுங்கள். அவர்களுக்குச் சொல்லுங்கள். 'இந்தச் சரீரம் உங்களுடையதல்ல; உங்கள் தாய்மார்களுடையது. தாய்மார்களின் விருப்பத்திற்கு மாறாக அந்தச் சரீரத்தை நாசம் செய்ய உங்களுக்கு என்ன நியாயம்' நேரமாகிறது. சீக்கிரம் வாருங்கள். இல்லாவிட்டால் எல்லாம் நாசமாய்ப் போய்விடும்'' என்று மிகவும் உருக்கமாக அல்லா ராம் சொன்னார்.

ஒரு புறம் மகமதியர்கள் ஆவேசத்தோடு கற்களையும் செங்கல் தூள்களையும் தடிகளையும் கையில் வைத்துக்கொண்டு ஹிந்துக் கூட்டத்தில் மேல் பொழியத் தயாராக நின்றுகொண் டிருந்தார்கள். மறுபுறம் ஹிந்துக்கள் ரகுநந்தன் பிரசாத் அவனுடைய பரிவாரத்தோடு மசூதிக்கருகாமையில் வந்து நின்றார்கள். இன்னும் ஒரே நிமிஷத்தில் யுத்தம் ஆரம்பிக்கப் போகிறது. அதற்குள் கங்கையின் கலரவத்வனியைப் போல ஆயிரக் கணக்கான ஸ்திரீகளின் குரல் முகமதியர்களுக்குப் பின்புறம் ஒலிக்க ஆரம்பித்தது. முதல்முதலாக அல்லா ராம்:

''நீ என் கடவுள் நான் உன் கடவுள்;
நீயும் கடவுள் நானும் கடவுள்;
பின்பு நானும் நீயும் வேறாமோ.''

என்று பாடிக்கொண்டே சென்றார். அவர் சொல்லி முடித்ததும் ஆயிரக் கணக்கான ஸ்திரீகளும் குழந்தைகளும் ஒரே த்வனியில் அந்தப் பாட்டைச் சொல்ல ஆரம்பித்தார்கள்.

சின்னஞ் சிறு குழந்தைகள் இனிய குரலுக்கு எதிரில் தாய்மார்களின் கருணை நிரம்பிய குரலுக்கு முன்னால் ஆவேசமடைந்த ஆண் மக்களின் இருதயத்திலுள்ள ராக்ஷஸத் தன்மை, வாய் பேசாமல் தலை வணங்கி நின்றுவிட்டது. மகமதியர்கள் குழந்தைகளும் ஸ்திரீகளுமடங்கிய இந்த தளத்திற்கு வாய் பேசாமல் வழிவிட்டார்கள். ஹிந்துக்களின் சைன்யம், அல்லாராமுடைய சேனையைப் பார்த்து பிரமித்து நின்றார்கள். அந்தச் சேனையில் ஒவ்வொரு மகமதியனுடையவும் ஒவ்வொரு ஹிந்துவினுடையவும் தாய்கள் சகோதரிகள், பெண்கள் பிள்ளைகள் எல்லோரும் இருந்தார்கள்.

''நீங்கள் எல்லோரும் இங்கே ஏன் வந்தீர்கள்'' என்று மகமதியர்கள் கேட்டார்கள். இந்துக்களும் அதே கேள்வியைக் கேட்டார்கள். ஒரு மகமதியக் கிழவி கூட்டத்தினின்றும் வெளியே வந்து:

''உங்களை இறப்பதினின்றும் காப்பாற்றுவதற்காக இங்கே வந்தோம். நீங்கள் எங்கள் பிள்ளைகள். இரவு இரவாய்க் கண் விழித்தும், அன்ன ஆகாரமில்லாமலும், கடவுளை பிரார்த்தனை செய்துகொண்டே எங்கள் நண்பர்களுக்கு ஆநந்தத்தை உண்டாக்கவும் எங்கள் மனம் குளிர்ந்து மகிழ்வதற்காகவும் உங்களை வளர்த்தோம். உங்களுக்காக நாங்கள் கடவுளை வணங்குகிறோம். நீங்களே எங்களுக்குக் கடவுள்.

''நீங்கள் இங்கே என்ன செய்து கொண்டிருக்கிறீர்கள்? மதத்தின் பெயரால் ரத்த வெள்ளத்தை பிரவாகிப்பதற்கு என்ன அவஸியம்? இவ்வாறு செய்வதற்கு எந்தக் கொடியவன் உங்களைத் தூண்டிவிட்டான்? உங்களை இழந்து உங்கள் தாய்மார்கள் கண் இழந்தவர்களாக ஆவார்கள்; அவர்களுடைய வாழ்வே நஷ்டமடைந்துவிடும். தேவலோகத்தை அடைந்த போதிலும் உங்களுக்கு சாந்தம் என்பதே உண்டாகாது. சைத்தான் ஒரு வேளை உங்கள் வேலையைப் பார்த்து திருப்தி அடையலாம். ஆனால் கடவுள் ஒருபோதும் சந்தோஷப்படமாட்டார். கடவுளுக்கு ரத்தமே பிரியம் என்று நினைப்பீர்களானால், நாம் கை கால்களைக் கழுவுவதற்கும் தண்ணீரைக் கொடுத்தருளாமல் ரத்த வெள்ளத்தையே கொடுத்திருப்பார். கங்கையிலும் ரத்த வெள்ளமே ஓடும். சமுத்திரமும் ரத்த சமுத்திரமாகவே இருந்திருக்கும். ரத்தம் சிந்துவதற்குத் தலைப்படாதீர்கள். எங்கள் இருதயங்களே! நீங்கள் கடவுளுக்கு அஞ்சுங்கள். கடவுள் ஒருபோதும் ரத்தத்தை விரும்பமாட்டார்'' என்று சொன்னாள்.

அதே சமயத்தில் அல்லா ராம் மதம் பிடித்த இந்துக்களைப் பார்த்து ''ஏ வேதப் பித்தர்களே! நடவுங்கள்; உங்கள் ஊர்வலத்தை எடுத்துச் செல்லுங்கள். தாய்மார்கள் உங்களுக்கு வழி விடுகிறார்கள்'' என்று சொன்னார்.

மகமதியர்கள் கையிலிருந்த ஆயுதங்கள் தாமாகவே கீழே விழுந்துவிட்டன. தாய்மார்களும் குழந்தைகளும் வரிசையாக நின்று ரகுநந்தன் பிரசாதின் ஊர்வலத்திற்கு வழிவிட்டார்கள். ஊர்வலமும் மந்திர முழக்கத்தோடு கிளம்பிச் சென்றுவிட்டது.

இங்கே அல்லா ராம் இனிமையான குரலோடு தாய்மார்களின் இருதயத்தில் பாட்டுக்களைப் பாடி பிரதி த்வனிக்கச் செய்தார்.

ஹிந்திப்
பிரசாரமும் தமிழபிவிருத்தியும்.

II

திரு. ரா. ஸ்ரீகண்டன் அவர்கள், M. A.

ஒரு தமிழ்ப் பிரசார சபைத் தேவை

முன்னொரு வியாசத்தில் ஹிந்திப் பிரசாரத்தால் தமிழபிவிருத்திக்கு யாதொரு பங்கமும் ஏற்படாதென்று சில காரணங்களுடன் சொன்னேன். முடிவில் ஹிந்திப் பிரசார முறைகளை லாபகரமாகத் தமிழில் அனுசரிக்கலாமென்றும் சொன்னேன்.

தாய்ப் பாஷை யபிவிருத்தியைத் திறமையுள்ள எவருந் தாங்களாகவே செய்ய முடியும்; பிறரைப் பார்த்துதான் செய்ய முடியுமென்று சொல்ல முன் வரவில்லை. மற்றப் பாஷைகளின் அபிவிருத்தியைப் பார்த்து, அவைகளுடைய முறைகளை அனுசரிப்பதானல் கூட, ஹிந்தியைப் பார்த்துத்தான் தெரிந்துகொள்ள முடியுமென்றும் சொல்ல வரவில்லை. ஜெகோ ஸ்லவேகியா

"நீர் கோயில் கட்டினீர்; நீ பகவான்;
நான் மசூதி கட்டினேன்; நான் ரஹமான்;
நீயும் பகவான் நானும் பகவான்;
பின்பு நீயும் நானும் வேறுமோ."

இந்தப் பவித்ர ஊர்வலத்தின் தலைவர்தான் அல்லா ராம். அவருக்குப் பின்னால் ஹிந்து முகமதியக் குழந்தைகள்; குழந்தைகளுக்குப் பின்னால் இரண்டு ஜாதிகளையும் சேர்ந்த தாய்மார்கள்; எல்லோருக்கும் பின்னால் மகமதிய ஆண்பிள்ளைகள்; ஆயுதபாணியான ரக்ஷகர்களைப் போல வந்தார்கள். இயற்கை மாதாவின் சரீரம் புளகாங்கிதம் அடைந்தது. ஆகாய வீதியில் நக்ஷத்திரங்கள் புன்னகை புரிந்தன. சந்திரன் ஆநந்தத்தால் சிரித்துக்கொண்டிருந்தான். இந்தக் காட்சிதான் பூலோகத்திய ஸ்வர்க்கம் என்பது.

பாஷை அபிவிருத்தி யடைந்திருந்தால், அது கையாண்ட முறைகளிலும் சிலவற்றை நாம் பின்பற்ற முடியுமென்பதை மறுப்பவன் நானல்லன். ஆனால் ஆங்கிலப் பிரசாரமும் நமக்குள் அதிகமாய் விட்டது; ஹிந்திப் பிரசாரமும் அதிகரித்துக்கொண்டு வருகிறது. ஆங்கிலத்தின் முறைகளைப் பின்பற்றுவதைப் பற்றி அதிகம் சொல்ல வேண்டியதில்லை; அதை நாம் கண்கூடாகக் காண்கிறோம். ஆனால் ஹிந்திப் பிரசார முறைகளைக் கையாள்வதைப் பற்றிய முதல் வியாசம் இதுதான் என்று நினைக்கிறேன்.

தமிழ் நாட்டில் தமிழ் எப்படித் தாய் பாஷையாக இருக்கிறதோ, அப்படியே வட இந்தியாவிற் பல பாகங்களில் ஹிந்தி தாய்ப் பாஷையாக இருக்கிறது. தமிழைப் பற்றிய யோசனைகள் நமக்கு இருப்பது போலவே, வட நாட்டில் ஹிந்தியைப் பற்றி யோசித்திருக்கிறார்கள். சுமார் 60 வருஷங்களுக்கு முன் ஹிந்தியின் நிலைமை தமிழ் நிலைமையைக் காட்டிலும் சீர் கெட்டிருந்தது. ஆனால் தமிழின் நிலைமை இன்னும் யோசிக்கக்கூடியதா யிருக்கும் இப்பொழுதோ வென்றால், ஹிந்தி மிகவும் முன்னேற்றத்தை யடைந்துவிட்டது. இதற்குக் காரணம் ஹிந்திக்காரர்கள் நியாயமாகப் பல முறைகளை அனுசரித்து வந்திருப்பதும், தமிழர்கள் 'குருட்டாம் போக்கில்' போய்க்கொண் டிருப்பதுமே யாகும். 15 வருஷங்களுக்கு முன் தென்னாட்டிலே ஆரம்பமான ஹிந்திப் பிரசார வேலை நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக நம் கண் முன்பாக விளங்கி நிற்க, தமிழ்த் தாய் சற்றும் கவனிக்கப்படாம லிருக்கிறாள். ஹிந்திப் பிரசார முறைகளை நியமமாகத் தமிழில் அனுசரிக்க வேண்டுவதற்கு வேறொரு காரணமும் காட்டவும் வேண்டுமோ?

இனி அம் முறைகள் யாவை என்பதைச் சற்று கவனிப்போம்:-

(1) முதல் முதலில் கவனிக்க வேண்டியது **பிரசார சபையின் ஸ்தாபனமாகும்**. மகாத்மா காந்தி தம் மகனை ஸ்ரீ தேவதாஸ் காந்தியைத் தென்னாட்டிற்கு அனுப்பி ஹிந்திப் பிரசார வேலையை ஆரம்பித்தார். "ஹிந்தி கற்றுக்கொள்ள வேண்டியது ஒவ்வோர் இந்தியனுடைய கடமையாகும்," என்பதுதான் பிரசாரம். அந்தக் கடமையை அறிந்து, கற்றுக்கொள்ள முன் வந்தவர்களுக்குப் போதிப்பதுதான் காரியம். இதைத்தான் ஸ்ரீ தேவதாஸ் செய்து வந்தார். இப்பொழுது இந்தச் சபை மிகப் பெரியதாய்விட்டது.

ஆனால் தமிழ் நாட்டில் "தமிழ்ப் பிரசார சபை" என்று ஒன்று இருக்கிறதா? "சாதாரணமாகத் தமிழைப் படித்து விஷயத்தை யறிந்துகொள்ளும் சக்தியைப் பெறுவது ஒவ்வொரு தமிழனுடைய கடமையாகும்" என்ற இடி முழக்கம் தமிழ் நாடெங்கும் கேட்

கிறதா?, "ஹிந்தி படிக்க வேண்டும்" என்ற முழக்கம் "தமிழ் படிக்கவேண்டும்," என்பதைக் காட்டிலும் எவ்வளவோ பலமாகக் கேட்கப்படுகிறது. "நான் ஹிந்தி கற்றுக்கொள்ள விரும்புகிறேன்" என்று சொல்பவர்களுக்குச் சில முறைகள் சொல்லப்படுவதைக் கவனிக்கிறோம். ஆனால் "எனக்குக் கொஞ்சம் தமிழ் சொல்லிக் கொடுங்கள்" என்று ஆசையுடன் கேட்கும் தமிழர்களுக்குச் சுலபமான வழி காட்டக்கூடிய சபைகளைப் பற்றி நாம் கேள்விப்படுகிறதில்லையே! ஆகையால் கால தாமதமில்லாமல், "தமிழ்ப் பிரசார சபை" என்று தமிழ் நாடு முழுவதும் பிரசாரம் செய்யக்கூடிய சபை ஒன்று மதுரையிலாவது திருச்சியிலாவது ஆரம்பிக்கவேண்டும், "தமிழைப் படி" என்று தமிழ் நாடு முழுவதும் கர்ஜிக்க வேண்டும். அப்படி படிக்க வருபவர்களுக்குச் சொல்லிக்கொடுக்கும் கிளை ஸ்தாபனங்கள் எல்லா விடங்களிலும் ஏற்பட வேண்டும். தமிழ்ப் பிரமுகர்கள் முன்னணியில் நின்று வேலை செய்ய வேண்டும்.

பள்ளித் தமிழ் போதாது. ஆனால் நீங்கள் கேட்கலாம்: "பள்ளிக்கூடங்களில்தான் தமிழ் சொல்லிக் கொடுக்கிறார்களே, அது போதாதா? எல்லாரும் அங்கே போய்ப் படிக்கலாமே!" என்று. ஆனால் (1) பள்ளிக்கூடங்களில் தமிழுக்கு அதிக மரியாதை கிடையாது. உபாத்தியாயர்கள் தமிழைத் தவிர வேறு விஷயங்களில் அதிக கவனம் செலுத்துகிறார்கள். (2) தமிழர்கள் எல்லாருக்கும் பள்ளிப் படிப்பு கிடைப்பது முடியாத காரியம், ஆதலால் (a) தமிழைக் கவனிக்கும் ஒரே நோக்கத்தைக் கொண்டு வேலை செய்யும் சபை ஒன்று இன்றியமையாதது, (b) தற்குறிகளும் பள்ளிப் படிப்புக் கற்றுக்கொள்ள முடியாதவர்களுமாகிய எல்லாருக்கும் தமிழைச் சொல்லிக் கொடுக்கும் சங்கம் ஒன்று ஒவ்வோரிடத்திலும் இருக்க வேண்டியது மிகவும் அவசியம். இப்பொழுது ஹரிஜனங்களின் முன்னேற்றத்துக்காக வேலை செய்வோரில், வயது வந்தவர்களுக்கு இராப் பள்ளிக்கூடங்கள் வைக்கும் முயற்சிகள் பலமாய் இருக்கின்றன. தமிழ் நாட்டிலுள்ள இவ் ஆழியர்களெல்லாரும் தமிழ்தான் சொல்லிக் கொடுப்பவர்களாக இருக்கிறார்கள். ஆகையால் இவர்களையெல்லாம் தமிழ்ப் பிரசார சபை நன்றாக உபயோகித்துக் கொள்ளலாம்.

பிரசார சபையின் சில வேலைகள்

(1) தமிழ்ப் பிரசாரத்தின் அவசியத்தைப் பற்றி ஜனங்களுக்குள் விவரமாக எடுத்துச் சொல்ல வேண்டும். ஒவ்வொருவருக்கும் பிரயோகத்துக்கு வேண்டிய அளவாவது தமிழ் படிப்புச் சொல்லிக் கொடுக்கவேண்டிய காரணங்கள் எல்லாருக்கும் தெரியுமென்று பலர் நினைக்கலாம். ஆனால் அதைப்பற்றிய விவரங்களையும் அதனாலேற

படும் அனுகூலங்களைப் பற்றியும் கேட்டு, தெளிவான பதில் எத்தனைபேர் சொல்லுகிறார்கள் என்று பாருங்கள், உங்களுக்கே ஆச்சரிய முண்டாய்விடும். இதன் எல்லா விவரங்களும் எல்லாருக்கும் தெரியும்படி விளக்கிக் காட்டுவது பிரசார சபையின் ஒரு முக்கியமான வேலையாகும்.

(2) பிரசாரத்தின் அவசியத்தை விளக்கிக் காட்டுவதுடன், ஒவ்வொருவருக்கும் படிப்புச் சொல்லிக்கொடுக்க ஏற்பாடு செய்யும் வழிகளை ஆராய்ந் தாராய்ந்து, ஜனங்களுக்கு எடுத்துச் சொல்ல வேண்டும். எத்தனையோ பேர் எத்தனையோ முறைகளைக் கையாண்டு, தமிழ் ஞானத்தைப் பரப்பிக்கொண் டிருக்கிறார்கள். அந்த விஷய மெல்லாமும் இப்பொழுது நமக்குத் தெரியாது. ஆனால் பிரசார சபை ஒன்று ஏற்பட்டால் இப்பொழுது அனுசரித்து வரும் பல முறைகளும் வெளியாகும். அவைகளை நன்றாக ஆராய்ந்து, நாமும் அனுசரிக்கலாம்.

(3) **பிரசுரங்கள்.** பல இடங்களிலும் வேலை செய்பவர்களுக்கு அனுகூலமா யிருக்கும்பொருட்டு, சபையானது, பள்ளிக்கூடங்களுக் கென்று எழுதப்பட்ட புஸ்தகங்களைப் போலவே, இராப் பள்ளிக்கூடங்களுக்கு ஏற்ற பாடப் புஸ்தகங்களைப் பிரசுரிக்கலாம். தக்க ஞானம் வந்தபிறகு உபயோகிக்கக்கூடிய வாசகசாலைகளுக்கு ஏற்ற புஸ்தகங்களை வெளியிடலாம். வேறு பிரசுர கர்த்தாக்கள் வெளியிடும் நூல்களிலும் ஏற்றவைகளைச் சிபார்சு செய்யலாம்.

(4) **பரீக்ஷைகள்.** தமிழில் இத்தனைபேர் நல்ல ஞானம் படைத்திருக்கிறார்கள் என்று அறிவதற்கும், அந்த விஷயத்தை வெளிப்படுத்தி ஜனங்களுக்குள் தமிழுற்சாகத்தை அதிகப்படுத்துவதற்கும், தமிழில் வருஷந்தோறும் படிப்படியான பரீக்ஷைகள் வைக்கலாம். பரீக்ஷைகள் நாம் செய்த வேலையை அளக்கும் கருவிகளாகும்.

(5) ஆங்காங்கு வேலை செய்வோருடைய உதவியால் கிளை ஸ்தாபனங்கள் ஏற்படுத்தி, அவர்கள் செய்யும் வேலைகளின் விவரங்களையும், அவர்கள் கையாளும் முறைகளையும் அப்போதைக்கப்போது விளம்பரப்படுத்த வேண்டும். அப்பொழுதுதான் அவர்களுக்கும் மற்றவர்களுக்கும் வேலை செய்வதில் ஊக்கம் அதிகரிக்கும்; முன் ஊக்கமில்லாதவர்களுக்கும் அது ஏற்படும்.

(6) **முகப் பத்திரிகை.** இந்தக் காரியங்களை யெல்லாம் இடைவிடாமற் செய்வதற்கு ஒரு 'முகப் பத்திரிகை' அவசியமாகும். அதில் தமிழ்ப் பிரசாரத்தின் அவசியம், கிளை ஸ்தாபனங்கள், ஆங்காங்கு நடைபெறும் வேலைகள், அனுசரிக்க வேண்டிய முறைகள், பரீக்ஷை விவரங்கள், புஸ்தக ஆராய்ச்சி முதலியன விவரமாய்க் காணப்பட வேண்டும். தமிழ் கற்றவர்களுடைய வியாசங்களையும்

பிரசுரித்து அவர்களை உற்சாகப்படுத்தலாம். தமிழ்ப் பிரசாரத்திற்கென்றே அப் பத்திரிகை நடைபெறல் வேண்டும். இதனால் வேலை செய்பவர்களுக்கு ஊக்கமும் விளம்பரமும் உண்டாவது மிகவும் சுலபம். இது இருப்பதனால்தான் ஹிந்திப் பிரசாரர்களுக்கு விளம்பரம் அதிகமாக இருக்கிறது. இது இல்லாததால்தான் தமிழ் வேலைக்கு விளம்பரம் குறைவு.

(7) **பிரசங்கங்கள்.** தமிழ் நாட்டுப் பிரமுகர்களைக் கொண்டு, இடை விடாமல் பல விடங்களிலும் தமிழ்ப் பிரசாரத்தைப் பற்றிப் பிரசங்கங்கள் நடத்தலாம்.

(8) **மகாநாடுகள்.** பிரசார சபையின் சார்பாக, மாகாண, ஜில்லா மகாநாடுகள் கூட்டிப் பிரசார முறைகளையும் தமிழபி விருத்தியையும் ஆராயலாம்.

(9) **இதர அலுவல்கள்.** பிரசார சபை என்று ஒன்று ஏற்பட்டு விட்டால் இன்னும் என்னென்ன செய்யலாமென்பதை அதே கவனித்துக்கொள்ளும்.

மேலே கண்டவைகளெல்லாம் என் மனதில் கட்டப்பட்ட ஆகாயக் கோட்டைகளல்ல. ஹிந்திக்காரர்கள் இடைவிடாது அனுசரித்து வரும் கைகண்ட முறைகளாகும். பிரயாகை ஹிந்தி சாஹித்ய சம்மேளனம், காசி நாகரி பிரசாரிணி சபை, மத்திய இந்தியா ஹிந்திப் பிரசார சம்மேளனம், தக்ஷிண பாரத ஹிந்திப் பிரசார சபை இவைகளும் இவை போன்ற மற்ற சபைகளும் மேற்கண்ட முறைகளை அனுசரித்து வருகின்றன. அவைகளைப் பார்த்துவிட்டுத்தான் தமிழிலும் லாபகரமாக அவைகளை அனுசரிக்கலாம் என்று சொல்லுகிறேன்.

சங்கம் என்ற பெயரை வைத்துக்கொண்டால் மட்டும் ஒன்றும் நடந்துவிடாது என்றும், எல்லாம் வேலை செய்பவர்களைப் பொருத்தது என்றும் நான் நன்றாக அறிவேன். ஆனால் தமிழ் அபிவிருத்தியடைய வேண்டுமே என்ற எண்ணம் என் போன்ற பலருக்கு உண்டு என்பதில் எனக்குக் கொஞ்சங்கூடச் சந்தேகமில்லை. ஆகையால் ஒரு தமிழ்ப் பிரசார சபை ஏற்பாடானால் வேலை செய்வோருக்குக் குறைவில்லை என்று உறுதி கூறுவேன். தமிழ்ப் பற்றுள்ளவர்களும், தமிழ்ச் செல்வர்களும், தமிழபிமானிகளும் ஒன்றுகூடி வேலை செய்வார்களா?

பிரசார சபையை ஸ்தாபிப்பதைத் தவிர, ஹிந்தி இன்னும் பல முறைகளை அனுசரித்து முன்னேற்றமடைந்திருக்கிறது. அவைகளையும் எடுத்துக் கூற அவகாசம் ஏற்படும் என்று நினைக்கிறேன்.

அன்பு.

ஸ்ரீமதி *P. V.* சரோஜினி தேவி அவர்கள்.

அன்புஞ் சிவமுமிரண் டென்ப ரறிவிலார்
அன்பே சிவமாவ தியாரு மறிகிலர்
அன்பே சிவமாவ தியாரு மறிந்தபின்
அன்பே சிவமா யமர்ந் திருந்தாரே. —திருமூலர்.

மிகச் சிறந்தது. அன்பிற்கு ஓர் வரையறையில்லை. அன்பின் ஏற்றத்தாழ்விற்கேற்பப் பலவாறு அந்த அன்பு பெயர் பெறும். பெற்றோர்களுக்கு புத்திரரிடம் தோன்றும் அன்பு, "வாஞ்சை" என்றும், ஒருவனுக்குப் பிறனொருவன்பால் நிகழும் அன்பு "நட்பு" என்றும், தம்பதிகளுக்குள் ஏற்படும் அன்பு "காதல்" என்றும், ஒருவனுக்குத் தன்னிலும் தாழ்ந்த ஜீவன்களிடத்துண்டாகும் அன்பு "இரக்கம்" என்றும், ஆன்மாக்களுக்குக் கடவுளிடத்துண்டாகும் அன்பு "பக்தி" என்றும், இறைவனுக்கு மக்கள் மாட்டு நிகழும் அன்பு "அருள்" என்று பெயர் பெறும். ஓர் பக்தன் இறைவன் மீது கொண்ட அன்பின் மிகுதியால் பக்தி கொண்டு கடவுளை வழிபட்டுத் தன்னை மறந்து ஆனந்த வாரிதியில் அமிழ்கிறான். நம் நாட்டில் இருந்த தாயுமானவர், மாணிக்கவாசகர், இராமலிங்க ஸ்வாமிகள் முதலியோர்கள் போன்ற பக்தர்கள் பாடியிருக்கிற பாடல்களை இதற்குச் சான்றாகும். இவ்வன்பானது அறிவு முதிர்ச்சி ஆக ஆக தானும் முதிர்ச்சியுறும் தன்மையுடையது.

இவ்வன்பானது மந்ததரம், மந்தம், தீவிரம், தீவிரதரம் என நான்கு வகைப்படும். அரக்கானது வெயிலின் முன் உருகுதல் போல்வது மந்ததரமென்றும், மெழுகானது வெயிலுக்கு முன் உருகுதல் போல்வது மந்தமென்றும், நெய்யானது சூட்டினுக்குருகுதல் போன்றது தீவிரமென்றும், எண்ணெய் இடையறு தொழுதல் தீவிரதரமென்றும் சொல்லப்படும். இவைகளினுள் கண்ணப்பநாயனார் கடவுள்பால் செலுத்தியது தீவிரதரம் என்பதன்பாற்படும்.

உண்மை அன்பு ஒருவனுக்கு உண்டாவதற்குப் பெரியார்களுடைய கூட்டுறவும், ஞான நூலாராய்ச்சியும் இறைவனிடத்துப் பக்தியும் அவஸியம் வேண்டப்படுகிறது. கொல்லாமை, ஜீவகாருண்யம், சேவை, பிறர் வருத்தங் கண்டால் கைமாறு கருதாது அவர்களுக்கு உதவி செய்தல் முதலியவைகளை அனுஷ்டிக்க வேண்டும்.

உலகில் தாயின் அன்பு சாலச் சிறந்ததாகும்; மிகப் பரிசுத்தமுடையதாகும். தாயின் அன்பைப்பற்றி எத்தனையோ கற்றறிந்த பெரியோர்கள் சிறப்பித்துக் கூறியிருக்கிறார்கள். தாய் தன் குழந்தைகளின்மீது வைக்கும் அன்பிற்கு ஓர் அளவுண்டோ? ஓர் தாய் தன் இளங் குழந்தைக்குப் பாலூட்டித் தாலாட்டிச் சீராட்டி வளர்த்து, அதன் இனி புன்னகையைக் கண்டு மனமகிழ்ந்து, அது நோயுற்ற காலத்தில் மனம் வருந்தி, அதற்கு ஏற்ற மருந்தளித்து, அதன்பொருட்டுத் தான் பத்தியம் இருந்து, இரவு பகல் விழித்திருந்து அதன் சௌகரியத்தைக் கவனித்து, நோய் நீங்கும் வழியிலேயே கண்ணுங் கருத்துமாய் இருக்கிறாள். தன் குழந்தையை ஆடை யணிகளால் அலங்கரித்து, அதன் அழகைக் கண்டு வியந்து, அதன் தளர் நடையையும் மழலை மொழிகளையும் கண்டும், கேட்டும் மகிழ்ச்சி மிகுதியால் குழந்தையைக் கட்டியணைத்து முத்தமிட்டுத் திருஷ்டி கழித்து, "என் கண்ணே, கண்மணியே, முத்தே, பவழமே, செல்வமே" என்று பலவாறு கூறி மகிழ்ச்சியடைகிறாள். பிறகு குழந்தை வளர வளர அதை நல்ல வழியில் பழக்கி வருகிறாள்.

"ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன்மகனைச்
சான்றோன் எனக் கேட்ட தாய்"

என்னும் வள்ளுவர் கருத்துக்கேற்பத் தன் மகன் கல்வியிற் சிறந்து புகழ்பெறுவதைக் கேட்கும் பொழுது, பெற்ற அன்றையவிடப் பெரிது மகிழ்ச்சி அடைகிறாள். இதனாலன்றோ கடவுளுக்கு "தாயுமானவர்" என்ற பெயர் உண்டாயிருக்கிறது. நாம் அனைவரும் நம் அன்னைமார்களின் மீது மிக்க அன்பாய் இருத்தல் வேண்டும்.

தந்தையும் தம் மக்களை அன்புடன் நல்வழியில் பழக்கிக் கல்வி கற்பித்து, அவர்கள் மேன்மையுறும் வழியைத் தேடுகிறார். இது பற்றியே

"தந்தை மகற்காற்று நன்றி யவையத்து
முந்தி யிருப்பச் செயல்"

என்றும் தந்தைக்கு மகன் செய்யும் பிரதி உபகாரம்

"மகன் தந்தைக் காற்றுமுதவி இவன்தந்தை
என்நோற்றான் கொல்லெனும் சொல்"

என்றும் கூறப்பட்டிருக்கிறது.

மனிதன் சேர்ந்து வாழும் பிராணி; ஆகையால் மனிதனுக்கு கூட்டுறவு அவஸியமாகும். நண்பர்களுடைய அன்பும் மிக்க உயரியதாகும். ஒருவரும் நண்பர்களில்லாமல் ஒருவர் தன் வாழ்க்கையைச் சந்தோஷமாய் நடத்த முடியாது. நண்பர்களில்லா வாழ்வை புஷ்பங்களில்லா நந்தவனத்திற்கு ஒப்பிடலாம். ஒருவருக்குத் தன்மீது உண்மை யன்புடையவனும், தன் க்ஷேமத்திலே கண்ணுங் கருத்தும் உடையவனும் இருக்கப்பட்ட நண்பன் ஒருவன் இருப்பானாயின், தனக்குத் துன்பம் வந்தபோது தன் நண்பனிடம் தன் துயரங்களைக் கூறி நண்பனுடைய ஆறுதல் மொழிகளால் எவ்வளவோ சந்தோஷமடைகிறான். தான் ஒரு காரியத்தைச் செய்யும்பொழுது தன் நண்பனுடன் ஆலோசித்து எது நல்லது? எது கெட்டது? என்று தெரிந்து நடக்கிறான். நற்குண நல்லொழுக்கமுடைய இருவர், ஒருவரையொருவா சிநேகிப்பார்களானால் அவர்களுடைய அன்பு அவர்களுடைய உயிர் தத்துவம் உடலைவிட்டுப் பிரியும்வரையில் மாறாது. தமது நண்பர்களின் பொருட்டுத் தம் உயிரைக் கொடுக்கவும் பின்வாங்கமாட்டார்கள். நண்பர்களைவிடச் சிறந்தவர்கள் ஒருவருமில்லை. உண்மை நண்பர்களே ஒரு சிறந்த பெரிய பொக்கிஷம்

"உடுக்கை யிழந்தவன் கைபோல வாங்கே
இடுக்கண் களைவதாம் நட்பு"

என்னும் வள்ளுவர் வாக்கே நட்பின் பெருமையைக் காட்டுகிறதல்லவா?

சிநேகிதர்களின் அன்பை விளக்கிக் காட்டுவதற்கு அநேக கதைகள் இருக்கின்றன. அவைகளில் ஆங்கிலக் கவியாகிய ஷேக்ஸ்பியர் என்பவர் இயற்றிய "வெனிஸ் வர்த்தகன்" என்னும் கதையைச் சான்றாகக் கூறலாம். அதில் கூறப்பட்டிருக்கும் அந்தோனியோ என்னும் வர்த்தகன், தன் நண்பன் பசானியோ என்பவன் பெல்மண்டு தேசத்து அரச குமாரியாகிய போர்ஷியாவை மணம்புரிவதற்கு விரும்பி, அதற்கு வேண்டிய பணத்தைத் தன் நண்பன்மாட்டு வேண்ட, அந்தோனியோ கையில் பணமின்மையால் தன் நண்பன் பொருட்டு மிக்க துர்க்குணமுடைய ஷைலக் என்னும் யூதனிடம் பணம் கடனாக வாங்கித் தன் நண்பனுக்கு அளித்ததுமன்றி, குறித்த நாளில் பணம் கொடுக்கத் தவறினால் தன் சதையில் சிறிது பாகம் அறுத்துக் கொடுக்க வேண்டும் என்று ஷைலாக் கூறிய நிபந்தனைக்கு ஒப்புக்கொண்டு, அவ்வாறே தன் சதையைக் கொடுக்கச்

சந்தோஷமாய் ஒப்புக்கொண்டானல்லவா? என்னே நட்பின் பெருமை! இச் செய்தியறிந்த பசானியோ மனம் மிக வருந்தித் தன் மனைவியுடன் சந்தோஷமாய் இருப்பதை விட்டுத் தன் நண்பனை மீட்கத் திரண்ட பொருள் எடுத்துக்கொண்டு வந்து யூதனிடத்தில் கொடுத்து வேண்டிக்கொண்டானல்லவா?

அவர்கள் இருவருடைய ஒப்பற்ற அன்பைக் கண்டு கடவுள் போர்ஷியா மூலமாய் அவர்களுக்குச் சந்தோஷத்தை அனுப்பினார். தன் நண்பனை மீட்க, நியாயவாதி வேடம்பூண்ட போர்ஷியா, பசானியாவைச் சோதிக்கும்பொருட்டு, விவாக காலத்தில் மனைவி அவனுக்குக் கொடுத்த மோதிரத்தைக் கேட்க, பசானியோ அதை மறுக்காமல் தன் காதல் மனைவி தனக்கு அளித்த மோதிரத்தை நியாயவாதிக்குக் கொடுத்துவிட்டானல்லவா? இதுவும் தன் நண்பனின்மீது வைத்த அன்பினாலல்லவா? ஆதலால் நண்பர்களின் அன்பு மிகச் சிறந்தது என்பது அங்கை நெல்லியென விளங்குகிறதல்லவா? "அமெரிக்கா தேசத்துத் தலைவரான ஆபிரகாம் லிங்கனுக்கு நேசர்களைத் தவிர்த்து ஆஸ்தி கிடையாது" என்று ஒரு நூலாசிரியர் கூறுகிறார். "எங்கு சென்ற போதிலும் அங்கெல்லாம் நண்பர்கள் இருக்கட்டும். இல்லாவிடில் நேயர்கள் உண்டாக்குங்கள். ஒருவருமில்லாவிட்டாலும் சினேகர்களை விலைக்கேனும் வாங்குங்கள்" என்று டாக்டர் O. S. மார்டன் என்பவர் எழுதுகிறார். நண்பர்களால் எத்தனையோ பெயர்கள் முன்னுக்கு வந்திருக்கிறார்கள்! பெயர் பெற்றிருக்கிறார்கள்! சித்தி பெற்றிருக்கிறார்கள்! அபாயங்களிலிருந்து தப்பித்திருக்கிறார்கள்! அன்பர்கள் பெருமை பெரிது பெரிது.

ஒரு ஆடவனும், ஒரு பெண்ணும் ஒருவர்மீது ஒருவர் காதல் கொண்டு அவர்களுடைய மனமும் ஒருமனப்பட்டபின் அவர்களுடைய காதலுக்கு யாதொரு இடையூறுமின்றி, அவர்களுடைய இஷ்டம்போல் விவாகம் நிறைவேறுமானால் அவர்களுக்கு அதைவிட மோட்சம் வேறுண்டோ? ஒருவருக்கு உண்மைக் காதலில் சித்தி கிடைத்துவிட்டால், அவருக்கு ஒப்பற்ற வான நிதி—அன்பின் பொக்கிஷம் கிடைத்து விட்டதாகும். இதுபற்றியே

"காதல ரிருவர் கருத் தொருமித்து
ஆதரவு பட்டதே இன்பம்"

என்று கூறப்பட்டிருக்கிறது. அப்படியின்றி ஒப்புயர்வற்ற காதல் சிறிதுமின்றிப் பெற்றோர்களின் கட்டாயத்திற்காக கடமை விவாகம் செய்துகொள்ளும் தம்பதிகள் எவ்வாறு இல்லற வாழ்க்கையை ஒழுங்காய் நடத்தமுடியும்! இல்லற வாழ்க்கைக்கு முக்கியமானவர்களாகிய

தலைவனும், தலைவியும் காதலினால் ஒருமனப்பட்டவர்களாய் இருந்தால்தான் இல்லற வாழ்க்கையை அன்பாயும் ஒழுங்காயும் நடத்த முடியும்.

மனமற்ற கட்டாயக் கடமை மணத்தால் ஆண்களிலும் பெண்களிலும் கண்ணீர் வடிப்போர் எத்தனை பேர்! நடைப் பிணமாக வாழ்வோர் எத்தனை பேர்! பைத்தியம் பிடித்துக்கொண்டவர்கள் எத்தனை பேர்! தங்கள் தங்கள் காதல் வெற்றி பெறாததால், காதல் பலி ஆனவர்கள், ஆகிக்கொண்டிருப்பவர்கள் கணக்கில்லை. பொய்யாமொழிப் புலவரது காமத்துபாலைக் கண்டு மகிழ்ந்த தமிழ் நாட்டில்—காதல் தெய்வத்தைக் கைகூப்பி வணங்கிய தமிழகத்தில்—தெய்வீகத் திருக்காதலின் உயர்வையும் சக்தியையும் உலகத்திற்குப் புகட்டிய தமிழ் தேசத்தில், சாதி பேதத்தாலும், அந்தஸ்து பேதத்தாலும், இன்னும் அநேக வகை வித்தியாசங்களாலும் ஆ! மனித வாழ்விற்கு நந்தாமணி விளக்கான—தெய்வீகத் தன்மை வாய்ந்த காதல், இன்று மதிக்கப்படவில்லை. என்று காதலின் அருமை பெருமை மர்மத்தை நமது நாடு அறியுமோ, அன்றுதான் நமது தேசம் பண்டைப் பெருமை அடையப்போகிறது. "காதல் இல்லையேல் சாதல்" என்று தேசிய ஆசுகவி பாரதியார் முழக்குகிறார். பெண்மையைப் போற்றி, உணர்வும் உயிரும் கொடுக்கும் தெய்வீக மணங்கமழும் காதலை வணங்குங்கள்.

அன்பு ஆக்கப்படும் பொருள் அல்ல. தானாகவே ஒருவர்மீது அன்பு உண்டாக வேண்டும். அன்பு விலைமதிப்பற்றது; தெய்வீகமானது. அன்பிற்கு ஒருபோதும் அழிவு உண்டாகாது. இவ்வொப்புயர்வற்ற செல்வமாகிய அன்பு ஒவ்வொருவர் உள்ளத்திலும் நிறைந்திருக்க வேண்டும். அன்பற்ற இருதயமுடையவர்கள் ஒருவராலும் விரும்பப்பட மாட்டார்கள்.

"அன்பின் வழியது உயிர்நிலை அஃதிலார்க்கு
என்புதோல் போர்த்த உடம்பு"

என்பதுபோல் அன்பில்லாதவர்களுடைய வாழ்க்கை நல்ல வாழ்க்கையாகாது.

அன்பில்லாதவர்களுடைய வீட்டில் ஒருவரும் நுழையமாட்டார்கள். யாவராலும் வெறுக்கப்படும் அவர்கள் எவ்வாறு சந்தோஷமாயிருக்க முடியும்? அவர்கள் முகம் பொலிவிழந்து தோன்றும். அவர்கள் உலகில் நடைப்பிணம் போன்றவர்களே யாவார்கள். ஆதலால் நாம் பிறரால் வெறுக்கப்படுவதைவிட, நேசிக்கப்படுவது மிகச் சிறந்ததாகும். ஒவ்வொருவரும் தங்கள் பெற்றோர், சகோதர சகோதரிகள், பந்துக்கள், சிநேகிதர்கள், இன்னும் மற்ற இதர

ஜனங்கள் முதலியவர்களிடத்திலும் அன்பாய் இருக்கவேண்டும். நமது வீட்டிற்கு வரும் விருந்தினர்களை அன்பாய் உபசரிக்க வேண்டும். நாம் நமது விருந்தினர்களை அன்பாய் உபசரிக்காவிட்டால் அவர்கள் எவ்வாறு நம் வீட்டில் சந்தோஷமாய் இருக்கமுடியும்? நாம் நமது வீட்டில் வேலைசெய்யும் பணியாளர்களிடத்திலும் அன்பாய் இருந்து அவர்களுக்கு நம்மால் இயன்ற உதவி செய்யவேண்டும். அப்போதுதான் அவர்களுக்கும் நம் மீது உண்மை விஸ்வாசம் இருக்கும்.

எளியவர் இல்லம் குடிசையாயினும் அவர்கள் உள்ளம் அன்பு நிறைந்ததாய் இருக்குமானால், அதுவே குபேரன் அரண்மனைக்குச் சமானமாகும். பெரிய செல்வவந்தர்களின் வீடேயாயினும், அதில் வாசம் செய்பவர்கள் அன்பற்றவர்களாயின் அவர்கள் வீடு சிங்கம், புலி, கரடி முதலிய கொடிய மிருகங்கள் வசிக்கும் காட்டிற்குச் சமானமாகும். செல்வவந்தர் வீட்டில் அன்பின்றிக் கடமைக்கு அறுசுவை உண்டி அளிப்பது எளியவர் இல்லத்தில் அன்போடு அளிக்கும் கூழிற்குச் சமமாகாது.

சகித்தற்கரிய துயரமடைந்தவர்களும் நற்குணமுள்ளவர்களிடம் பழகுவார்களானால் அவர்களுடைய அன்புள்ள வார்த்தைகளே இவர்களுடைய மனத் துயரை ஆற்றும் அமிர்த சஞ்சீவிபோன்றது.

"மனிதனை எவ்வளவு தூரம் நேசிக்கிறாய் என்றுசொல்; நீ கடவுளிடம் எவ்வளவு தூரம் சென்றிருக்கிறாய் என்று சொல்லுகிறேன்" என்று டிரின் என்னும் அமெரிக்க அறிஞர் கூறுகின்றார். கண்ணால் காணும் கடவுள் அம்ஸமான மனிதனை நேசிக்காதவனா, கண்ணால் காண முடியாத கடவுளை நேசிக்கப் போகிறான்? மனிதனிடம் அன்பு செலுத்துவதே கடவுளிடம் அன்பு செலுத்துவதாகும்.

"காலினில் ஊறும், கரும்பினிற் கட்டியும்
பாலினுள் நெய்யும், பழத்துள் இரதமும்
பூவினுள் நாற்றமும், போலுளன் எம்மிறை
காவலன் எங்கும் கலந்து நின்றானே"

என்ற சிவஞானச் செல்வராம் திருமூல நாயனாது அருமை மாணிக்கவாசகத்திற் கொப்ப இறைவன் எங்கும் குடிகொண்டிருக்கிறார்.

நமது நினைப்புக்களெல்லாம் வஸ்துக்கள் நம்முடைய அன்பான நினைப்புகள் உலகமெங்குப் பரவி உலக மக்களுக்கு உதவி செய்துவிட்டு, முன்னைக் காட்டிலும் 1000 மடங்கு சக்தி பெற்று நம்மிடமே திரும்பிவந்து, நம்மைத் தூய்மைக்குக்கொண்டு செல்கின்றன. அன்பான எண்ணங்கள் நம்மை மிருக நிலையினின்றும் தெய்வீகத்திற்குக் கொண்டு போகின்றன. அன்பு நினைப்புகள் நமது உள்ளத்தில் அரும்ப ஆரம்பித்தவுடன் நமது நிலைமை முற்றிலும் மாற ஆரம்பிக்கிறது. அன்பான எண்ணங்களும் அன்பான வார்த்தைகளும் அன்பான செய்கைகளும் நமது உயர் வாழ்விற்கு அவஸியம் தேவை. சகோதர சகோதரிகளே! நாம் யாவரிடத்திலும் அன்பாய் இருந்தால், மற்றவர்களுடைய அன்பையும் பெறுவோம் என்பது நிச்சயம். நம் திருநாட்டில் ஒவ்வொருவர் உள்ளத்திலும் அன்பு நிலைத்திருக்கவேண்டும் என்று இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

அன்பே கடவுள்
கடவுளே அன்பு.

விருந்துகள்.

ஜனாப் S. சையது அஹமது அவர்கள்.

விருந்துகள் அளிப்பதில் நமது இந்தியா பெயர் போனது. அன்பர்களுக்கு திருப்தியாக விருந்தளித்து மகிழும் சுபாவம் மனித வர்க்கத்திற்கே பொதுவானதாயினும், இந்தியர்களிடையே சிறந்து விளங்குவதைக் காணலாம்.

நாம் தற்போது அளிக்கும் விருந்துகளை பைத்தியக்கார விருந்துகள், கௌரவ விருந்துகள், காரிய விருந்துகள், உண்மை விருந்துகள் என நான்கு வகையாகப் பிரிக்கலாம்.

'பைத்தியக்கார விருந்துகள்'

பட்டம் பதவிகளோ அல்லது தேர்தல்களில் வெற்றியோ பெற்றால் அப்படிப் பெற்றவர்களுக்கு நண்பர்களாகக் கூடி விருந்தளித்தல் இப்போது சகஜமாகிவிட்டது. விருந்துகளின் நோக்கம் என்ன? நாம் அடையும் சந்தோஷத்தை பிறருக்கும் பகிர்ந்தளிப்பது; பசித்தவர் பசியை ஆற்றுவது. இந்த இரண்டு நோக்கங்களில் ஏதாவது

ஒன்று கொண்டு அளிப்பதே விருந்தாகும். பட்டம் பதவிகளோ தேர்தலில் வெற்றியோ பெற்றால் அப்படிப் பெற்றவர் முதல் நோக்கத்தைக் கொண்டு பிறருக்கு விருந்தளிக்க வேண்டியதே நியாயமாகும். அவர் அடையும் சந்தோஷத்தை நேயர்களும் அடையும்படி செய்ய வேண்டியதே முறையாகும் (அவஸியம் செய்தே தீரவேண்டுமென்பதில்லை.) சந்தோஷமடையும் வதூவரர்கள் பிறருக்கு விருந்தளிக்கிறார்களே யொழிய நண்பர்கள் அவர்களுக் களிப்பதில்லை. ஆனால் இப்போது நடைபெறுவதென்ன? தலைகீழ்ப் பாடம்தான்!

இது ஒரு பைத்தியக்காரச் செயலேயாகும். ஒருதடவை ஒரு கனவான் தேர்தலில் வெற்றி பெற்றார். வழக்கம்போல் அவருடைய நண்பர்களுக்கு 'குஷி' கிளம்பிவிட்டது. விருந்து வெகு விமரிசையாக நடைபெற்றது. ஆடலுக்கும், பாடலுக்கும், ரோஜா மாலைக்கும் ஒரு குறைவுமில்லை. 'இவர் வெற்றி பெற்றது எங்கள் பாக்யம், எங்களுக்காக உழை உழையென்று உழைக்கப் போகிறார் என்றெல்லாம் வானமளாவப் பேசப்பட்டது. உபசாரப் பத்திரமும் வாசித்துத் தரப்பட்டது. காலமும் விரைவில் கழிந்தது. அவர் அப் பதவியிலிருந்து விலகும் நாளும் வந்தது. அவருக்கு விருந்தளித்த தோழர்களிடம் போய் 'ஏன் ஐயா! தடபுடலாக விருந்தளித்தீர்களே! அவர் உங்களுக்காக என்ன சாதித்துவிட்டார்?' என்று கேட்டேன். எல்லாரும் தலையைச் சொரிந்துகொள்ளத் தலைப்பட்டார்கள்.

நேயர்களே! இந்த ஆபத்திலிருந்து தப்பிக்க வேண்டுமானால் ஒன்று செய்யலாம். வெற்றி பெற்றபோது ஒன்றுஞ் செய்யாது விட்டு பதவியிலிருந்து விலகும் போது, உண்மையாகவே உழைத்திருந்தால் அப்போது விருந்தளிக்கலாம். தேர்தலில் வெற்றி யடைந்த போது ஜெயமடைந்தவர் விருந்தளிப்பதே அழகாகும். இப்போது சொல்லுங்கள்! இவைகளெல்லாம் பைத்தியக்கார விருந்துகளா இல்லையா?

'கௌரவ விருந்துகள்'

அற்ப சொற்ப விசேஷங்களி லெல்லாம், நாமிருக்கும் வறுமை நிலைமையில் படே படே பேர்வழிகளாகப் பொறுக்கி யெடுத்து விருந்தளிப்பதே கௌரவ விருந்துகள் என்று அழைக்கலாம். சந்தோஷ காலங்களில் இப்போதுள்ள நிலைமையில் சந்தோஷத்தையே அதிகம் பெறாத ஏழை எளியோருக்கு உண வூட்டி மகிழ்விப்பதே சிறந்தாகும். இதில் விருந்துகளின் இரண்டு நோக்கங்களும் நிறைவேறும். இதை விடுத்து அனாவஸியமாக, ஏற்கனவே தின்று கொழுத்திருக்கும் ஆசாமிகளுக்கு விருந்தளிப்பது அழகாகாது.

கொழுத்தவர்களை மென்மேலும் கொழுக்கச் செய்வதும், மெலிந்தவர்களை மென்மேலும் மெலியச் செய்வதுமே நமது நோக்கமா?

ஒரு சமயம் ஒருவர் தன் சிநேகிதருக்கு பழம், ஜிலேபி, ஹல்வா, தேநீர் முதலியவைகளை ஊட்டிக்கொண் டிருந்தார்.

'போதும்! போதும்! வேண்டாம். என்னால் சாப்பிட முடியாது.'

'இன்னும் ஒரு ஜிலேபியாவது எடுத்துக்கொள்ளுங்கள்.'

'மன்னிக்க வேண்டும். என்னால் முடியாது.'

'நீங்கள் என்ன மனிதர்? ஒரு பழமாவது சாப்பிடுங்கள்'

என்று வாதாடிக்கொண் டிருந்தார்கள். அப்போது ஒரு ஏழைச் சிறுவன்—அவனுடைய பரிதாபகரமான தோற்றத்தை இங்கு விவரிப்பானேன்? 'ஐயா!' என்று கையை நீட்டினான்.

'போடா! காசில்லை' என்ற பதில் கிடைத்தது.

'காசு வேண்டாம்; பசிக்கிறது. எதாவது தந்தால் சாப்பிடுகிறேன்' என்று அங்கிருந்த வாழைப் பழத்தையே கெஞ்சும் பார்வையில் உற்று நோக்கினான்.

'போடா என்றால் இன்னும் நிற்கிறாயா?' என்றதும் 'சுளீர்' என கையில் வைத்திருந்த பிரம்பால் அச் சிறுவன் கையில் அடித்தார் அந்த நண்பர்.

'அம்மம்மா!' என்று அச் சிறுவன் அலறியதைக் கேட்டதும் என் உள்ளம்............

இத்தகைய விருந்துகளில் தன் கௌரவத்தை நிலை நாட்டுவதிலேயே அன்பர்கள் கண்ணுங் கருத்துமா யிருக்கிறார்கள். படே படே ஆசாமிகளுக்கு விருந்தளித்து, இன்னார், இன்னார் பாத தரிசனம் பெறும் பாக்யம் நமது வீடு பெற்றது என்னும் கௌரவத்தைப் பெறுவதால் என்ன கிடைத்துவிடும்? இத்தகைய விருந்துகளில் 'இது குற்றம், அது குற்றம்' என்று விருந்தாளிகள் பேசிக்கொள்வதையே அதிகம் கேட்கலாம். விருந்தளித்துக் குற்றச் சாட்டுகளைப் பெறுவோர் எத்தனை பேர்?

ஸ்ரீ ராமகிருஷ்ண பரம ஹம்ச தேவர்.

திரு. T. S. அவனுசிலிங்கம் அவர்கள், B.A., B.L.

ஸ்ரீ ராமகிருஷ்ணர் வங்க நாட்டிலே ஒரு குக்கிராமத்திலே, ஒரு எளிய பிராம்மணக் குலத்திலே பிறந்தவர். அவர் தாய் தந்தையர்கள் வைதீகப் பரம்பரையைச் சேர்ந்தவர்கள். நவநாகரீகத்தைக் கிஞ்சிற்றும் அறியாதவர்கள். ஸ்ரீராமகிருஷ்ணரும் கல்லாத நல்லவர்களில் ஒருவர். ஆங்கிலம் கொஞ்சமேனும் தெரியாதவர். வங்காளத்திலும் பண்டிதரென்று சொல்லமுடியாது. சமஸ்கிருதத்திலும் அவருடைய ஞானம் போற்றத் தக்கதன்று. உடம்பிலும் வலுத்தவரல்ல. அழகிலும் சிறந்தவரெனச் செப்பமுடியாது. செல்வமில்லை; கல்வியில்லை; அழகு இல்லை. எனினும் அவர் உலகமெங்கும் போற்றப்படுகிறாரென்பது ஓர் மறுக்கமுடியாத உண்மை. செல்வவந்தர்கள் அவரைத் தெய்வமெனப் போற்றுகிறார்கள். கற்றோர்கள் அவரைக் கல்விக் களஞ்சியமெனத் தொழுகின்றார்கள். அழகை நாடுபவர்கள் அவர் படத்தைப் பார்த்து லயிக்கின்றார்கள். இதற்குக் காரணம் என்ன? இதற்குப் பதில் சொல்லுவது எளிது. மக்கள் நாடும் பொருள் அவர்பால் காணப்படுகிறது.

புவியில் பலரும் செல்வத்தை நாடுகின்றனர். பெரும்பான்மையோர் செல்வத்தைச் சம்பாதிப்பதிலும், அதைக் காப்பாற்றுவதிலும் தங்கள் வாழ்நாளில் பெரும் பகுதியைச் செலவுசெய்கின்றனர். ஏனெனில் அதன்மூலம் அவர்கள் சுகம்பெற நினைக்கின்றனர். அவர்கள் உண்மையில் நாடுவது இன்பம் அல்லது ஆனந்தம். செல்வம் ஆனந்தம் தருமென்ற நம்பிக்கையின்பேரில் அவர்கள் செல்வத்தை நாடுகின்றனர். அவ்விதமே கல்வியை நாடுகிறவர்களும் இன்பத்தையே விரும்பி, அதைப் பெறுவதற்குக் கல்வி உதவி என்று நம்பிக் கற்கின்றனர். அவ்விதமே அழகை நாடுவோரும் உண்மையில் இன்பத்தையே விழைகின்றனர். இங்ஙனமே கர்மத்தில் ஈடுபடுவோரும், புகழைக் காமிப்போரும் இக் காரணம்பற்றியே அவ்விதம் செய்கின்றனர்.

ஸ்ரீராமகிருஷ்ணர் ஆனந்த சொரூபமாய் விளங்குகிறார். அவர் எழில் நிறைந்த முகமும், புன்சிரிப்புடன் பாதி திறந்த உதடுகளும், உள்நோக்கு வாய்ந்த ஆனால் வெளிநோக்கோ என்று சந்தேகப்படக் கூடிய கமலக் கண்களும் அவர் அனுபவிக்கும் ஆனந்தத்தை உலகிற்குப் பறைபறைகின்றன.

காக முறவு கலந்துண்ணக் கண்டீரகண்டா காரசிவ
போகமெனும்பே ரின்பவெள்ளம் பொங்கித் ததும்பிப் பூரணமா
யேக வுருவாய்க் கிடக்குதையோ வின்புற் றிடநா மினியெடுத்த
தேகம் விழுமுன் புசிப்பதற்குச் சேர வாருஞ் சகத்தீரே

என்ற தாயுமானப் பெம்மான் திருமொழிகளுக்கு அவர் உருவமும் வாழ்க்கையும் சான்றாகயிருக்கின்றன. நம்பிக்கை குறைந்த இவ் யுகத்திலே இவ் வுண்மையை ரூபிக்க வந்து தோன்றினார்போலும்.

பகரவொண்ணு ஆத்மீக உண்மைகளைப் பால்மணம் மாறாத பாலகரும் எளிதில் உணரும் வண்ணம் சின்னஞ்சிறு கதைகளில் அழகாகச் சொல்லியுள்ளார். அவைகளில் சிலவை இங்கு எடுத்துரைக்கின்றோம்.

'உலகம் எத்தகையது?' என்று ஒருவர் ஸ்ரீபரமஹம்ச தேவரைக் கேட்டார். அதற்கு அவர் 'உலகம் கற்பகத் தருவைப்போன்றது' எனச் சொல்லி மீண்டும் உரைத்தார், 'ஒரு காட்டில் ஒரு கற்பகத் தரு இருந்தது. ஒரு வழிப்போக்கன் அவ் வழியாக வந்துகொண்டிருந்தவன் அதனடியில் வந்து சேர்ந்தான். சூரியனுடைய வெப்பம் மிக அதிகமாயிருந்தது. கொஞ்சம் குளிர்ந்த காற்று இருந்தால் எவ்வளவு சௌகரியமா யிருக்குமென நினைத்தான். அவன் கற்

'காரிய விருந்துகள்'

தந்திரசாலிகள், தங்களுடைய ஏதாவதொரு காரியத்தை ஒருவரால் சாதித்துக் கொள்ளும் உள் நோக்கத்தோடு அளிக்கும் விருந்துகளை காரிய விருந்துகள் என்று அழைக்கலாம். காரியம் யாரால் ஆக வேண்டுமோ அவருடைய சிநேகிதத்தை பெருக்கிக் கொள்வதற்காக அடிக்கடி விருந்தளிப்பதுண்டு. இதை பச்சையாக லஞ்சம் என்று சொல்லலாம். காரியம் ஆனபின் 'தாங்கள் எந்த ஊர்?' என்று கேட்பார்கள்.

'உண்மை விருந்துகள்'

இவைகளை யெல்லாம் நீக்கி அளிக்கும் விருந்துகளே உண்மை விருந்துகளாகும். உண்மை விருந்துகளை அதிகம் காண முடியவில்லை. ஏன்? ஒன்றும் இல்லை என்றே சொல்லலாம். இப்போது அளிக்கப்படும் விருந்துகள் மேற் சொன்ன மூன்று வித விருந்துகளுக்குள்ளேயே அடங்குகின்றனவே யொழிய உண்மை விருந்துகளில் சேர்க்க முடியவில்லை. உண்மை விருந்துகள் இந்தியாவில் பெருகுமா?

பகத் தருவுக்கு அடியில் நின்றுகொண்டிருந்ததால், அவன் நினைத்த நினைவும் நிறைவேறியது. நல்ல குளிர்ந்த காற்று அடிக்கத் தொடங்கியது. கொஞ்சநேரம் உட்கார்ந்து களைப்பாறியபின் நல்ல உணவிருந்தால் நல்லதென நினைத்தான். உடனே அறுசுவையுடன் உணவு அவன்முன் தென்பட்டது. உறங்குவதற்கு ஒரு கட்டிலிருந்தால் சௌகரியமெனப் பின் நினைக்கவே ஒரு கட்டிலும் உடனே எதிர் நின்றது. தன் ஆனந்தத்தைப் பூர்த்திசெய்ய ஒரு அழகான பெண் வேண்டுமென நினைக்க அதுவுங் கிடைத்தது. இவைகள் அனைத்தும் கிடைக்க அவனுக்குப் பிரமையுண்டாகிற்று. ஒரு காட்டில் தன் முன் தோன்றிய அனைத்தையும் யோசித்து, இங்கு ஒரு புலி வந்தால் என் செய்வது? அது என்னை விழுங்கிவிடுமேயென நினைத்தான். உடனே ஒரு புலி தோன்றி அவனை விழுங்கிவிட்டது.’

இக் கதையிலிருந்து விளங்கும் உண்மைகள் பல. முதலாவது மனிதன் நாடிய பொருள் கைகூடும். அவன் ஒன்றன்பின் ஒன்றாக நாடி, நாடிய பொருட்களை ஒன்றன்பின் ஒன்றாகப் பெறுகிறான். நாட்கள் செல்லச் செல்ல அவன் மயக்கம் அதிகமாகிறது. தான் நாடிப் பெற்ற பொருட்கள் அனைத்தும், பெண்டு பிள்ளைகள், செல்வம், சுற்றம் அனைத்தும் அழிவதைக் காண்கிறான். சாவை நினைத்துப் பயப்படுகிறான். கடைசியில் அதில் அழிந்து படுகிறான்.

ஆனால் உயர் வாழ்வு பெறுவது எப்படியெனில் அதற்கும் ஒரு கதை சொல்லுகிறார். குளவிமொட்டு வைப்பதில்லை. மற்ற ஒரு புழு வைக்கும் புழுவைக் கொண்டு வருகிறது. அதைப் பலமாகக் கொட்டுகிறது. அந்தச் சிறு புழு தன்னைக் கொட்டிய குளவியையே நினைத்துக் கொண்டிருக்கிறது. இந்த நினைவின் காரணமாக அந்த புழுவும் குளவியாகின்றது. அம்மாதிரியே நாமும் உயர்ந்த விஷயங்களைப்பற்றி நினைப்பதன் மூலம் உயர் வாழ்வு பெறலாம். ‘உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல், மற்றது தள்ளினும் தள்ளாமை நீர்த்து’ ஏனெனில் இதன் மூலம் நாம் உயர்ச்சி பெறுகிறோம்.

நம்மிடமிருக்கும் துற் குணங்களைப் போக்கிக் கொள்வதெங்ஙனம் எனில் அதற்கு ஸ்ரீ பரம ஹம்சதேவர் ஒரு சிறு உதாரணம் உரைக்கின்றார். ஒருவன் ஒரு நாய் வளர்த்தான். அத்துடன் அவன் கொஞ்சி விளையாடுவான். ஆதலால் அதுவும் அவன் மேல் குதித்து விளையாடும். நாயிடத்தில் அதிகப் பழக்கம் கூடாதெனவும், ஒரு வேளை அது அவனைக் கடிக்க நேரிடலாமென்றும், ஆதலால் அத்துடன் அதிகம் பழகுவதை விட்டுவிட வேண்டுமென்றும் ஒரு பெரியார் அவனுக்குச் சொன்னார். அவனுக்கும் அது சரியெனப்பட்டது. அது முதல் நாயைக் கொஞ்சாமல், பக்கத்தில் வரவிடாமல் தடுத்தான். தன் மேல் வந்து குதித்த போது அடித்தான். சில தினங்

களில் நாயும் எஜமானுடைய மாறுதலைக் கண்டு, அதற்குத் தகுந்தபடி நடந்துகொண்டது. அம்மாதிரியே விடா முயற்சியுடன் முயற்சி செய்வோமானால் துற் குணங்களை விட்டுவிடல் எளிதெனக் காண்பித்தார்.

ஆனால் எவரும் தனக்கு உயர் வாழ்வு கிடைக்காதென ஏங்க வேண்டியதில்லை என்பது அவர் கொள்கையாகும். முந்திய வினைகளின் பயனாக நம் தற்காலத்திய நிலைமையைப் பெற்றிருக்கிறோம். அங்ஙனமே நம்முடைய பிந்திய நிலைமை நம்முடைய தற்காலத்திய வினையையும் முயற்சியையு மொட்டியது. முயற்சி திருவினையாக்கும். எவ்வளவுக்கெவ்வளவு முயற்சி செய்கின்றோமோ அவ்வளவு பயனையும் நாம் அடைவோமென்பது இயற்கை விதி. முன்னேற்றத்திற்கு ஒரு அளவில்லை. ‘வெள்ளத்தனையது மலர் நீட்டம், மாந்தர்தம் உள்ளத்தனையது உயர்வு.’ ஆதலால் முன்னேற விரும்புவோர் தங்களுக்கு ஒரு வரை வைத்துக்கொள்ளவேண்டாம். ஒரு அளவுக்கு மேல் ஒருவன் முன்னேற முடியாதென்று சொல்ல எவனுக்கும் உரிமையில்லை. ஒருவனுடைய முயற்சியே அவனுடைய முன்னேற்றத்திற்கு வரை செய்யத்தக்கது. முன்னேற விரும்புவோர் இடையறாது முயற்சி செய்யவேண்டும். இங்ஙனம் செய்வோர் அதற்குத் தகுந்த பயன் பெறுவார்கள்.

இவ் வுண்மையை விளக்கவும் ஸ்ரீபரமஹம்ச தேவர் ஒரு சிறு கதை செப்பினார். “ஒருவன் அனுதினமும் காட்டுக்குச் சென்று விறகுவெட்டி ஜீவனம் செய்துகொண்டிருந்தான். ஒருநாள் ஒரு பெரியாரை அவன் கண்டான். அவர் ‘முன்னேறிச் செல்’ என்று அவனைப் பணித்தார். அவ் வார்த்தையை ஏற்று முன் தான் செல்வதைவிட அதிகமாகக் காட்டிற்குள் முன் சென்றான். அங்குச் சந்தன மரம் தென்பட்டது. அதை வெட்டிக் கொண்டுவந்து அதிக ஊதியம் பெற்றான். பெரியாருடைய வார்த்தை அவன் காதில் ஒலித்துக் கொண்டிருந்தது. எனவே காட்டிற்குள் இன்னும் அதிகமாக முன்னேறிச் சென்றான். முதலில் இரும்புச் சுரங்கங்கள், இன்னும் அதிகம் முன்போக, பித்தளைச் சுரங்கங்களும், வெள்ளிச் சுரங்கங்களும், தங்கச் சுரங்கங்களும் தென்பட்டனவாம்.

இக் கதையே யௌவன இந்தியாவுக்கு ஸ்ரீராமகிருஷ்ண பரம ஹம்ச தேவர் சொல்லியிருக்கும் அரும் உபதேசமாகும். முன்னேற வேண்டுமென்ற எண்ணம் நம்மைச் சதா கொள்ளை கொள்ளவேண்டும். முயற்சிக்குரிய பயன் நமக்குண்டு என்பதில் நமக்கு இடைவிடாத நம்பிக்கை வேண்டும். முயற்சியின்றி எக் காரியத்தையும் செய்ய முடியாது, எதையும் பெறமுடியாது. ஆதலால் சதா முயற்சிசெய்து முன்னேறுவோமாக!

பத்திரிகையின் வன்மையும் அதன் அவசியமும்.

திரு. மு. செல்லப்ப நாயனர் அவர்கள்

சமூக சீர்திருத்தங்களுக்கும், அறிவு வளர்ச்சிக்கும், அரசியல் முன்னேற்றத்திற்கும் பத்திரிகைகள் தகுந்த சாதனங்களாய் இருக்கின்றன. உலகக் கருத்துக்களையும் சம்பவங்களையும் பத்திரிகையின் வாயிலாகத் தெரிந்துகொள்ளுகின்றனர். பத்திரிகைகள் பல தேசத்தாரின் வீரத்தையும் அவர்களின் முற்போக்கையும் காட்டுவதோடு அரசியல் அநீதிகளையும் பகிரங்கமாக எடுத்துக் காட்டிப் பொது ஜனங்களின் எண்ணங்களையும் பலப்படுத்துகின்றன. மேலும் அரசியலை நல்ல நிலைமைக்குக் கொண்டுவருவதையும் விளக்கமாக எடுத்துப் போதிக்கின்றன.

பத்திரிகைகளின் சக்தி அபாரமானது. ஒரு மனிதனை ஆக்கமுள்ளவனாகவோ அல்லது ஆக்கமற்றவனாகவோ செய்யும் தன்மை பத்திரிகைகளுக்குண்டு. சுதந்திரம் பறிகொடுத்த நாட்டை சுதந்திரம் பெற்று வாழச்செய்யும் சக்தி பத்திரிகைகளுக்குண்டு. செய்ய முடியாத காரியங்கள் யாவையும் பத்திரிகைகள் சாதிக்கின்றன. க்ஷணப் பொழுதில் உலகத்தையே தாழ்த்தவும், நிமிஷ நேரத்தில் முன்னேற்றத்திற்குக் கொண்டுவரவும் கூடிய வன்மையைப் பத்திரிகைகள் பெற்றிருக்கின்றன.

உலகில் பல தேசங்களில் வாழப்பட்ட வீரர்களின் அறிவு வளர்ச்சியையும், அவர்களின் தியாகத்தையும், நன்மைக்கெனப் பாடுபடும் அம் மக்களின் கஷ்டத்தையும் எடுத்துக் காட்டி, மற்ற இதர தேசத்தில் வாழப்பட்ட மாந்தர்களின் உள்ளத்தில் ஊடுருவிச் சென்று, அவர்களின் வீரத் தன்மையை வெளிக்கிளப்பிப் பெரும் வீரத்தில் சிறந்த நாடாகச் செய்யும் முன்னேற்றத்தைப் பத்திரிகைகள் பெற்றிருக்கின்றன.

மிகவும் மேன்மையான கொள்கைகளுடனும் பெரும் நோக்கங்களுடனும் முன்னேற்றத்திற்கான வழியில் நடத்தப்படவேண்டிய பத்திரிகைகள், தற்கால விளம்பரத்திற்காகவும், வியாபாரத்திற்காக

வும், மதப் பிரிவுக்காகவும், தங்கள் தங்கள் சுயநலத்திற்காகவும், அவரவர்களுடைய கொள்கைகளை விரிப்பதற்காகவும், ஜனங்களுடைய பொது அறிவை அபிவிருத்தி செய்வதற்காகவும் பத்திரிகைகள் வெளியிடப்படுகின்றன.

சுதந்திரத்தோடு வாழப்பட்ட மக்களின் இடையே ஆயிரக்கணக்கான பத்திரிகைகள் வெளிக்கிளம்புகின்றன. ருஷ்யா தேசத்தில் உள்ள பெரும் பத்திரிகைகளின் லட்சக்கணக்கான பிரதிகள் ஒட்டகத்தின்மீதும், குதிரையின்மீதும் கொண்டுபோகப்பட்டு, கிராமவாசிகளுக்கு விநியோகம் செய்யப்படுகின்றது. என்ன முன்னேற்றம் பார்த்தீர்களா! எந்த விதத்தை எடுத்துக்கொண்டாலும் ருஷ்யா தேசம் ஒரு படி மேலாகவே இருக்கின்றது. இவையாவுக்கும் அந் நாட்டில் வெளிவரும் பத்திரிகையின் வளர்ச்சியினாலன்றோ?

இந்தியா பெரும் சேற்றில் ஆழ்த்தப்பட்ட ஓர் அடிமைத் தேசம். அத் தேசத்தில் வாழப்பட்ட மக்களோ அடிமை விலங்கால் பூட்டப்பட்டு இருக்கின்றார்கள். எழுதும் சுதந்திரமும், பேசும் சுதந்திரமும் தடைப்படுத்தப்படுகின்றது. இப் பெருங் கஷ்டத்தில் ஆழ்ந்தவரின் திக்கற்ற நிலைமையை எடுத்துக்கூற முன்வந்தால் சிறைவாசமும், தூக்கு மேடையும், தேசப் பிரஷ்டமும் தயாராய் இருக்கின்றது. இந்தியா தேசத்தை ஆட்சிபுரியும் நீதியை பகிரங்கமாக அயல்நாட்டாருக்கு எடுத்துக் காண்பிப்போமென்றால், அச்சுக்கூடத்தின்மீதும் பத்திராதிபர்மீதும் அரசாங்கம் ஓரே பாய்ச்சலாகப் பாய்ந்து பறிமுதல் செய்கின்றன. பாருங்கள், கல்கத்தாவில் வெளிவரும் "அட்வான்ஸ்" என்ற பத்திரிகையின்மீது பாய்ந்து ரூ. 2000 ஜாமீன் கொடுக்க வேண்டுமென்று சிங்கக் குரல் போட்டு கர்ஜித்தது. ஆகையால் எவ்வளவு எதிர்ப்பு வந்தபோதிலும் பத்திராதிபர்கள் தம் கொள்கைகளைத் தாராளமாக வெளியிடவேண்டும். தேச முன்னேற்றத்திற்கான வழிகளைத் தீவிரமாக எடுத்துக் காட்ட வேண்டும். நாங்கள் எங்கள் தேச முன்னேற்றத்திற்காக உடல், பொருள், ஆவி மூன்றையும் தியாகம் செய்வோம் என்ற வீர மொழியைப் பத்திராதிபர்கள் மென்மேலும் கையாண்டு வரவேண்டும்.

பத்திரிகைகள் நமது நாட்டில் அபிவிருத்தி யடையவில்லை. தேசத்தின் முன்னேற்றத்திற்குப் பத்திரிகைகள் உயிர் போன்றது என்பதை மறந்துவிட்டனர் போலும். பத்திரிகைகள் முன்னேற்றம் அடையாததற்குக் காரணம் தனவந்தர்களே யாகும். தனவந்தர்கள் முற்போக்கான விஷயங்களுக்குத் தலையிடுவது கிடையாது. அவர்களின் பணம் நல்ல வழியில் செலவு செய்வது கிடையாது. தேசத்திற்கென உயிர் விடும் பத்திரிகைகளுக்கு தக்க பொருளுதவி செய்வது கிடையாது. ஷை வகுப்பாளர்களில் ஒருவர் கொஞ்சம் முற்

பைந்தமிழ்ச் சோலை.

"உனை யொருத்திப் போட்டாளே வேலை யற்றுப்போய்."

"ஞானவினோதன்"

'வசைபாடக் காளமேகம்' என்னும் முதுமொழி நந் தமிழ் நாட்டு மக்களிடை இன்னும் பிராசீனமாகவே இருந்து வருகின்றது. தன்னை மதியாதவரை யெல்லாம் வசை நிரம்பிய வெள்ளைச் சொற் களா லடக்கிவந்தவர் இவர்.

போக்கில் வருவதைக் கண்டால் அவரை பிற்போக்கில் கொண்டு போய் தள்ளுவதற்குப் பக்கத்து பெரிய மனிதர்களென்று கிளம்பி விடு கிறார்கள். அவர்கள் எப்பேர்ப்பட்ட பெரிய மனிதர்களோ தெரிய வில்லை. உங்களைப் போன்ற தனத்தில் சிறந்தவர்கள் மேல் நாட்டில் என்ன செய்தார்கள், என்ன செய்கிறார்கள், என்ன செய்யப் போகி றார்கள் என்பதை அறிந்தீர்களா? கண்ணிருந்தும் குருடராய் இருப் பது உங்கள் பாரத நாட்டிற்கு அழகாகுமா? பெரியோர்களே! நமது நாடு முன்னேற்ற மடைவதற்கு முன் முனைந்து நில்லுங்கள்; தேசத் தைப் போற்றுங்கள். நமது மக்களும் நாமும் சுகம்பெறலாம்.

அரசாங்கத்தாரும் பத்திரிகைகளை முன்னேற விடாமல் தடுப்ப தற்கு அரசாங்க உத்தியோகஸ்தர்கள் மீசை மேல் கைவைக்கின்றார் கள். பாரத மக்களே! உங்கள் நாட்டில் இருக்கும் வறுமையைப் போக்க பத்திரிகைகள் தன் செயலற்று விழுந்து விடாமல், பொரு ளுதவிகளைத் தாராளமாய்ச் செய்யுங்கள். பத்திரிகைகளையும் பத்திராதி பர்களையும் நேசிக்க வேண்டும். பத்திரிகைகள் யாவும் நாட்டின் விடு தலைக்குப் பாடுபட வேண்டும். பத்திராதிபர் சிறைபுக நேரினும் அல்லது தூக்கு மேடையில் உயிர் போக்க நேரினும் அரசாங்கத்தின் அந்தரங்கங்களை பகிரங்கமாக எடுத்துக்காட்ட வேண்டும். பத்திரி கைகளின் சொந்தக்காரர்கள் பத்திராதிபர்களை ஆதரிக்க வேண்டும்.

சகோதர சகோதரிகளே!

உங்கள் பாரதநாடு சுதந்திரம் பெற வேண்டுமானால், உங்கள் மக்களின் வறுமையைப் போக்க வேண்டுமானால், எல்லாத் துறைகளி லும் உங்கள் நாடு முன்னேற்றமடைய வேண்டுமானால் "பாரதி"யை யும் "பாரதி" போன்ற பத்திரிகைகளையும் ஆதரியுங்கள்.

இவர் ஜாதியில் ஓர் வடம பிராமணர்; திருக் குடந்தை இவர் ஊர். தாசி மோகனாங்கியின்மீது கொண்ட மோகத்தால் இவர் வைணவ மதத்தைத் தவிர்த்து சிவபிரான் தொண்டி லீடுபட்டுவிட்டார்; காளி பராசக்தியின் முழு அனுக்கிரகமும் படைக்கப்பெற்றவர்; காளமேகம் இவர் பெயர். இவர் 'இம் மெனு முன்னே யெழுநூறு மெண்ணூறும், அம் மென்றா லாயிரம் பாட்டும்' பாடிவிடுவார். இருந்தா லிருப்பார்; எழுந்துவிட்டா ரானால் பெருங் காளமேகம் போன்று சற்றும் சலிக்காது பா மாரி வர்ஷித்துக்கொண்டே யிருப் பார். காளிதாஸனிவர்.

உண்ணாமுலை கோயில் ஸ்தானிகனா யிருந்த சம்பந்தாண்டான் ஒரு நாள் தன் தலையை முழுதும் வழவழவென்று மழுங்க சௌளம் பண்ணிக்கொண்டு வருகின்றான். அந்தச் சமயம் காளமேகக் கவியும் அவனெதிர் படுகின்றார். சம்பந்தாண்டான் தன் வித்தியா கர்வத் தால் கவியைக் கண்டும் மரியாதை யின்றி அவரை நோக்கி 'இவ் வூரின் பேரும் என் பேரும் நான் செய்துகொண் டிருக்கிற சௌள மும் அடங்க 'மன்' னென்றெடுத்து 'மலுக்கு' என்று முடியும்படி ஓர் வெண்பாவில் பாடவேண்டுமென்று கூறினான். கவி இவனை ஏளனம் பண்ணி இவன் கர்வத்தை அடக்கவேண்டுமென்று மனதில் கொண்டவராய் 'அருணகிரி பதியில் வாழும் சம்பந்தாண்டான் எங்கு தன் மனைவி தன் தலை மயிரைப் பிடித்திழுத்து, தலையில் குட்டுவளோ என்ற அச்சமேலிட்டு, அவ்வாறு செய்தல் முடியாத படி, தலையில் ஓர் மயிர்கூடவின்றி மழுங்க சௌளம் செய்துகொண்டு விட்டான்,' என்று பொருள் படும்படி,

'மன்னு மருணகிரி வாழ்சம்பந் தாண்டாற்குப்
பன்னு தலைச்சௌளம் பண்ணுவதேன்—மின்னின்
இளைத்த விடைமாத ரிவன்குடுமி பற்றி
வளைத் திழுத்துக் குட்டாமலுக்கு.'

என்று பாடி முடித்தார்.

திருமலைராயன் பட்டணத்தில் ஓர் சமஸ்தான வித்வான். பேர் அதிமதுர கவி. இவன் தானே மிக்க வித்வத்துவ முடையோன்' என்ற கரை தத்தி வழியும் செருக்கால் மற்ற புலவர்களை தனக்கு தண்டிகை சுமக்கும் இழி தொழில் புரியும்படி துன்புறுத்தி வந் தான். காளமேகம் இவனைப்பற்றி கேள்விப்பட்டுவிட்டு, இவன் தருக்கை வேறுடன் சாம்பராக்க எண்ணி அரசன் சன்னிதானத் திற்குச் சென்றான். அதிமதுர கவி சேஷ்டையால் புலவர்களொரு வரும் இவருக்கு இடந் தரவில்லை. அன்னை பரா சக்தியின் உதவி யால் அரசன் ஆசனமே விரிந்து இடம் கொடுக்க அதி லமர்ந்து

கொண்டார் காளமேக கவி. பின் சபையை ஒரு முறை நோக்கினார்; தன்னெதிரே யுள்ளவரை நோக்கி ‘நீங்கள் யார்’ என்று வினவினார். அதற் கவர்கள் ‘நாங்கள் சமஸ்தான கவிராஜர்கள்’ என்று இறுமாப்பு மிகுந்து பதிலளித்தார்கள். இவர்களை பங்கம் பண்ண ஓர் வழியும் தேடிவிட்டார் கவி. ‘புவிராயர் போற்றும் புலவீர்காள்! கவிராஜர் என்றீர்களே, உங்கள் ஜாதிக்குள்ளபடி கடவுள் கொடுத்த வாலெங்கே? நீங்கள் வாலில்லாக் குரங்குகளா? நீண்டு வளர்ந்த கூர்மையான நகங்க ளெங்கே? உங்களுக்கு நாலு கால்க ளிருக்க வேண்டுமே? அவை எங்கே? இதெல்லாம் போனாலும் போகட்டும். குரங்குகளுக் கிருப்பதுபோல் பீளை சார்ந்த கண்களெங்கே?’ என்று கவிராயர் என்பதற்கு குரங்கரசர் என்று இடக்கராகப் பொருள் படுத்திக்கொண்டு

வாலெங்கே நீண்டெழுந்த 1வல்லுகிரெங் கேநாலு
காலெங்கே 2யூன்வடிந்த கண்ணெங்கே—சாலப்
புவிராயர் போற்றும் புலவீர்காள்! நீங்கள்
கவிராய ரென்றிருந்தக் கால்.

என்று பாடினார். பின்னு மிவரை ஒருவரும் மதியாததால் அவ்வூரை நாசமாய்ப் போம்படி சபித்துவிட்டு ‘மதியாதார் வாசல் மிதியாதே’ என்றபடி அவ்வூரை எறிட்டும் பாராது வேறு ஊர் போய்ச் சார்ந்தார்.

புண்ணிய ஸ்தலங்களெல்லாம் சுற்றினார் கவி. கடைசியில் கும்பகோணம் வந்து அடைந்தார். அன்று அங்கு ஓர் சாமாராதனை. அதில் காளமேகமும் சாப்பிட்டுக்கொண் டிருக்கின்றார். அவருக் கெதிரே ஓர் முன் குடுமிச் சோழியன் சாமாராதனை போஜனம் பண்ணிக்கொண் டிருக்கின்றான். அவன் முன் குடுமி முடிச்சவிழ்ந்து உண்ணுமிலையில் விழுந்தது. சாப்பாட்டுச் சமயத்தில் எதிரே உட்கார்ந்துகொண் டிக்கின்றவரை முற்றிலும் மறந்துவிட்டான்; குடுமியை எடுத்து உதரிவிட்டு கட்டிக்கொண்டான். உதரினதில் சோழியன் எச்சிற் பருக்கை எதிரே யிருந்த காளமேகத்தி னிலையில் விழுந்தது: கோபம் பிறந்துவிட்டது கவிக்கு. உடனே அவனை நாயே, பேயே, குரங்கே என்று பலவாறு வைது

சுருக்கவிழ்ந்த முன்குடுமிச் சோழியா சோற்றுப்
பொருக்குலர்ந்த வாயா புலையா—திருக்குடந்தைக்
கோட்டானே நாயே, குரங்கே யுனையொருத்தி
போட்டாளே வேலையற்றுப் போய்.

என்று பாடினார்.

1, வல்லுகிர்-கூர்மையான நகம். 2. ஊன் வடிந்த கண்-பீளை சார்ந்த கண்.

ஆராய்ச்சி மேடை.

பாலிகா கல்பகம்.

ஆசிரியர்:—திரு. S. G. ராமானுஜலு நாயுடு.
வெளியிட்டவர்:—“அமிர்தகுண போதினி” ஆபீஸ்,
விலை அணா 6. 302, தங்கசாலை வீதி, மதராஸ்.

“பிரஜானுகூலன், அமிர்தகுண போதினி” ஆகிய இரு மாஸிகைகளின் மூலமாகவும், தனது நூற்கள் மூலமாகவும் தமிழர்களுக்கு நன்கு சேவை செய்துவருகிறார் அனுபவ ஞானியாம் திருமிகு S. G. ராமானுஜலு நாயுடு அவர்கள், அவருடை ஒப்பற்ற பேனா முனையிலிருந்து வெளிவந்திருக்கும் “ஆனந்த கதா கல்பகம்” என்ற ஆறு பெரிய வால்யங்களின் மூலம் தமிழ் நாட்டில் நன்கு பிரசித்திபெற்றிருக்கிறார். இவருடைய வாக்கியங்கள்தோறும் அனுபவத் தேன் சொட்டுகின்றது. நடை வசீகரமானது. இவரைப்போன்று அனுபவ ஆசிரியரை நாம் கண்டதுமில்லை; கேட்டதுமில்லை.

“**பாலிகா கல்பகம்**” என்ற நூல் சிறு பெண்களுக்காகவே எழுதப்பெற்றது. இதில் போதனைகள் நிறைந்து 100 தலைப்புகள் கொண்டிருக்கின்றன. 222 விடுகதைகளும் அவைகளின் விடுவிப்புகளுமிருக்கின்றன. ஒவ்வொரு சிறுமியும் அவசியம் படிக்கவேண்டிய நூல். பெயருக்கேற்ப விஷயங்களும் அமைந்திருக்கின்றன.

பொதுவுடைமைத் தத்துவங்கள்.

வெளியிட்டவர்:—குடி அரசுப் பதிப்பகம், ஈரோடு.
விலை அணா 3.

பொதுவுடைமைத் தத்துவங்கள் இந் நூலில் வினா விடை ரூபமாக விளக்கப்பெற்றிருக்கின்றன. 1917-ம் வருஷத்திய ருஷியப் புரட்சியைப்பற்றியும் ஸ்ரீமான் லஸ்கி எழுதிய பொதுவுடைமையைப் பற்றியும் இந் நூலில் எழுதப்பெற்றிருக்கிறது.

பொதுவுடைமைத் தத்துவங்களைப்பற்றி அறிய ஆவலுள்ளவர்கள் இந் நூலை வாங்கி வாசிப்பார்களாக. புதிய விஷயங்கள் என்ன? எப்படி என்பதைத் தமிழ் மக்கள் அறிய ஆவல் கொள்ளவேண்டும்.

ஆசிரியக் குறிப்புகள்.

ஆசிரியரது அறிக்கை

இனிமேல் மாதா மாதம் தவறாது சிறு கதைகள் வெளிவரும். ஒவ்வொரு பக்கங்களின் அடியில் ஆப்த மொழிகள் தோன்றும். கிராமத்திலிருந்து இப் பத்திரிகை தோன்றுவதால், சில தருணங்களில் தாமதத்தைச் சந்தாதாரர்கள் பொருட் படுத்தாதிருக்க வேண்டுகிறோம்.

சோமசுந்தர பாரதியார்

மதுரை நகர் அட்வோகேட்டும் தமிழறிஞரும் ஆராய்ச்சியாளரும் இனிய பெரிய பிரசங்கியாருமான ஸ்ரீமான் சோமசுந்தர பாரதியா ரவர்கள் தேசாபிமானமும் பாஷாபிமானமும் மிக்கவர். ஆங்கிலத்திலும் எம்.ஏ., பி.எல். (M.A., B.L.) பட்டம் பெற்றவர். தமிழர்கள் இவருக்கு எவ்வளவோ கௌரவம் அளித்திருக்க வேண்டும். தமிழர்கள் தவறிவிட்டார்கள். ரவீந்திரநாத் தாகூர் சாந்தி நிகேதனம் விஸ்வ பாரதியில் (International University) தமிழ் ஆசிரிய பதவியை ஏற்றுக்கொள்ள வேண்டுமென இவரை நாம் சில வருடங்களுக்கு முன்பு கேட்டோம். அதற்கு, சாந்தி நிகேதனத்திற்குத் தமிழர் தக்கபடி பொருளுதவி செய்யவில்லை யாகையால், அங்கு தமிழ் ஆசிரிய பீடம் ஏற்படுத்தவில்லை யென்று வருத்தத்துடன் தெரிவித்தார். முன்னால் சிதம்பரம் அண்ணாமலை சர்வ கலாசாலையின் அதிபர், திருமிகு பாரதியா ரவர்களை தமிழ் பேராசிரிய பதவியை வகிக்குமாறு கேட்டுக்கொண்டதாக அறிகிறோம். பாரதியார் மறுத்துவிட்டாராம். இப்பொழுது அண்ணாமலை சர்வ கலாசாலையார் அங்கு தமிழ் ஆசிரிய பதவியை திரு. பாரதியா ரவர்களுக்குக் கொடுக்க முன் வந்து அவரை வேண்டியிருக்கிறார்கள். இச் சமயத்தில் இவர் இப் பதவியை ஒப்புக்கொண்டு தமிழ்த் தாய்க்கும் தமிழர்களுக்கும் நல்ல தொண்டு செய்யும்படியாக இவ்வறிஞரை நாம் மிக மிக அன்புடன் கேட்டுக்கொள்கிறோம். அண்ணாமலை பல்கலை கழகத்தாரும் தமிழாசிரிய பீடத்தை ஆங்கில ஆசிரிய பீடத்திற்குச் சமமாக கௌரவத்தாலும் சம்பளத்தாலும் உயர்த்துவார்களென்று பெரிதும் நாம் எதிர் பார்க்கிறோம்.

பொறுப்பாசிரியரது பிரயாணம்

பர்மாவில் வாழும் தமிழன்பர்கள் "பாரதி"யை அதிகமாக ஆதரிப்பதாக அறிகிறோம். ஆனதுபற்றி "பாரதி"யின் பொறுப்பாசிரியர் திரு. சுப்ரமண்ய மவர்களை பர்மாவிற்கு அனுப்பியுள்ளோம். அங்கு வதியும் "பாரதி" அபிமானிகள் அனைவரும் அருமை "பாரதி"க்கு எல்லா வழிகளிலும் உதவி புரியுமாறு கேட்டுக்கொள்கிறோம். அவருக்குச் செய்யும் உபசாரங்களும் உதவிகளும் எமக்குச் செய்ததாகக் கருதப்படும்.

மறுபடியும் தனது மனைவியை மணத்தல்

திருவாங்கூரில் வைக்கத்தில் தனக்கு ஏற்கெனவே இரு மனைவிகளிருக்கும்பொழுது, மூன்றாவதாகவும் ஒருத்தியை ஒரு நம்பூதிரிப் பிராமணன் மணக்க வேண்டினான். வயதின் காரணத்தாலும் மற்றக் காரணங்களாலும் அநேக ஜனங்கள் இம் மணத்தை மறுத்தார்கள். லட்சுமி விலாச வாலிப சங்கமானது இம் மனிதன் மூன்றாவது மணத்திற்கு விரோதமாக விருந்தது. எவ்வளவு பேர் எவ்வளவு எவ்வளவு சொல்லியும் இப் பிராமணன் கேட்கவில்லை. முகத்தை மூடிக்கொண்டே விவாக காலத்தில் பெண் இருப்பது அவர்களுள் வழக்கமாக இருப்பதால், எதிர்க் கட்சியார் பலரும் ஒன்று சேர்ந்து, முதலாவது மனைவியையே புது மணப் பெண் போன்று சிங்காரித்து முக்காடிட்டு மணத்திற்கு ஆஜர் செய்தார்கள். நம்பூதிரி ஒன்றும் சந்தேகியாது கல்யாணம் செய்துகொண்டான். கடைசியில் தனது முதல் மனைவியையே மணந்துகொண்டதாக அறிந்தான்.

மாதர்களுக்கு ஆண்களைப் போன்று சம அந்தஸ்து எல்லா விஷயங்களிலும் கிடைக்க வேண்டுமென்று உலகத்தின் பற்பல தேசங்களிலுள்ள மாதர்கள் போராடிக்கொண்டு வரும்பொழுது, இந்தியாவில் மாதர்களை அடிமைகளிலும் அடிமைகளாகத் தாழ்த்தி வைத்திருப்பது கேவலம்—மகா கேவலம்! நம் தேசத்துப் பெண் மக்களை அடிமைப்படுத்தி வைத்திருக்கிற வரையில், நமது பாரத மாதா அடிமைப் பட்டவளே என்று நாம் ஒவ்வொருவரும் நன்கு அறிதல் வேண்டும். நம்போன்று எல்லா வகைகளிலும் சிறந்து விளங்கும் பெண்மணிகளை அடக்குவதற்கு ஆண்களுக்கு என்ன உரிமை உண்டு? ஆண்கள் மாதர்களுக்குச் செய்யும் கொடுமைகளை—அநீதிகளை நினைத்து தேவி பாரதி கண்ணீர் விடுவது கங்கையாகவும் சிந்துவாகவும் ஓடுகிறது.

ஹரிஜன சேவை

நமது தேசத்திலுள்ள சுமார் 8 கோடி ஹரிஜனங்களுக்கு நாம் சமத்துவம் கொடுக்கா திருக்கும்பொழுது, அயலாரைப் பார்த்து

எங்களுக்குச் சுதந்திரம் கொடுங்கள் என்று கேட்பது எவ்வளவு கேவலம்! நமது ஒடுக்கப்பட்ட சகோதரர்களுக்கு நாம் கொடுமைகள் செய்துகொண் டிருக்கும்பொழுது நமது தேசாபிவிருத்தி என்பது பகற் கனவே யாகும். கோவில்களில் சம உரிமைகள் கொடுப்பதைப் பின்னால் பார்க்கலாம். முதலாவது அவர்களுக்குக் கல்வி கொடுங்கள். அப்பால் அவர்களுக்குத் தங்கள் நிலை தெரியும். "அறியாமையே எல்லாப் பாதகங்களுக்கும் காரணம்" என்று புத்த பகவான் கூறி யிருக்கிறார். அவர்களுடைய தெருக்களை நீங்கள் கூட்டுவதைக் காட்டிலும், அவர்களே சுத்தத்தின் மகிமையை யறியும்படியான கல்வியை அவர்களுக்கு அளிக்க முன் வாருங்கள். தொண்டர்களே, இச்சா சேவகர்களே, ஹரிஜனங்களான நமது சகோதரர்களுக்குக் கல்வியைப் புகட்ட முன் வாருங்கள்!

இலங்கை நிலை பரிதாபம்

இலங்கை இந்தியாவிற் கடுத்துள்ள, இராமாயணத்தில் விவரிக்கப்பெற்ற, இந்து மகா சமுத்திரத்தின் முத்து என்று போற்றப் பெற்ற இலங்கை முன்னை நாளில் சீரும் சிறப்பும் பெற்றிருந்தது. இப்பொழுது இதன் நிலை என்ன? இதன் திரண்ட செல்வமெங்கே? குபேர சம்பத்தெங்கே? சரித்திர சம்பந்தமான பெருமை எங்கே? எல்லாம் அழிந்து தேசமே அடிமையாய்ப் போய்விட்டது. காரணம் என்ன? இலங்கை அரசாட்சி அயல்நாட்டினரது கையிலிருக்கிறது. இலங்கை பரிபாலனம் நாட்டு விருத்திக்கு உதவியா யிருக்கவில்லை. உள் நாட்டில் வேற்றுமைத் தீ வளர்ந்துகொண்டிருக்கிறது. ஜனத் தலைவர்களிடையே பொறாமை பொங்கிக்கொண்டிருக்கிறது. இக் காரணங்களால் பண்டைப் பெருமை பெற்ற இலங்கை தாழ்வடைந்துகொண்டிருக்கிறது.

வங்க விளக்கு அணைந்தது

சுயநலத்தைக் கவனிக்காது பரநலத்தைக் கருதி உழைத்து வந்தவர்களை உடல் பொருள் ஆவி மூன்றையும் தியாகம் செய்யும் தியாகமூர்த்தி என்று புகழுவது சாதாரண வழக்கமாய்விட்டது. இப் பெருமைக்குரிய தியாக ராஜாக்கள் எங்கோ எப்பொழுதோ தோன்றுகிறார்கள்.

இந்திய தேசீய வங்க வீரன் உத்தம தேசாபிமானி ஸ்ரீமான் சென்குப்தா ஜூலை 22உ சனிக்கிழமை இரவு 1-45 மணிக்கு, தேகாரோக்கியத்தை முன்னிட்டு கவர்ன்மெண்டு பாதுகாப்பில் வைக்கப்பெற்றிருக்கும் பொழுது ராஞ்சியில், இரத்தக்கொதிப்பின் மிகுதியால் ஏற்பட்ட வலிப்பால் திடீரென்று மரணமடைந்த செய்தியை

அறிந்து மட்டற்ற துக்கமடைகிறோம். காங்கிரஸ் ஆணையின்படி நின்று, சர்வ சங்கப் பரித்தியாகம் செய்த உயர்திரு. யதீந்திர மோகன் சென் குப்தா அவர்கள் மாண்ட துக்கம் இந்திய மக்கள் அனைவரது மனத்தையும் பிளக்கும். அவருடைய மரணம் பாரத நாட்டிற்கு ஈடுசெய்துகொள்ள முடியாத மகத்தானதோர் நஷ்டமென்பது யாவருக்கும் நன்கு தெரியும். தன்னை உற்பவித்த தாய்நாட்டின்மீது அன்பும் அபிமானமும் கொண்ட குற்றத்திற்காகச் சிறையி லடைக்கப்பெற்று, நோய்வாய்ப்பட்டு வருந்தினார் என்பது இந்தியரனைவருக்கும் தெரியும். ஆ! பாரத தேவி தனது உத்தம புத்திரர்களுக்கு எவைகளைச் சன்மானங் கொடுக்கிறாள்? வறுமை, கஷ்டங்கள், நஷ்டங்கள், தடியடி, சிறைவாசம், வியாதி, கடைசியில் சாவு. காலங்கடந்த தேச பக்தர்கள் எவ்வளவு கஷ்டப்பட்டு மாண்டார்கள் என்பதை நினைக்குங்கால் உள்ளம் கொதிக்கின்றது. தேச பக்தர் சென்ற வழியே சென்று சென் குப்தாவும் நமது பாரத அன்னையில் கலந்துவிட்டார்.

வங்க நாட்டில் உயர்குடியில் பிறந்து, செல்வமாய் வளர்ந்து, தக்க கல்வி பெற்று, அயல் நாடு சென்று பாரிஸ்டர் பட்டம் பெற்று, ஆங்கில மாதைக் காதல் கல்யாணம் செய்து, தன் நாடு திரும்பித், தனது தொழிலால் அதிக திரவியம் சம்பாதித்து, தேச பக்தியின் காரணமாக ஒத்துழையாமைப் போராட்டத்தில் சேர்ந்து, சிறைவாசம் பெற்று, தேசபந்து தாஸருக்கு வலக்கரம்போன்று விளங்கி, கல்கத்தா கார்ப்பொரேஷன் மேயராக இருமுறை தெரிந்தெடுக்கப் பெற்று, மீண்டும் 6 மாத தண்டனையடைந்து வெளிவந்து மீண்டும் தண்டனை பெற்றார். காந்தி—இர்வின் ஒப்பந்தத்தால் வெளிவந்த பிறகு இங்கிலாந்துக்கு, சுகத்தின் காரணமாகச் சென்று, இந்தியாவிற்குத் திரும்புகையில் பம்பாயில் 1818ஹு 3-வது ரெகுலேஷன்படி விசாரணையின்றி ராஜாங்கக் கைதியாக வைத்திருந்தனர். நோயின் காரணமாகக் கல்கத்தா ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றும் குணமாகாதது கண்டு, ராஞ்சி என்ற ஊரில் சில நிபந்தனைகளுடன் ஓர் பங்களாவில் வசிக்குமாறு அனுமதிக்கப் பெற்றிருக்கும் காலத்தில் தான் அவர் மாண்டார்.

கல்கத்தாவில் கூடிய 43-வது இந்திய தேசீயக் காங்கிரஸின் வரவேற்புச் சபைத் தலைவராக அவர் இருந்து, மிக உருக்கமாகவும் உறுதியாகவும் பேசி, பிரிட்டிஷ் ஆட்சியின் தவறுகளை எடுத்துக் காட்டினார். இந்தியரனைவரும் ஓர் குலம், ஓர் இனம், ஓர் தாயின் மக்கள் என்ற உணர்ச்சியுடன் கூடிய தேசீய மதம் நம் தேயத்தில் உண்டாக்கப் பாடுபடவேண்டுமென்று அவர் கூறிய பொன்னுரைகளை நாம் சிரமேற்கொள்ளுகிறோம்.

தனது குபேர வாழ்வை விடுத்து, வறுமையை ஆலிங்கனம் செய்து, மாளிகையில் வசித்த இவர் சிறைக்கூடத்திற்கு சென்று, தான் காதல் மணம் செய்துகொண்ட ஸ்ரீமதி நெல்லி கிரே என்னும் மேனாட்டு மங்கையையும் பாரத அன்னையின் சேவைக்கு அனுப்பிச் சிறை செல்லும்படி செய்து, வக்கீல் தொழிலையும், தேடிய பொருளையும், வாழ்வின் வசதிகளையும், அடைந்த பதவிகளையும், கௌரவங்களையும், கொண்ட காதல் மனைவியையும், உடல் நலத்தையும் ஒருங்கே தியாகம் செய்து, கடைசியில் தனது இன்னுயிரையும் தனது அன்னைக்கு அர்ப்பணம் செய்துவிட்டார். அரசியல் கைதியாகவே அவர் உயிர் நீத்தாரென்றால் அவருடைய அருமை பெருமைகளைச் சொல்லவும் வேண்டுமோ? அவருடைய அகால மறைவால் வங்காளம் ஒரு அரிய பெரிய தலைவரையும், பாரத தேசம் ஒரு உயர்ந்த தேசாபிமானியையும், இந்திய சீர்திருத்த உலகம் ஒரு சிறந்த தலைவரையும், இந்திய வக்கீல் உலகு ஒரு சாமர்த்திய வக்கீலையும், உலகம் ஒரு தியாகியையும் இழந்து தவிக்கிறது.

காங்கிரஸ் சீர்கெட்டு, நிலைகுலைந்து, குறைவுபட்டுத் தோன்றும் இத் தருணத்திலா பாரத ரத்னமாகிய சென்குப்தாவை இழப்பது? இவரை இனி எங்கு காண்போம்? இவரைப் போன்று அஞ்சா நெஞ்சுபடைத்த தேசாபிமான சிங்கத்தை இனி எப்பொழுது காண்போம்? ஒப்பற்ற தேசபக்தி, புத்திக்கூர்மை, மனோதைரியம், தியாக உணர்ச்சி, சீர்திருத்த நோக்கம் இவைபோன்ற அநேக அரிய குணங்களும் அமையப்பெற்ற இவ் விலை மதிக்கொணா மாணிக்கத்தை இனி என்று காண்போம்? திருமிகு. குப்தாவின் வீரமும், தீரமும், தியாகமும், தொண்டும் பாரத மக்களுக்கு சிறந்த முன்மாதிரிகளாகவும் வழிகாட்டிகளாகவு மிருக்கின்றன.

நாம் இவரது அடிச்சுவடுகளைப் பின்பற்றி, இவர் செய்துவிட்டுப்போன காரியங்களை முடிப்பதே நமது கடமையாகும். இவருடைய தர்மபத்தினி நெலி குப்தாவுக்கும், இவருடைய புத்திரர்களுக்கும் நமது அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்ளுகிறோம். இவருடைய ஆத்மா சாந்தி அடைவதாக.

ஓம் சாந்தி சாந்தி!

[illegible]ரியர் ரா. சுப்ரமண்யம் அவர்களால்,
[illegible] ஆனந்தா பிரசில், அச்சிட்டு வெளியிடப்படுகிறது.

197890

நமது புதிய பிரசுரங்கள்

வெளிவந்துவிட்டன!　　வெளிவந்துவிட்டன!!

சோவியத் ருஷியா.

பண்டித ஜவஹர் லால் நேரு எழுதிய ஆங்கில நூலின்
நேரான தமிழ் மொழிபெயர்ப்பு.

"தமிழ் நாடு" ஆசிரியர்

டாக்டர் P. வரதராஜுலு நாயுடு அவர்களின்

முகவுரையுடன் கூடியது.

கோட்டியும் தொண்டமானும் பிச்சைக்காரனும் பிரபுவும்
ஏற்றத் தாழ்வில்லாமல் குபேர வாழ்வு வாழுகின்ற

சோவியத் ருஷியாவை அறிய இதுவே முதல் சந்தர்ப்பம்.

விஷயத்தை விளக்க கண்ணைக் கவரும் 21 ஆப்டோன்
படங்களுடன் கூடிய

ஆர்ட் & கிளேஸ் பதிப்பு　　விலை ரூ. ***1—4—0.***

தபாற் செலவு வேறு

ராட்டூர்-
-வீரன்-

துர்க்கா தாஸ்.

(சரித்திர சம்பந்தமான ஓர் தேசீய நாடகம்)

வங்காள மஹாகவி பாபு துவிஜேந்திர லால் ராய்
எழுதியது.

அவரது நாடகங்களத்தனையிலும்

இத் துர்க்கா தாஸே முதன்மையானது.

ஆரம்ப முதல் இறுதி வரை
அற்புதம்! ஆச்சர்யம்!! ஆனந்தம்!!!
தேசபக்தி ததும்புகிறது! சத்தியம் ஒளிர்கிறது!!
ஆவேச நடை! அலங்கார பாஷை!!
மயிர் சிலிர்க்குஞ் செயல்கள்!!!

கிரௌன் 1/4 சைஸ்

380 பக்கங்கொண்ட புத்தகம் 1-க்கு விலை ரூ. 1—4—0.

தபாற் செலவு வேறு.

பாரதிப் புத்தகாலயம், உத்தமபாளையம்.